நகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: இருபத்திநான்கு+II=26

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 19 ஞாயிற்றுக்கிழமை (02.05.2010)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 157

# அரசாங்கத்துக்கு ஆதரவு நல்குமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு

## நேற்றைய மேதின விழாவில் வைத்து

கொழும்பு,மே2

மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கும் நாட்டின் அபிவிருத்திக்காக உழைப்பதற்கும் அரசாங்கத்துக்கு ஆதரவு - ஒத்துழைப்பு - நல்குமாறு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று கொழும்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மே தின விழாவில் வைத்தே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்தார்.



நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் கடந்த முப்பது வருடங்களாகப் பெரும் தடையாக இருந்த போரை முடிவுற வைத்தாயிற்று. இப்போது நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்குமான பாதை திறக்கப்பட்டாயிற்று.

பயங்கரவாதம் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. இனிமேல் சகல அரசியல் கட்சிகளும் கைகோர்த்து நாட்டின் நலனுக்காகப் பணியாற்றும் காலம் கனிந்துவிட்டது.

கட்சி அரசியலைப் புறந்தள்ளிவிட்டு நாட்டின் வளர்ச்சிக்காக எல்லாத் தரப்புகளும் ஒன்றிணைந்து செயலாற்றும் காலம் வந்துள்ளது.

கடந்த காலத்தில் எதிர்க்கட்சிகள் பல

(24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையின் முதலாவது கூட்டம் புதனன்று

கொழும்பு,மே2

புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது என அமைச்சரவைச் செயலாளர் சுமித் அபேஷிங்க அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் மாலை 6 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறும் என்றும் -

அக்கூட்டத்தில் வைத்து புதிய அமைச்சர்களுக்கான பொறுப்புக்கள் மற்றும் அரசின் எதிர்காலச் செய்றறிட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி தெளிவுபடுத்தவுள்ளார் எனவும் அபேசிங்க தெரிவித்துள்ளார். (ஓ-206)

## ஈழத் தமிழருக்குரிய அரசியல் தீர்வு விவகாரம் குறித்து மன்மோகன், சோனியாவுடன் கருணாநிதி இன்று பேச்சு

புதுடில்லி,மே2

இலங்கைத் தமிழருக்கான அரசியல் தீர்வு விவகாரம் குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோருடன் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி இன்று கலந்துரையாடவுள்ளார்.

ஆளும் தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரி.கே.எஸ். இளங்கோவன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இன்று டில்லியில் நடைபெறும் திட்டக்குழுவின் கூட்டத்தில் பங்குபற்றும் பொருட்டு அங்கு செல்லும் முதலமைச்சர் கருணாநிதி, பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கிறார். பேச்சுக்களின்போது, இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்துக் கருணாநிதி எடுத்துக் கூறவிருக்கிறார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு காலிமுகத்திடல் கடற்பிரதேசம் திடலாக நிரப்பப்பட்டு நவீன நகராகும்

### 500 ஏக்கரில் கட்டடத் தொடர், பூங்காக்கள்

கொழும்பு,மே2

கொழும்பு காலிமுகத்திடலில் இருந்து கடலை நோக்கிய சுமார் இரண்டு கிலோ மீற்றர் வரையான பிரதேசம் திடலாக நிரப்பப்பட்டு அங்கு சகல வசதிகளும் கொண்ட வர்த்தக நகரம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

கொழும்பு தெற்குத் துறைமுக எல்லையிலிருந்து பம்பலப்பிட்டி வரையிலுமான கடற்பிரதேசம் திடலாக மாற்றப்பட்டு ஐநூறு ஏக்கர்கள் வரையிலான விஸ்தீரணத்தைக்

(24ஆம் பக்கம் பார்க்க)

## எமது சந்ததியினர் செய்த தியாகத்தின் பயனை இழக்கும் நிலைக்கு நாம் தள்ளப்படக் கூடாது

### யாழ்.நகரில் நடந்த மேதினக் கூட்டத்தில் மாவை சேனாதிராஜா

யாழ்ப்பாணம்,மே2

இன்றைய சந்ததியினர் எமது இனத்தின் அடையாளத்தை தாங்கிப்பிடிக்க அணிதிரளத் தயாராக வேண்டும். இல்லையேல் எமது இனம் இதுவரை செய்த தியாகம் தோற்றுப் போய்விடும். தியாகத்தின் பயனை இழக்கும் நிலைக்கு எமது இனம் தள்ளப்பட்டுவிடக் கூடாது.

இவ்வாறு கூறினார் மாவை சேனாதிராஜா எம்.பி.

இலங்கை தமிழரசுக்கட்சியின் மேதினக் கூட்டம் நேற்று மாலை யாழ்.மார்ட்டீன் வீதியிலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

விவசாய சங்கங்களின் சம்மேளனத் தலைவர் செ.இலகுநாதனின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் விசேட உரை நிகழ்த்தும்போது மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

(02ஆம் பக்கம் பார்க்க)

## மே தின நிகழ்வுகள் சோபை இழந்தன!

கொழும்பு,மே2

தலைநகர் கொழும்பில் மே தினத்தை ஒட்டிய பேரணிகள், கூட்டங்கள் இன்றி மே தினம் சோபை இழந்திருந்தது.

மே தினத்தை ஒட்டி வழமை போன்று பேரணிகள் எவையும் கொழும்பில் நடைபெறவில்லை.

ஜே.வி.பி சார்பான தொழிற்சங்கங்களின் கூட்டமும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கூட்டமும் மட்டுமே

(24ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தின் கொடூரத்தால் கிழக்கில் 49ஆயிரம் பேர் விதவைகளாயினர்

### அவர்களில் 25 ஆயிரம் பேர் இளம் வயதினர்

கொழும்பு,மே2

யுத்தம் ஏற்படுத்திய பாதிப்பின் காரணமாகக் கிழக்கு மாகாணத்தில் 49 ஆயிரம் விதவைகள் உள்ளனர் என்றும், அவர்களுள் 25 வயதுக்கும் குறைந்த பெண்கள் சுமார் 25 ஆயிரம் பேர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

25 வயதுக்கும் குறைந்த விதவைப் பெண்களுள் சுமார் 12 ஆயிரம் பேர் மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட குழந்தைகளின் தாய்மார்கள் என்றும், சிறார்கள் மற்றும் மகளிர் மேம்பாட்டு அமைச்சரான திஸ்ஸ கரலியத்த தெரிவிக்கிறார்.

அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அமைச்சர் கரலியத்த யுத்தம் காரணமாக அநாதைகளாகிக் கைவிடப்பட்ட நிலையிலுள்ள சிறார்கள் மற்றும் மகளிர் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும். அத்துடன்,

(24ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் போரில் இராணுவத்தின் வெற்றியை ஆராய பாக்.உயர்பாதுகாப்பு அதிகாரிகள் வருகை

கொழும்பு, மே02

இலங்கை இராணுவம் வன்னியில் மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கையின் வெற்றி தொடர்பாக அறிந்து கொள்வதற்காக, பாகிஸ்தானின் பாதுகாப்பு அதிகாரிகள் கொண்ட உயர்மட்டக் குழு இலங்கை வந்துள்ளது.

பாகிஸ்தானின் இராணுவ, கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளையும் சேர்ந்த மூத்த அதிகாரிகள் கொண்ட குழு இலங்கை வந்துள்ளது.

பாகிஸ்தான் விமானப்படையைச் சேர்ந்த நடீம் அன்யூம் தலைமையிலான இக்குழு விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை - போர் - குறித்து மிக விரிவாக ஆராய்ந்தது.

இக்குழுவினர் இராணுவத் தலைமையகத்தில் இராணுவத்தளபதி லெப்டினட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவைச் சந்தித்து வன்னி நடவடிக்கையின் வெற்றி குறித்து கேட்டறிந்தனர்.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவையும் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர். (அ-1)

கல்வனைஸ்ட் கூரைத் தகடுகள்
Five Star Brand
G.I. ROOFING SHEETS
6 அடி தொடக்கம் 10 அடிவரை பெற்றுக்கொள்ளலாம்
Jeysons Trading Company
123, Maha Vidyalaya Mawatha, Colombo - 13,
Contact No: 0777410503.

## பிரபாகரனின் தமிழீழம் என்ற கொள்கைக் கருவை உயிர்ப்பிக்கும் முயற்சியில் புலம்பெயர் தமிழர்கள்

### ஆனையிறவு நிகழ்வில் கோத்தபாய தெரிவிப்பு

கொழும்பு,மே2

விடுதலைப் புலிகள் அமைப்பு போர் ரீதியில் தோல்வி கண்டுள்ள போதிலும், புலம்பெயர் தமிழர் தரப்பு வெளிநாடுகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களது உதவிகளைப் பெற்று, பிரபாகரனின் தமிழீழ எண்ணக்கருவை மீண்டும் உயிர்ப்பிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆனையிறவில் நிறுவப்பட்டுள்ள போர் வீரர்களுக்கான நினைவுச் சின்னத்தைக் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைத்த நிகழ்விலேயே கோத்தபாய மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இந்தச் செயற்பாடுகளை அடியோடு நிறுத்தி முடக்கிவிடுவது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு மற்றும் புலனாய்வுப் பிரிவுகள் ஒருங்கிணைந்து செயற்படும் விதத்தில் இப்போது விசேட புலனாய்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் வெளியுறவு அமைச்சு மற்றும் புலனாய்வுப் பிரிவுகளுக்கும் மிக முக்கிய பொறுப்பு உள்ளது. இது

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திக்கின் அபாரமான துடுப்பாட்டத்தால் 'இந்துக்களின் போர்' சமநிலையில் முடிந்தது

யாழ்ப்பாணம்,மே2

பார்வையாளர்களுக்கு விறுவிறுப்பை ஏற்படுத்திய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - கொக்குவில் இந்துக் கல்லூரிகளின் 'இந்துக்களின் போர்' பெரும் துடுப்பாட்டப் போட்டி வெற்றிதோல்வியின்றி முடி வுற்றது.

நேற்றுமுன்தினம் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 76 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களை இழந்திருந்த நிலையில் பவிந்தன் - கார்த்திக் இணை களத்தில் நின்றிருந்தபோது ஆட்டம் முடிவுக்கு வந்தது.

நேற்று நடைபெற்ற இரண்டாம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடிய பவிந்தன் கார்த்திக் ஜோடி அபாரமாக ஆடியது. இதில் கார்த்திக் 72 பந்து களில் 57 ஓட்டங்களைப் பெற்று அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்ஸில் 43.5 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது. இது யாழ்.இந்துக் கல்லூரி பெற்ற ஓட்டங்களிலும் 5 ஓட்டங்கள் அதிகமா கும். பவிந்தன் 44 பந்துகளில் 24 ஓட்டங் களைப் பெற்று சொந்துரனின் பந்தில் ஆட்டமிழந்தார். இறுதியாட்டக்காரரான பிரதீஸ் நிலைமை அறிந்து கார்த்திக்குடன் பொறுமையாக ஆட கொக்குவில் இந் துக் கல்லூரி 164 ஓட்டங்களைப் பெற்ற போது கார்த்திக் செந்தூரனின் பந்தில் ஆட்டமிழந்து சென்றார். பிரதீஸ் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பில் பந்துவீசிய நிரூஜன் 16 ஓவர்கள் பந்துவீசி 52 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட் டுக்களையும் சிவந்திரன் 8.5 ஓவர்கள் பந்து வீசி 33ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

முதலாவது இன்னிங்ஸில் 5 ஓட்டங் கள் பின்தங்கியிருந்த யாழ்.இந்துக் கல்லூரி இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. ஆரம்ப வீரரான் கிருஷோபன் 40 பந்துகளை எதிர்கொண்டு 31 ஓட்டங்களையும் பார்ததீபன் 20 ஓட்டங்களையும் செந்தூரன் 16 ஓட்டங்களையும் சஜீகன் 12 ஓட் டங்களையும் பெற்றனர்.

இந்நிலையில் 49 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களை யாழ்.இந்துக் கல்லூரி பெற்ற போது இரண்டாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இதனால் இப்போட்டி வெற்றிதோல்வி யின்றி முடிவுக்கு வந்தது. கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் பந்துவீசிய பிரதீஸ் 15 ஓவர்கள் பந்துவீசி 10 ஓட்டமற்ற ஓவர்களுடன் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்துக்களின் போரில் ஆட்டநாயகனாகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் உப அணித்தலைவர் கார்த்திக் தெரிவானார்.

சிறந்த பந்துவீச்சாளராக இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை வீழ்த்திய பிரதீஸ் தெரிவானார். சிறந்த களத் தடுப்பாளராக யாழ்.இந்துக் கல்லூரியின் வீரர் நிரூஜன் தெரிவானார். (6-86)









வடக அநுசரணை உதயன்

படங்கள் நேசன், கரன்










கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 'இந்துக்களின் போர்' இறுதிநாளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் ஏ.அகிலதாஸ், யாழ்.இந்துக் கல்லூரியின் அதிபர் வீ.கணேசராஜா, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஈ.எஸ்.பி.நாகரட்ணம் ஆகியோர் உரையாற்றுவதையும் சிறந்த களத்தடுப்பாளராகத் தெரிவுசெய்யப்பட்ட நிரூஜனுக்கு பணப்பரிசிற்கான காசோலையை கொக்குவில் இந்து அதிபர் வழங்குவதையும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வீரர் ஒருவருக்கு பதக்கம் அணிவிப்பதையும் இரு கல்லூரிகளின் அணித் தலைவர்களிடம் வெற்றிக்கிண்ணம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# எமது சந்ததியினர் செய்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது எமது சூழலில் நிலவுகின்ற அச்ச நிலையைப் போக்கி எமது இலட்சியங்களை அடைவதற்கு இளைஞர்கள் அனைவரும் எமது கட்சியுடன் இணைய வேண்டும். இளைஞர்களிடம் பொறுப் பைக் கொடுக்கத் தீவிரமாக யோசித்து வருகின்றேன். நாடாளுமன்றப் பொறுப்பிலிருந்து விலகி வேறு வழியில் செயற்படுவதற்குக் கடந்த வருடமே எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் வன்னிப் போர் இத்தனை தூரம் மோசமாக முடிந்த தாலேயே மீண்டும் நான் இத் தேர்தலில் போட்டியிட வந்தேன்.

நாம் அடுத்ததாகச் செய்ய வேண்டியது என்ன? இளைஞர்கள் எமது கட்சியில் இணைவதற்கு, இன்று எமது கட்சியில் இருப்பவர்கள் தமது சந்ததியினரை இணைக்க வேண்டும். அதுதான் ஒரே அடிப்படை வழி.

### நிலங்கள் விலைபோகின்றன

இராணுவமயம், சிங்களமயம், அவற்றை விட நவீன வர்த்தகத்துக்குக் கூடாக எமது நிலங்கள் விலைபோய்க் கொண்டிருக்கின்றன. எமது மண்ணுக்குள்ளே நடக்கும் இந்த நிலையை அறியாமல் பலர் இன்று 'ரிவி' நிகழ்ச்சிகளால் ஈர்க்கப்பட்டவர்களாக இருந்து வருகின்றார்கள்.

### எம்மவர்கள் திண்டாட்டம்

சிறிதாவது நாம் விழிப்படைய வேண்டும். இன்று ஏ9 பாதை திறக்கப்பட்ட பின்னர் என்ன நடக்கிறது. இந்தத் தெருக்களை எல்லாம் பாருங்கள். யாருடைய வியாபாரப் பண்டங்கள் குவிக்கப்பட்டுள்ளன? எமது உற்பத்தியாளர்களுக்கு என்ன நடக்கிறது? ஏற்கனவே இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்களுக்கு உற்பத்திச் செலவை பெற்றுக்கொள்ள முடியாமல் அவர்கள் திண்டாடுகின்றார்கள்.

இன்று விலைவாசியின் நிலை என்ன? ஏதோ யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் தமது பிள்ளைகள் வெளிநாடுகளில் படாதபாடு பட்டு - சொல்லெணாத் துன்பப்பட்டு உழைத்து அனுப்பும் பணத்தில் தமது வாழ்வை நகர்த்திச் செல்கின்றனர்.

இருந்தாலும் அந்தப் பிள்ளைகளின் ஆதரவு எமக்குத் அதிகமாகத் தேவைப்படுகிறது. எமது இனத்துக்காக அங்கே போராட அவர்கள் ஆயத்தமாக உள்ளர்கள். அது அந்த நாட்டு சட்டத்திட்டத்திற்கு அமைவானதாக இருக்கும்.

நாம் இப்போது போராட்டத்திற்கு வாருங்கள் என்று அழைக்கவில்லை. பொருளாதார வளர்ச்சியில் உச்ச நிலையில் உள்ள நாடுகளின் பொருளாதாரம் இன்று ஏழை நாடுகளுக்குள் குவிக்கப் பட்டு வருகின்றது.

வடக்கு, கிழக்குப் பகுதி முழுவதும் வாக்களிப்பு மிகவும் குறைவாக இருந்தபோதும் தமிழரசுக்கட்சி வெற்றி பெற்றிருக்கிறது. இதன் மூலம் சிங்கள அரசுத் தலைமைக்கும் வெளிநாட்டு சக்திகளுக்கும் தமிழ் மக்கள் சில விடயங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

### எமது இனமும் நிலமும் சூறையாடப்பட்டு வருகின்றது

எமது சமூகம் விழித்தெழ வேண்டும். எமது இனமும், நிலமும் சிங்கள பேரின வாதத்தால் சூறையாடப்பட்டு வருகின்றன.

அத்துடன், எமது பகுதியில் மூடப்பட்ட பெரிய தொழிற்சாலைகள் எவையும் மீளத் திறக்கப்படவில்லை. புதிய தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை. இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் வங்கிகள், நிதி நிறுவனங்கள் குவிக்கப்படுகின்றன. இவையும் எமது வளங்களை சுரண்ட முற்படுகின்றன.

உள்ளூர் உற்பத்திகள் ஊக்குவிக்கப் படவேண்டும். ஆனால் அப்படி ஏதும் இடம்பெறவில்லை. அரசும் அரசு சாந்தவர்களும் எமது வளங்களைச் சுரண்டிவருகின்றனர்.

பலாலி விமானத்தளத்தை உள்ளடக்கிய பகுதிகள் விவசாய உற்பத்திகளுக்கு மிகவும் ஏற்ற நிலப்பரப்பு. அது தொடர்பாக அரசும் அமைச்சர்களும் கதைத்தார்களா என்றால் இல்லை. இதே போன்றுதான் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் நிலையும். முருகைக் கற்பாறைகள் அகழப்படுவதனால் பல்வேறு விதமான சுற்றாடல் பிரச்சி[னை]கள் ஏற்படும். இவை தொடர்பாக இந்தியப் பிரதமருக்கும் வலியுறுத்தியிருந்தோம்.

தொழிலாளர் வர்க்கம் சுதந்திரமாக நடமாடமுடியாத சூழ்நிலையும் சுதந்திரமாக உழைக்க முடியாத நிலைமையும் உள்ளன.

வேலைவாய்ப்பு வழங்குகிறோம் எனக் கூறி வேலையற்ற பட்டதாரிகளை மூளைச் சலவை செய்து அவர்களை - இளைஞர்களை - தமிழ் இனவிரோத செயற்பாடுகளுக்குத் துணைபோகத் தூண்டுகின்றனர்.

எமது வளத்தைப் பயன்படுத்தி, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொழில்துறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் இந்த இழிநிலைக்கு முடிவுகட்டப்படும் - என்றார்.

இந்நிகழ்வில் நடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ்.சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் மற்றும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் பலரும் உரை நிகழ்த்தினர்.

மேதினக் கூட்டத்தில் யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். (ஓ-14-16)

## மறவன்புலோ மக்களின் பிரச்சினைகள் அரச அதிகாரிகள் நேரில் ஆராய்வு

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளை இனங்காண்பதற்காக மாவட்ட திணைக்கள அதிகாரிகள் அங்குள்ள மக்களைச் சந்திக்கவுள்ளனர்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மறவன்புலோ பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் திணைக்கள அதிகாரிகள் மக்களைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ஒரு நாள் முழுவதும் அதிகாரிகள் மக்களை சந்திப்பதுடன் அவர்களின் தேவைகளை உடனுக்குடன் பார்வையிடவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி செல்லையா



மாதகலைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி செல்லையா நேற்றுமுன்தினம் (30.04.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையாவின் (காவலாளி, அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்) பாசமிகு மனைவியும், தவமணிதேவி, புஸ்பராணி, தங்கராசா, திலகராணி, மனோரஞ்சிதம், ரஞ்சனா ஆகியோரின் அன்புத்தாயும், தர்மராஜா, கண்ணதாசன், கமலலோஜினி, கமலேந்திரம், சண்முகவேல், ஜீவமோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மார்க்கண்டு, செல்லமணி, காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் விஜயரட்ணம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கபில் மற்றும் சுபீதரன், பிரக்ஷனா, விஜயராஜ், சரண்ஜா, சோபிஜா, ராகவி, சிந்துஜன், நிஜாந்தன், கிஜாந்தன், சாரங்கன், தெய்வீகா, ஆதவன், மிலானி, ஹனுஜன், ஹரிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கபிலின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.05.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பிள்ளைகள்,
மருமக்கள்.

செட்டிச்சோலை,
அளவெட்டி வடக்கு.

(96574)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனுக்கு ஊறுவிளைவிக்கக் கட்டவிழ்ந்த அராஜகம்!

## நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இதேநாளில் நிகழ்ந்த பயங்கரம்...!!

இன்று மே 2 ஆம் திகதி. உதயனுக்கு மட்டுமல்ல உலக ஊடகத் துறையினரும் மறக்கமுடியாத - நினைக்க முடியாத அந்தப் பயங்கரம் நிகழ்த்தப்பட்ட நாள். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இதே தினத்தில் இரவு வேளையில் (02.05.2006) உதயன் அலுவலகத்துக்குள் நுழைந்த கொலை வெறி கொண்ட ஆயுதக் கும்பல் ஒன்று நடத்திய வெறியாட்டத்தில் - கொடூரத்தில் உதயன் ஊழியர்கள் இருவரின் உயிர்கள் பறிக்கப்பட்ட நாள். இருவர் முடமாக்கப்பட்ட நாள்.

உதயனை முடக்குவதற்காக அந்தக் கும்பல் நிகழ்த்திய மிக மோசமான தாக்குதலில் உதயன் ஊழியர்கள் இருவரின் உயிர்கள் பறிக்கப்பட்டது மட்டுமல்லாமல் மற்றும் இருவர் காயமடைந்தனர். கணனிப்பிரிவு, இயந்திரப்பகுதி என்பனவும் மிக மோசமான சேதத்துக்குள்ளாகின. இந்தச் சம்பவத்தில் ஆசிரியர்பீட முக்கிய உறுப்பினர்கள் உட்பட பல ஊழியர்கள் உயிர் ஆபத்திலிருந்து தப்பியமையும் குறிப்பிடத்தக்கது.




சுரேஷ் ரஞ்சித் ரஜிவர்மன் சுகிர்தராஜன் பாஸ்கரன்

ஊடக சுதந்திரத்திற்காகக் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக இரவு 7 மணிக்கு இலங்கையின் பல்வேறு ஊடகவியலாளர்களும் ஒன்றுகூடி தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் விதத்தில் ஐக்கியப்பட்டு மெழுகுதிரி தீபங்களை ஏற்றி தமது பணியின் மீதான பற்றுறுதியை வெளியிட்ட அதே சமயம் உதயன் அலுவலகத்துக்குள் ஆயுததாரிகளின் துப்பாக்கிகள் கனன்றிருந்தன.

சர்வதேச ஊடக சுதந்திர தினத்துக்கு முதல் நாள் முன்னிரவில் இந்தச் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் நான்கு ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இலங்கையில் ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் எதிரான - படுமோசமான - குரூர தாக்குதல்களில் பெரும்பாலானவை தமிழ் ஊடகங்களுக்கு எதிராகவே புரியப்பட்டு வந்துள்ளன. அந்த வகையில் ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைப் பிரதிபலித்து, அவர்களின் இலட்சியத்தை முன்னிலைப் படுத்திவரும் உதயன் பல்வேறு இன்னல்களைக் கடந்த இரண்டு தசாப்த கால வரலாற்றில் சந்தித்திருக்கிறான். உதயனின் பற்றுறுதியை - திடசங்கற்பத்தை மழுங்கடிக்கச் செய்யவே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மரணங்கள் மலிந்த பூமியில் - கொடூர யுத்தத்திற்கு மத்தியில் தன்னுடைய பணியைக் கடந்து வந்திருக்கும் உதயனுக்கு இந்த இழப்புக்கள், துன்பங்கள், கஷ்டங்கள் கணக்கற்றவை. உதயனின் கடந்த காலத்தை எடுத்து நோக்குபவர்களுக்கு ஒரு விடயம் நன்கு தெளிவாகப் புரியும்; புலப்படும். ஈழத்தமிழர்களின் கருத்தியலைப் பிரதிபலித்து வரும் உதயனுக்கு அவன் சார்ந்த மக்களைப் போன்றே அனுபவங்கள் கிட்டின.



தனது மக்களைப் போலவே அவனும் சளைக்காமல் அதே மனஉறுதியோடும், உத்வேகத்தோடும், எழுந்து நின்றான். புத்துயிர் பெற்றான்; புது எழுச்சி கொண்டான். அதே வீரத்தோடு - வீறாப்போடு - வீச்சோடு - விவேகத்தோடு தமிழர் தம் நியாயத்தையும் தமிழ்த் தேசியத்தின் உரிமையையும் முரசறைந்தான். தமிழர்களின் உரிமைக்குரலாகத் தொடர்ந்தும் உலகெங்கும் முழங்கினான்.

இதனை விரும்பாத - பொறுத்துக் கொள்ள இயலாத சில சக்திகள் உதயனை முடக்கப் பல்வேறு வழிகளிலும் திட்டமிட்டன. ஜனநாயகத்தின் பெயரால் அரசியல் போர்வைக்குள் மறைந்து கொண்டிருந்து ஆயுதங்களுடன் அராஜகம் நடத்தும் ஒரு கும்பல் உதயனைப் பலவீனப் படுத்தி பணியவைக்கும் கைங்கரியங்களை மேற்கொண்டமை அனைவருக்கும் தெரிந்த விடயம். அந்தக் கைங்கரியங்கள் குண்டுத்தாக்குதல்கள், ஆயுத மிரட்டல்கள், அநாமதேய அறிக்கைகள் என பல்வேறு வடிவங்களில் அரங்கேற்றப்பட்டதை இலகுவில் உதயன் வாசகர்கள் மறந்துவிடமாட்டார்கள்.

உதயன் மீது ஆரம்பித்த இந்த ஊடக அடக்குமுறை இன்று இலங்கை முழுவதும் வியாபித்து இலங்கையின் ஊடக சுதந்திரத்தை கேள்விக் குறியாக்கி ஒட்டுமொத்த ஊடகத்துறையையும் படுபயங்கரத்துக்குள் தள்ளிவிட்டிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்று.

ஆரம்ப காலம் தொட்டு உதயன் மீது ஆரம்பித்த அடக்குமுறை படிப்படியாக, பின்னர் வேகம் கொண்டு வெவ்வேறு வடிவங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டன. 1990களில் இந்த நிலை மேலும் மோசமடைந்தது.

உதயன் மீதான இந்த அடக்குமுறைகளுக்கு காரணம் அவன் மக்களின் குரலாகத் துணிந்து நின்று குரல் கொடுத்தமையே. யாழ்ப்பாண மக்களுக்கு ஏற்படும் இன்னல்களை - துன்பங்களை தனக்குள்ள அச்சுறுத்தலையும் ஒரு பொருட்டாகக் கருதாமல் உதயன் உண்மையுடன் வெளிச்சத்துக்கு கொண்டு வந்ததை பொறுக்க முடியாத - சகிக்க முடியாத சில சக்திகளே இந்த அடக்குமுறையைப் புரிந்தன என்பது வெட்டவெளிச்சம்.

உதயன் மீதான மிக மோசமான அடக்குமுறை 21.08.1999 இல் ஆரம்பித்தது. அன்றைய தினம் உதயனில் உள்ள அச்சு யந்திரங்களை சேதப்படுத்துவதற்காக அப் பகுதி மீது நன்கு திட்டமிட்டு 'கிரனேட்' தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தமக்குச் சாதகமான செய்திகளைப் பிரசுரிக்காமையால் ஆத்திரம் கொண்ட அரசியல் கட்சியின் ஆயுதக் கும்பல் ஒன்று உதயன் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு இந்தத் தாக்குதலை மேற்கொண்டமை குடாநாட்டு மக்கள் அறியாததொன்றல்ல.

இதன் தொடர்ச்சியாக உதயன் மீது பல்வேறு அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

20.05.2000 - உதயனுக்கு அரசினால் 'சீல்' வைக்கப்பட்டது. 45 நாள்கள் இந்தத் தடை தொடர்ந்தது.

06.05.2001 - உதயன் முகாமையாளர் கே.நந்தகுமார் இராணுவ வாகனத்தால் மோதப்பட்டுக் கொல்லப்பட்டார்.

23.06.2001 - உதயன் பிரதம ஆசிரியர் ஆயுதக்குழு ஒன்றின் வாகனத்தால் மோதப்பட்டு கடுமையான காயங்களுக் குள்ளானார்.

23.08.2005 - உதயனின் கொழும்பு, வெள்ளவத்தையில் உள்ள அலுவலகம் மீது 'கிரனேட்' வீசப்பட்டது.

24.01.2006 - உதயன் திருகோணமலைச் செய்தியாளர் எஸ்.சுகிர்தராஜன் சுட்டுக்கொல்லப்பட்டார்.



02.05.2006 - உதயன் அலுவலகத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள் நடத்திய வெறியாட்டத்தில் உதயனின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பஸ்ரியன் ஜோர்ச் சகாயதாஸ் (வயது36), விநியோக ஊழியர் ராஜரட்ணம் ரஞ்சித்குமார் (வயது25) ஆகியோர் கொல்லப்பட்டனர். மேலும் இரு ஊழியர்கள் காயமடைந்தனர். தாக்குதலில் கணனிப்பகுதி முற்றாக நாசமானது.

15.08.2006 - உதயன் அலுவலகச் சாரதி எஸ்.பாஸ்கரன் (வயது 47) வாகனத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

18.08.2006 - உதயன் அச்சுத்தாள் களஞ்சியம் இனந்தெரியாதோரால் எரியூட்டப்பட்டது.

29.04.2007 - உதயன் அலுவலகச் செய்தியாளர் எஸ்.ரஜிவர்மன் இனந்தெரியாத ஆயுததாரிகளால் வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

17.11.2007 - உதயன் ஊழியர் வி.நிமலராஜா இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார்.

24.03.2009 - இரவு 11 மணியளவில் உதயன் ஆசிரியரின் வதிவிடத்தை நோக்கி 'கிரனேட்' வீச்சு.

25.06.2009 - குடாநாட்டின் மூன்று நாளேடுகளும் யாழ். நகரில் வைத்து இனந்தெரியாதோரால் தீ வைப்பு.

29.06.2009 - உதயன் ஊழியர்களை உடன் பணியில் இருந்து விலகுமாறு கொலை அச்சுறுத்தல்.

07.07.2009 - உதயன் முகவர்கள், பிரதேச செய்தியாளர்கள் ஆகியோருக்கு அச்சுறுத்தல் கடிதம்.

இவை உதயன் எதிர்கொண்ட அடக்கு முறைகளில் முக்கியமானவை. இதனை விட அடக்கு முறையின் மற்றொரு உச்சக்கட்டமாக உதயன் - சுடர் ஒளிப் பத்திரிகைகளின் ஆசிரியர் என். வித்தியாதரன் 26.02.2009 அன்று கொழும்பு கல்கிசைப் பகுதியில் வைத்து கடத்திச் செல்லப்பட்டார். அந்தக் கடத்தல் பின்னர் அரசினால் கைது என அறிவிக்கப்பட்டது. தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்த போதும் அதனைப் பொருட்படுத்தாமல் தமிழ் மக்களின் பிரச்சினையைத் துணிச்சலுடன் இடித்துரைத்தமைக்காக அவருக்கு இந்தக் கதி நேர்ந்தது என்பது அனைவரும் அறிந்த - தெரிந்த விடயம். புலிகளுடன் தொடர்பைப் பேணினார் என்ற பொய்க் குற்றச்சாட்டின் பேரில் கடத்திக் கைதான அவர் குற்றம் எதுவும் நிரூபிக்கப்படாமையால் நீதிமன்றத்தினால் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

இதன் பின்னர் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் அரச புலனாய்வுத் துறையினரால் கசியவிடப்பட்ட கண்காணிப்புக்குள்ளாகியிருக்கும் ஊடகவியலாளர் பட்டியலில் ஆசிரியர் என். வித்தியாதரன், உதயன் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றிருந்தன. இந்தப் பட்டியல் விவகாரம் இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச நாடுகளிலும் பெரும் பரபரப்பை ஏற்படத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஊடக அடக்குமுறை 1999ஆம் ஆண்டு உதயன்மீது மேற்கொள்ளப்பட்ட 'கிரனேட்' தாக்குதலுடனேயே முழுவீச்சில் ஆரம்பித்தது. பின்னர் அது உதயன்மீது அடிக்கடி தொடர்ந்தது. இப்போதும் தொடர்கிறது. ஆனால் இன்று அது உதயனுக்கு மட்டுமல்ல இலங்கையில் உள்ள ஒட்டுமொத்த ஊடகத் துறைக்குமே.

உதயன் மீதான ஊடக அடக்கு முறைகள் கட்டவிழ்த்துவிடப் பட்டபோதெல்லாம் அது பற்றி விசாரிப்பதற்கு உதயனுக்கு வரும் வெளிநாட்டு ராஜதந்திரிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள் அனைவருக்கும் ஒரு விடயத்தை சுட்டிக் காட்ட உதயன் ஆசிரியர்பீடம் தவறவில்லை. இந்த அடக்குமுறை விரைவில் தென்னிலங்கை ஊடகங்களின் மீதும் பாயும் என்பதை உதயன் ஆசிரியர் பீடத்தினர் அவ்வப்போது மேற்குறிப்பட்டவர்களிடம் சுட்டிக்காட்டி வந்தனர். அதே போல அந்த நிகழ்வுகள் இப்போது கண்முன்னே தென்னிலங்கையிலும் அரங்கேறியிருக்கின்றன. 'சன்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க நட்டநடு வீதியில் வைத்து சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். பிரபல இணையத்தளம் ஒன்றின் ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு மிக மோசமாகத் தாக்கப்



பட்டார். 'சிரச', 'ரூபவாகினி' ஊடகங்களின் அலுவலகங்கள் தாக்கப்பட்டன. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கடத்தப்பட்ட பிரபல சிங்கள ஊடகவியலாளர் எக்னலி கொட இதுவரை விடுவிக்கப்படவில்லை. சுதந்திர ஊடக இயக்கத்தின் தலைவர் சுனந்த தேசப்பிரிய, சிங்கள படப்பிடிப்பாளர் புத்திக வீரசிங்க, 'ராவய' ஊடகவியலாளர் மஞ்சுள வெடிவர்த்தன ஆகியோர் உயிர் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

### அவதானி

இலங்கையின் ஊடகத்துறை மிக மோசமான அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாகச் சர்வதேச ஊடக அமைப்புக்கள் தொடர்ந்து அறிக்கைகளை வெளியிட்ட வண்ணம் உள்ளன. பேராபத்தான நிலையில் இலங்கையின் ஊடக சுதந்திரம் எனத் தெரிவித்து நேற்று முன்தினம் அமெரிக்காவின் சுதந்திர இல்லம் என்ற அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆயுதங்களின் துணையுடன் அரசியல் செய்யும் ஒட்டுக்குழு உதயன் மீது ஆரம்பித்த இந்த அடக்குமுறை இப்போது இலங்கையின் ஒட்டுமொத்த ஊடகத்துறையின் மேலும் விழுந்திருக்கிறது. அதனை இலங்கையின் ஒட்டுமொத்த ஊடகத்துறை எவ்வாறு எதிர் கொள்ளப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

எனினும் உதயனின் உதிப்பின் நோக்கமும், அவனின் இயக்கத்தின் வீச்சும், செயற்பாட்டின் தார்ப்பரியமும், கொள்கைப் போக்கின் இலக்கும் மிக உயர்ந்தவை. அன்றும், இன்றும் என்றும் மக்களின் குரலாக ஒலித்து, அவர்களின் மனங் களில் நிறைந்திருக்கும் உதயனுக்கு ஊறுவிளைவிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பலிக்கவில்லை. அதனால் அவன் என்றும் உயர்ந்து நிற்க எமது மக்கள் - வாசகர்கள் - கை கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை உண்டு. அதுவே உதயனின் உயிர்ப்பும் ஆகும். ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை தமிழரசுக்கட்சியின் மேதினக் கூட்டம் நேற்று மாலை யாழ். மாட்டின் வீதியில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் விவசாய சங்கங்களின் சம்மேளனத் தலைவர் செ.இலகுநாதன் தமிழரசுக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறிதரன், மாவை.சேனாதிராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: தமிழினியன், உமா, ரட்ணம்)


## தேவை

கணனித் தட்டச்சு (Tamil Typing) மற்றும் அசைவூட்டல் (Animation) துறைகளில் பணியாற்றுவதற்கான ஆளணி தேவை:
அடிப்படை கணனித்தகைமையுடன் (Flash) அனுபவமுடையவர்கள் தொடர்பு கொள்ளவும்.

T.P: 0777769751
Tamilambu @ Yahoo.com

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரில் இருந்து 2 Kmக்கு உட்பட்ட பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு : 0772205931

## CAT to your future in finance & Accounting
CERTIFIED Accounting Technician

G.C.E. O/L தகுதி / 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் → CAT (CBE, PBE) → ACCA → MBA / DEGREE B.Sc (Hons) UK-6 months

நன்மைகள்
1) இலங்கை உட்பட 150 நாடுகளில் அங்கீகாரம்.
2) விரும்பிய முறையில் பரீட்சை வசதிகள் (CBE, PBE)
3) ACCA - Srilanka, UK, British Council இன் அங்கீகாரம்.
4) இலவச நூலக வசதி
5) கற்கைகள் / பரீட்சைகள் யாழ் நகரில் நடைபெறும்.
6) பல்வேறு கருத்தரங்குகளில் கலந்துகொள்ளும்வாய்ப்புகள்.
7) மாணவர்களின் வசதி கருதிய நேர அட்டவணை.

மேலதிக விபரங்களுடன் தொடர்புகளுக்கு :-

யாழ்ப்பாணம்
Mr. N. Sujeevan
Asst. Coordinator,
Jaffna Technical Institute,
No. 46, Clock Tower Road,
Jaffna
021-5670345

தென்மராட்சி
Mr. A. Vasutheva,
Asst. Coordinator,
Karampuvil North,
Chavakachcheri.
077-2935509

வடமராட்சி
Mr. S.Amalathas
Asst. Coordinator,
Nugnvil,
Karaveddy South, Karaveddy.
077-6258034

புதிய மாணவர்களுக்குரிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.


# வலி.மேற்கு அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், மே 2

வலி.மேற்கு பிரதேச அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இன்று ஞாயிறு முற்பகல் 10மணிக்கு வட்டு.உப அலுவலகத்தில் பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் நடை பெறும்.

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்ட சனசமூக நிலையங்களின் தலைவர், செய லாளர், பொருளாளர், முன்பள்ளி ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், பொது அமைப்புக்களின் தலைவர்கள், உறுப்பினர்களை இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.

இதில் 'மகநெகும' அபிவிருத்தியின் கீழ் தெரிவுசெய்யப்படவுள்ள 'கொங்கிறீட்' வீதி தொடர்பாகவும் முடிவு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை புதிய வீதி ஒன்றும் திறந்து வைக்கப்படவுள்ளது. என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-302)

# யாழ். பல்கலையில் இன்று உளச்சார்புப்பரீட்சை

யாழ்ப்பாணம், மே 2

மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் இணையவழி கணனி இளமாணிப் பட்டத்திற்கான அனுமதி உளச்சார்புப் பரீட்சை இன்று காலை யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப்பட்டப் பரீட்சை அலகின் பரீட்சை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் அறிவித்துள்ளார். எனவே பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் உரிய ஆவணங்களுடன் காலை 9.30 மணிக்கு வெளிவாரிப்பட்ட அலகின் பரீட்சை மண்டபத்துக்குச் சமுகமளிக்குமாறும் துணைவேந்தர் கேட்டுள்ளார்.

(ஒ-6)

# நாவாந்துறையில் 'பண்டார வன்னியன்'

வண்ணை, மே2

நாவாந்துறை, புனித - நீக்கிலார் ஆலய திருநாள் கொண்டாட்டத்தைச் சிறப்பிக்கும் முகமாக இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு ஏழு மணிக்கு 'பண்டார வன்னியன்' சரித்திர தென்மோடி நாட்டுக் கூத்து ஆலய வளா கத்தில் மேடை ஏறவுள்ளது.

'கலைமாமணி' அண்ணாவியார் கிறகர கிறிஸ்தோப்பரின் நெறியாள்கையில் உருவான இந்நாட்டுக்கூத்தில் யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கலைஞர்கள் பங்கேற்கவுள்ளனர்.

(ஒ-160)


## கடை வாடகைக்குண்டு

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 0773510511


## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 19 * 08 * 1939



உதிர்வு 02 * 04 * 2010

அமரர் சின்னத்தம்பி சின்னத்துரை

கடந்த 02.04.2010 வெள்ளிக்கிழமை அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் சின்னத்தம்பி சின்னத்துரை அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து, உடன் வந்து உதவியோருக்கும், மரணச் சடங்குவரை நின்று எமக்கு சகல வழிகளிலும் உதவியோருக்கும் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்து எமக்கு அவ்வேளையில் ஆறுதல் கூறிய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல.06, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 1505

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கணேசரத்தினம் பவளமலர்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசரத்தினம் பவளமலர் அவர்கள் நேற்று (01.05.2010) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும், முத்தையா - அன்னமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கணேசரத்தினத்தின் பாசமிகு மனைவியும், அமரர் செல்வராசா, அருந்த வமலர் ஆகியோரின் பாசமிகு அன்புச் சகோதரியும், சோமசுந்தரம் (பிரான்ஸ்), சிவகுமார், அமரர் இராசரத்தினம், அருந்தவமலர் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், சகிலா (சுவிஸ்), சுதாஜினி, சுதாகர் (ராசன்), சயிக்குமார் (குட்டி), றதினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசுந்தரகாந்தன் (சுவிஸ்), சுரேஸ்குமார், ஸ்ரீறஜனி, கொலின் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதர்சன், சுபீசன், ஸ்ரீசுதன், ஸ்ரீசுகந்தன், அன்ரனி நிசான், சுபீஜனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழலை தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
மகன்மார்
(ராசன், குட்டி.)

## மரண அறிவித்தல்

### செல்லையா சபாரட்ணம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்)



67, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா சபாரட்ணம் நேற்று (01.05.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-பொன்னம்மா தம்பதிகளின் மூத்தமகனும் காலஞ்சென்ற பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் லோகேஸ்வரன் (ஜேர்மனி), வரதராணி, லோகேந்திரன், கோமகள், செல்வமகள் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற தியாகராஜா, காலஞ்சென்ற சிந்தாமணி மற்றும் சோமாஸ்கந்தன் (கனடா), காலஞ்சென்ற தனபாலன், காலஞ்சென்ற குஞ்சிதபாதம் மற்றும் தில்லைநடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

67, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (97510)

தகவல்:
கோமகள் (மகள்).


SHAMROCK
சுச்சமோட்டை, யாழ்
O/L DAY CLASS
(மீண்டும்பரீட்சை எடுப்பவர்களுக்கு)
ENGLISH PAPER CLASS
(திறமைச் சித்திக்காக)
Gr.1 முதல் O/L வரை
ENGLISH MEDIUM
Gr.6 - 9
I.C.T. செயன்முறைகளுடன்
புலமைப்பரிசில் Gr.5
(567226)




கிருபா லேணர்ஸ்

❖எழுத்துப் பரீட்சைக்காண முழுமையான தயார்ப்படுத்தல்
❖தனித்தனி கவனிப்பு
❖செயன்முறை பரீட்சைக்கு நீண்டகாலப் பயிற்சி





அரச அங்கீகாரம்பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை
விரைந்து செயற்படும் வல்லமை
தலைமைக் காரியாலயம்: 26, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4353, 0777225292
கிளை: மகாத்மா வீதி, நெல்லியடி, 021 3006550.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் அநாதையாய்க்கிடக்கும் கீரிமலைக் கேணி

இந்து மக்கள் பிதிர்க்கடன்களைக் கழிப்பதற்கு கீரிமலையைக் கடந்த பல வருடங்களாகப் பயன்படுத்தி வந்தார்கள். இந்த வகையில் கீரிமலை இந்து மக்களுடன் இரண்டறக்கலந்து



காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இப்பிரதேசத்துக்கு பொதுமக்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

அதனால் இந்து மக்கள் பிதிர்க்கடன்களைக் கழிப்பதில் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியதுடன் யாழ்.குடாநாட்டின் வேறு பல பகுதிகளிலும் பிதிர்க்கடன்களைக் கழிக்கும் நிலை உருவானது.

குறிப்பாக வில்லூன்றி, கோப்பாய், கோம்பயன் மணல் கேணி மற்றும் வேலணை சாட்டி, வடமராட்சி என பல இடங்களிலும் உள்ள கடற்கரைகளுக்கும் சென்று இந்தப் பிதிர்க்கடன்களை நிறைவேற்றி வந்தார்கள்.

என்னதான் இருந்தாலும் பிதிர்கடன்களைக் கழிப்பதாக இருந்தால் கீரிமலைக்குச் சென்று அவற்றை நிறைவேற்றும் போதே உறவுகளின் மனம் திருப்தியடையும்.

உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த போதிலும் இன்று கீரிமலை செல்வதற்கான தடைகள் நீக்கப்பட்டுள்ளன. ஆனால் அங்கு செல்லும் மக்களுக்கான அடிப்படை வசதிகள் என்பதுதான் பெரும் கேள்விக் குறியாக உள்ளது.

கீரிமலையில் பிதிர்க்கடன் செய்வதற்கான மண்டபம் புனரமைக்கப்பட்டுள்ள போதிலும் இந்த மண்டபத்தில் உரிய மின்சார வசதிகள் இன்மையால் இருட்டான சூழ்நிலை காணப்படுகின்றது. ஒரு பகுதியில் இயற்கையான வெளிச்சம் கிடைத்தாலும் ஏனைய பகுதிகளுக்கு வெளிச்சம் போதுமானதாக இல்லை. குறிப்பிட்ட மண்டபத்திற்கு உடனடியாக மின்சார வசதி வழங்க வேண்டியது அவசியமானதாகும்.

மறுபுறத்தே பிதிர்க்கடன் கழிக்கச் செல்பவர்கள் தமது அவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையே காணப்படுகின்றது. இங்கு செல்பவர்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கடைகள் எவையும் இப்பகுதியில் இல்லை.

படைத்தரப்பினரின் கடை இருந்தாலும் அங்கு பிதிர்க்கடன் கழிப்பதற்குத் தேவையான பொருள்கள் இல்லை. முன்னர் இந்தப் பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட தேனீர்க்கடைகளும், அதே போன்று பலசரக்கு உட்பட பிதிர்க்கடன் கழிப்பதற்கு வேண்டிய பொருள்களை விற்பனை செய்யும் கடைகளும் காணப்பட்டன.

இன்று கடைக் கட்டடங்கள் யாவும் உடைந்த நிலையில் காணப்படுகின்றன. அவசர தேவைக்கு ஒரு பனடோலைக்கூடப் பெற முடியுமா என்பதும் கேள்விக்குரியதே.

தென்னிலங்கை சுற்றுலாப்பயணிகள் உட்படபொதுமக்களுடைய எண்ணிக்கை கீரிமலையில் அதிகரித்துக் காணப்படுகின்றது. இங்கு மக்களுடைய தேவைகளும் கூட அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனை நிறைவு செய்யும் பொருட்டு தேனீர்க் கடைகளும், பலசரக்குக்கடைகளும் இங்கே ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

இவற்றை அமைப்பதற்கான அனுமதி நன்கு திட்டமிடப்பட்ட பின்னரே வழங்க வேண்டும். இதை விடுத்து பொருத்தமற்றவர்களை வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட அனுமதித்தால் அது மிகவும் ஆபத்தானதாக முடியும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் போட்டி இல்லையென்ற நிலையில் அவர்கள் கூறுவதே விலையெனக்கூறி தவித்த முயல் அடிக்கும் நிலைமை ஏற்படும். இது பிள்ளையார் பிடிக்க போய் குரங்காக்கிய கதையாகத்தான் முடியும்.

ஆகவே நேர்மையானவர்களை மட்டும் உள்ளே வியாபாரம் செய்ய அனுமதிக்க வேண்டும். அதேவேளை நியாயமான விலையில் தேனீர் உட்பட உணவு வகைகள் விற்கப்பட வேண்டும் என்ற கடுமையான கட்டுப்பாடுகளை விதிப்பதுடன் விலையில் கட்டுப்பாட்டு விலைகளும் நிர்ணயம் செய்ய வேண்டும்.

இன்று இந்தப் பகுதியில் தண்ணீர் தாங்கி நிர்மாணிக்கப்பட்டு குடிநீர் பெறக்கூடியதாக உள்ளது. இதே போன்று வலி.வடக்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் அப்பகுதி சுத்தம் செய்யப்படுவதுடன் கண்காணிக்கப்பட்டும் வருகின்றது.

பெண்களுக்கும் ஆண்களுக்குமென வெவ்வேறு கேணிகள் காணப்படுகின்றன. ஆனால் காவலாளிகள் அற்ற நிலைமை காணப்படுகின்றது. பொலிஸ், கடற்படையினரின் பூரணமான கட்டுப்பாட்டில் இந்தப்பகுதி இருக்கின்ற போதிலும் கேணிகளுக்கு உரிய முறையில் காவலாளிகள் நியமிக்கப்படவில்லை.

தற்போது கேணிக்கு ஒரு பெண் ஊழியரை தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நியமித்த போதிலும், நடைமுறைக்குப் புறம்பாக செல்வாக்கின் அடிப்படையில் செய்யப்பட்ட நியமனம் எனக்கூறி பொதுமக்கள் ஆட்சேபம் தெரிவித்ததால் ரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன்,

பரம்பரையாக காவலாளிகளாக இருந்த குடும்பத்தினர் தமது உரிமையைத் தமக்கே வழங்க வேண்டும் எனக் கூறி மனித உரிமைகள் ஆணைக்குழு வரை சென்றுள்ளனர். இந்த இழுபறி எப்போது தீருமோ தெரியவில்லை.

கீரிமலை செல்வதாக இருந்தால் சொந்த வாகனங்களில் குறிப்பாக பஸ், வான், மோட்டார் சைக்கிள் களில் மட்டுமே செல்லமுடியும்.

இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ் வண்டிகளின் சேவையும் தனியார் மினிபஸ் வண்டிகளின் சேவையும் நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். கடந்த காலத்தில் கீரிமலைக் கேணியில் நீராடவும் வரலாற்றுப்புகழ் மிக்க கீரிமலை நகு லேஸ்வரர் ஆலயம் உட்பட ஏனைய ஆலயங்களையும் வழிபடவும் ஏராளமான மக்கள் சென்றுவந்தார்கள்.

இன்று யாழ் குடாநாட்டை வெய்யிலின் கொடுமை வாட்டுகின்ற போதிலும் பஸ் வண்டிகளில் கீரிமலை செல்ல முடியாத நிலைமையின் காரணமாக பலர் தமது ஆசைகளை நிறைவு செய்ய முடியாத நிலையே காணப்படுகின்றது.

தனியார் சுற்றுலாப்பயணிகள் பஸ் வண்டிகளில் சென்று வருவதைப் போன்று ஏனையவர்களும் பஸ்வண்டிகளில் சென்று வர அனுமதிக்கப்படல் வேண்டும்.



விண்ணன்

சுவாமி விடைகொடுத்தாலும் பூசாரி விடை கொடுக்காதது போன்று படைத்தரப்பினரும் அரசாங்கமும் உள்ளே சென்று வர அனுமதித்துள்ள நிலையில் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து மக்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது உரிய அரச ஊழியர்களின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

# புகுமுக மாணவரைப் பாதுகாப்பது யார்?

பேராசிரியர் கா.சிவபாலன்
பீடாதிபதி. (மருத்துவபீடம்) யாழ்.பல்கலைக்கழகம்

கல்வி நிறுவனங்களுக்கு உயர் கல்வியை நாடிச் செல்வோருக்கு முதல் எதிரியாக விளங்குவது பகிடிவதை எனும் பெயரில் நடத்தப்படும் அடாவடித்தனங்கள் என்பது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் உணரப்பட்டு அதனைத் தடுக்கும் முயற்சியில் தற்போதைய ஆணைக்குழுத் தலைவர் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளார். இது தொடர்பில் ஏற்கனவே உள்ள சட்டங் களையும், புதிய நடைமுறைகளையும் உள்ளடக்கிய சுற்றறிக்கை அண்மைக்காலத்தில் தயாரிக்கப் பட்டுள்ளது. இவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரும் முயற்சியாக எதிர்வரும் மே மூன்றாம் திகதி சகல பல்கலைக்கழக பீடாதிபதிகளுக்கும் நிர்வாகிகளுக்குமான செயலமர்வு நடத்தப்படவுள்ளது. இந்நிலையில் மருத்துவ மாணவரின் அத்துமீறிய பகிடிவதை எனும் தலைப்பில் எனக்குக் கடந்தவாரம் கிடைத்த அநாமதேயக் கடிதம் இக்கட்டுரையை எழுதிப் பிரசுரிக்க என்னைத் தூண்டியது.

அக்கடிதத்திலுள்ளபடி, குறிப்பிட்ட சம்பவம் நல்லூர் ஆலய முன்றலில் கடந்த இரு மாதங்களுக்குள் நடைபெற்றிருக்க வேண்டும். பகிடிவதையை நடத்தியவர் பற்றியோ, பாதிக்கப்பட்ட புகுமுக மாணவன் பற்றியோ எவ்வித அடையாளப்படுத்தலும் இல்லாதநிலையில் மந்திர சக்தி எனக்கு இருந்தால் மட்டுமே எவ்வித நடவடிக்கையாவது என்னால் மேற் கொள்ள இயலும். மேலும் அநாமதேயக் கடிதங்களுக்குரிய இடம் குப்பைத் தொட்டி என்பதே எனது கருத்து. ஆயினும் பகிடிவதை தொடர்பில் எனது எண்ணங்களை இங்கே முன்வைக்கிறேன்.

மாணவர் மத்தியில் மிகவும் சிறிய தொகையினரான, பலவீனப்பட்டவர் மீது அற்பத்தனமான அதிகாரவெறியைக் கட்டவிழ்த்துவிடும் உளப்பாதிப்புற்றவரின் செயற்பாடே அத்துமீறிய பகிடி வதையாகும். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சட்டங்களை இயற்றுவதும், பல்கலைக்கழகம் அவற்றை நடைமுறைப்படுத்துவதும் பல்கலைக்கழக வளாகத்தினுள் மட்டுமே செல்லுபடியாகும். ஆதாரத்துடன் குற்றங்கள் நிரூபிக்கப்படுவதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதும் எவ்வளவு சிரமமான விடயங்கள் என்பது அனைவரும் அறிந்த விடயம். பல்கலைக்கழக சமூகமும் பொதுமக்களும் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடும் ஒழுக்கக் கேடான அல்லது புத்திபேதலித்த மாணவரை இனங்காட்டவும் தடுப்பு நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்கவும் முன் வரவேண்டும்.

முதுநிலைமாணவர் தமக்குரிய மரியாதையைத் தமது அறிவுத் திறத்தாலும் ஒழுக்க மேம்பாட்டாலும் பெறவேண்டுமேயொழிய வலுக்கட்டாயமாக, பகிடிவதைமூலம் பெறமுடியாது என்பதை உணரவேண்டும். புகுமுக மாணவர் தமது முதுநிலை மாணவருக்கு பல்கலைக்கழகத்துக்குள் மட்டுமே விட்டுக் கொடுத்து நடக்க வேண்டிய தேவை இருப்பதையும்,பொது இடங்களில் அனைவரும் சமமானவரே என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும். முதுநிலைமாணவரின் அனுசரணை இருந்தால் மட்டுமே புதிய மாணவர் கற்றல் செயற்பாடுகளில் வெற்றியீட்ட முடியும் எனும் கருத்து முற்றிலும் தவறானது. கல்வி என்பது ஒவ்வொரு மாணவரும் தத்தமது ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதாகும். இவ்வகையில் ஆசிரியரின் வழிகாட்டலுக்கு அடுத்து தத்தமது அணியிலுள்ள சகமாணவரின் ஒத்துழைப்பும் கருத்தாடல்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை. முதுநிலை மாணவரும் இளநிலை மாணவரும் உரிய மதிப்புடன் சினேக மனப்பான்மையை வளர்த்துக் கொள்வது சமூக ஒத்திசைவுக்கு அவசியம் என்ற வகையில் மாணவ அறிமுகம் தேவை. மேலும் பின் தங்கும் மாணவருக்கும் விசேட தேவை உள்ளவருக்கும் உதவுமுகமாகவே மாணவர் மன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் புகுமுக மாணவரின் தேவைகளை இனங்கண்டு உதவும் மனப்பாங்குள்ள நல்ல முதுநிலை மாணவர் அநேகர் உள்ளனர். பெரும்பான்மையினரான முதுநிலை மாணவரின் நல்லெண்ணச் செயற்பாடுகள் அத்துமீறும் ஒரு சிலரால் களங்கப்பட்டு ஒழுக்கக்கேடுகள் மட்டுமே வெளிப்படுவது வருத்தத்துக்குரியதாகும்.

பொது இடங்களில் நடக்கும் எமது பண்பாட்டுக்கு ஒவ்வாத எவ்விடயத்தையும் சமூகப் பெரியவர் முன்பாகவோ அல்லது காவல் துறை மூலமாகவோ நடவடிக்கைக்குட்படுத்த வேண்டும். பகிடிவதை இதற்கு விதிவிலக் கானதல்ல. பல்கலைக்கழக மாணவரின் செயற்பாடுபற்றி அக்கறை கொள்ளும் அதிகாரம் பொது மக்களுக்கு உண்டு. காரணம், இலவசமான பல்கலைக்கழக கல்விபெறுவோரின் கற்பித்தற் செலவுகள் அனைத்தும் பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்தே பெறப்படுகின்றன. மேலும் பல்கலைக்கழக, மருத்துவபீட மாணவர்

(20 பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமகன் தேவை

கொக்குவில், கௌரவ குடும்பம், 1985 நவம்பர், உத்தரம் 2ஆம் பாதம், 4 இல் செவ்வாய், பாவம் 2, 3 சுற்று பாவம் 29, உயரம் 5 அடி 4 அங்குலம் படித்த நல்ல அழகிய நற்பண் புகள் உள்ள பெண்ணிற்கு எதுவித தீய பழக் கங்களும் அற்ற நற்பண் புகள் உள்ள 1980 இற்கு பின் பிறந்த Doctor, Engineer, Accountant அல்லது Graduat அழகிய வரனை யாழ்.மாவட்டத்தில் எதிர்பார்க்கி றோம். படிப்புக்கேற்ற சீதனம் வழங்கப்படும்.

தொடர்பு: 0773965245 (97721)

# விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள P-4 Computers, Monitor மற்றும் கணனிப் பொருள்கள் என்பன உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு.

(விலை 14750/= மட்டுமே)

தொடர்பு: Sky Computer System
162, Main Street, Jaffna. T.P.: 021 222 1417 (கி/567148)

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் முதலாம், இரண்டாம், குறுக்குத் தெருவில் இருக்கும் சப்பல் வீதியில் ஒரு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொ.பே. இல 077-0833710
071-6566684

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## செல்வி கிரிதரன் டிஷானி

திரு.திருமதி கிரிதரன் பிரியா தம்பதியினரின் செல்வப் புதல்வி டிஷானி தனது முதலாவது பிறந்தநாளை இன்று (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை மதுரையில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, சித்தி, மாமா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் மதுரை மீனாட்சி அம்மனதும் கவுணாவத்தை வைரவப் பெருமானதும் அருள்பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.



பஞ்சுமாமா (தாத்தா)
முதலி கோயில் வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.




02.05.2010

செல்வி கி.டிஷானி




SAMSUNG
TURN ON TOMORROW

## விநியோகஸ்தராக இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள் அனைத்து எதிர்பார்ப்புக்களையும் விஞ்சிய வாய்ப்புக்களுக்காக !

உலகத்தின் மிகவும் விரும்பப்படும் கையடக்கத் தொலைபேசிகள் வர்த்தகக் குறியீடான சம்சுங், சர்வதேச அளவிலான தனது அபூர்வமான வெற்றியினை இலங்கையிலும் உருவாக்கவுள்ளது
தேசிய விநியோகஸ்தர் என்ற வகையில் ஜோன்கீல்ஸ் ஒபிஸ் ஒட்டோமேஷன் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனமானது பரந்தளவான சிறப்பம்சங்களின் தொகுதியை உள்ளடக்கிய, பிரயோக முறைமைகள் மூலம் வளமாக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளை உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கவுள்ளது. இந்தக் கையடக்கத் தொலைபேசிகள் சர்வதேச ரீதியிலான வாடிக்கையாளர்களின் வேண்டுகோள் மற்றும் சந்தைப்படுத்தல் வெற்றி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டவையாகும்.

இந்த வெற்றியை இலங்கையின் ஒவ்வொரு மூலைக்கும் கொண்டு செல்வதற்காக, கையடக்கத் தொலைபேசி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து விநியோகஸ்தர்கள்/சில்லறை வர்த்தகர்கள் போன்ற தரப்பினருடன் இணைந்து செயற்படுவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

தேவையான சந்தைப்படுத்தல் உதவிகளை வழங்குவதில், பரந்துபட்ட அளவிலான சந்தைப்படுத்தல் உதவித் தொடர் செயற்பாடுகள் மூலம் விநியோகஸ்தர்கள்/சில்லறை வர்த்தகர்களுக்கு ஆதரவு அளிக்கப்படும். இவை சம்சுங் இனது சர்வதேச அளவிலான அளவுத் திட்டம் மற்றும் தரநிர்ணயங்களை பிரதிபலிக்கும் விதத்தில் அமைந்திருக்கும். எமது விற்பனை ஆளணியினரின் மிகவும் நெருக்கமாக ஒருங்கிணைக்கப்பட்ட மேற்பார்வை மற்றும் உதவி என்பவற்றுக்கு மேலதிகமாகவே மேற்படி உதவிகள் வழங்கப்படும். அவர்கள், உங்களது பிரத்தியேகமான தேவைகள் மற்றும் உங்களது வர்த்தகங்களை விருத்தி செய்தல் போன்றன தொடர்பில் விளங்கிக் கொள்வதற்காக கிரமமான அடிப்படையிலமைந்த விநியோகஸ்தர் சந்திப்புகளை உங்களுடன் நடத்துவர்.

தற்போது கையடக்கத் தொலைபேசித் துறையில் வர்த்தகத்தை மேற்கொண்டுள்ள அனைத்து வர்த்தகங்கள்/ நிலையங்களை, கீழ்வரும் விபரங்களை அனுப்பி தம்மை பதிவு செய்து கொள்ளுமாறு இத்தால் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

நிறுவனத்தின் பெயர்:
தொடர்புகொள்ளக்கூடிய நபர் (உரிமையாளர்/முகாமைத்துவப் பணிப்பாளர்/முகாமையாளர்):
தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள்:
மின்னஞ்சல்:
அஞ்சல் முகவரி:
வர்த்தக நிலையம் அமைந்துள்ள இடம்:
வர்த்தக நிலையம்/ விநியோக மையத்தின் தொலைபேசி இலக்கம்:

இந்த தகவல்களை நீங்கள் பதிவுத்தபால், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலமாக அனுப்ப முடியும், நினைத்துப் பார்த்துப்பார்க்க முடியாத அளவிலான வர்த்தக வாய்ப்புக்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன. தயவுசெய்து இவ்வறிவித்தல் வெளியான 7 தினங்களுக்குள் தொடர்புகொள்ளவும். உங்களது தகவல்கள் கிடைக்கப்பெற்றதும் நாம் உடனடியாக உங்களைத் தொடர்பு கொள்வோம்.

JKOA
பிரதம நிறைவேற்று அதிகாரி
ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஒட்டோமேஷன் (தனியார்) நிறுவனம்
320/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 02, இலங்கை.
தொலைபேசி: 011-231300 தொலைநகல்: 011-2431945 E-mail: jkoa@keells.com
web: www.ikoa.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பெண்கள் உடன் தேவை

## மலேசியா நாட்டிற்கு

### தமிழ் வீட்டிற்கு தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 650 |
| இலங்கைப் பெறுமதிக்கு | Rs.21,700 |

பாஸ்போட் உள்ளவர்கள் மற்றும் பாஸ்போட் இல்லாதவர்கள் (உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம்)

- ★ மெடிக்கல் (Medical) - இலவசம்
- ★ இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
- ★ விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
- ★ தங்குமிட வசதி (Accomodation) - இலவசம்
- ★ உணவு (Food) - இலவசம்

முற்றும் இலவசம்

மற்றும் சவுதிஅரேபியா, குவைத், டுபாய், கத்தார் ஆகிய நாடுகளுக்கும் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

Labour Licence No. 2422
**Amal Sulthan Travels & Recruitment**
540, 1/1, 1/2, (1st Floor), Maradana Road,
Maradana, Colombo - 10
Tel: 011-2691344, 077-3179592, 0755057081

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வி பத்மசிறி ரிதுனா

மலர்வு
29.04.1998

உதிர்வு
13.05.2009

மொட்டு வீழ்ந்து மெல்ல
முகை பரப்பும் நேரமதில்
கொற்றவன் வந்து -உன்னை
கொண்டுதான் சென்றதேனோ
விட்ட கண்ணீர் காயவில்லை-இனி
விழிகளிலே நீருமில்லை
உத்தமியே உன்நினைவு
உள்ளம்விட்டு அகலவில்லை
என்னதான் செய்திடினும்
எம்சோகம் மாறவில்லை
கண்ணீரில் வாழ்வதனால்
கடல்நீரும் காரமில்லை.

என்றும் உன் நினைவலைகளை
நெஞ்சில் சுமந்தபடி
குடும்பத்தினர்.

காட்டுப்புலம்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (92234)

# விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவஞ்சலி



## தேவசகாயம் அந்தோனிப்பிள்ளை

(D.A. பிள்ளை அன்சன் உரிமையாளர் - ராசா, பப்பா)

தோற்றம்
10✱07✱1935

மறைவு
02✱05✱2009

'உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்''

ஒரு வருடம் மறைந்து விட்டது - பப்பா
அகலுமா உங்கள் நினைவின் பாரம்
மாண்டவர் மீண்டும் வருவது இல்லை
மறையுமா உங்கள் பிரிவின் சோகம்
கூண்டின் கிளிபோல் திகைக்கிறோம் - நாம்
கூப்பிடும் சத்தம் கேட்கின்றதா
பப்பா என்றே அனைவரும் உங்களை
பாசமுடன் கூப்பிடுவார்களே எம் அனைவரையும்
பாதியில் நிர்க்கதியாய் விட்டுவிட்டு.
எங்கு சென்றாய் பப்பா...?

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (03.05.2010) திங்கட் கிழமை காலை 6 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

*(திருப்பலி முடிந்ததும் வீட்டுக்கு வரவும்)*

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

59, முதலாம் குறுக்குத்தெரு,
பாசையூர், யாழ்ப்பாணம். (97609)

# மனிதனின் வயதை வெறுமனே வருடங்களின் எண்ணிக்கையால் அளவிடக் கூடாது


நாம் இளம் பராயத்தினருடைய சமூகம் என்ற நிலையிலிருந்து வெகு தூரம் சென்றுவிட்டோம். இருபதாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்தில் பெரும்பாலானவர்கள் 65 வயதிற்கு முந்தியே மரணித்து விடுவதென்பது வழக்கமாக இருந்தது. ஆனால் 1900 ஆண்டுக்குப் பின்னர் இந்நிலை முற்றாக மாறிவிட்டது. அதன் பின் மனித இனத்தின் சராசரி ஆயுட்காலம் 30 ஆண்டுகள் மேலதிக வாழ்நாளைக் கொண்டதாக மாறிவிட்ட தென்பதே யதார்த்தம். மனிதர்களுடைய அதிக பட்ச வாழ்நாளாக 120 - 125 ஆண்டுகள் கொள்ளப்படுகின்றன. பூமியில் வாழ்கின்ற மற்ற எல்லா உயிரினங்களை விடவும் இது அதிகமானதாக இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நிலை யதார்த்தமாக இருந்தபோதும், இளம் பராயத்தினரை முதன்மைப்படுத்துகின்ற சமூகமாகவே நாம் இன்னமும் இருக்கிறோம். இதற்கு முக்கிய காரணமாக உற்பத்தியையே மட்டும் நோக்காகக் கொண்ட சமூக அமைப்பு, வினைத்திறன் மிக்க வயதினை முதன்மைப்படுத்துகின்ற எண்ணக்கரு என்பன காரணமாக அமைவது கண்கூடு. ஆனால், இதுவே பெறுமானங்களை முதன்மைப்படுத்துகின்ற (Value & Based) சமூகமாக இருக்கு மானால், இதனினின்று மாறுபடான தோற்றப்பாட்டைக் கொண்டிருக்கலாம். நுகர்வுக் கலாசார மாயை, பெறுமானங்களுக்கு அப்பால் உற்பத்தியினை மட்டுமே முதன்மைப்படுத்த விரும்புகின்றது. இதனால் இளம் பராயத்தினரை மட்டும் சக்தி, ஆற்றல் கொண்டவர்களாகக் காட்ட முனைகின்றது. ஆனால், உண்மை இதுவல்ல என்பதைப் பல விஞ்ஞான ஆய்வுகள் கோடிகாட்டி நிற்கின்றன.

முதுமையடையும் பொழுது மனிதனில் சில ஆற்றல்கள் இழக்கப்படுவது என்பது உண்மையே. அந்த இழப்பினை நிவர்த்தி செய்ய மூளை இயைபாக்கமடைய முயற்சிக்கின்றது. இதன் காரணமாகவே முதுமையடையும் பொழுது சில ஆற்றல்கள் மேம்படுவதாக அறியப்படுகின்றது. அதிலும் குறிப்பாக ஞானம் (Wisdom) மற்றும் தகைமை (Compe tancc) என்பன அதிகரித்துச் செல்வது அவதானிக்கப் படுகின்றது. இதனையே Wisdom paradox - வயது முதிர்ச்சியின் எதிர்பார்ப்பிற்கு மாறாக ஞானம் அதிகரிக்கின்ற நிலை என விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். எனவேதான் மனித இனம் வெறுமனே இன விருத்திக்காக வாழ்வதாக இருந்தால் அதன் வாழ்நாள்கள் இவ்வாறு நீடித்துச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை. எனவே, நீண்டு செல்லுகின்ற வாழ்நாள்கள் மனிதன் தன் ஞானத்தினை அடுத்த சந்ததிக்கு வழங்குவதற்காகவே என எண்ண இடமுண்டு.

ஒரு வயோதிபர் மரதன் ஓட்டப் போட்டியிற் கலந்து கொள்ளமுடியாமல் போகலாம். அதற்கு அவரது உடல்வாகு, மூட்டுக்கள் என்பன இடம் கொடாது போகலாம். ஆனால், அவர் தனது ஞானத்தின் உதவியுடன் தனது பேரக் குழந்தைகளுக்குப் பல அறிவியற் கதைகளை அனுபவங்களினூடாகச் சொல்லிக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. இது பல சிறார்களின் மன ஆரோக்கியம், கற்பனைத் திறன், ஆக்கச் செயற்பாடு என்பவற்றிற்கு அனுசரணையாக அமைகிறது. இங்கே அந்த முதியவரின் சமூகப் பங்கு புறந்தள்ளிவிட முடியாதது. ஆகவே மனிதரின் வாழ்நாளின் நீடிப்பின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. ஆகவே முதுமை பற்றிய எமது எண்ணக்கரு பெருமளவில் மாற்ற மடைந்து வருகின்றது , அல்லது மாற்ற மடைய வேண்டியுள்ளது.

உலக வரலாற்றில் பல முதியவர்கள் செய்த பணிகள், செயற்பாடுகள், ஆக்கங்கள் என்பன எமது சமூகத்தில்



முதுமை பற்றிய எண்ணக்கருவினை மாற்றமடையச் செய்கின்றது எனலாம். உதாரணமாக, இஸ்ரேலின் முதற் பெண் பிரதமமந்திரி கோல்டா மேயர் (Golda Mayer) பிரதமராகப் பதவி ஏற்கும் போது அவரது வயது 71. இவரது பதவிக்காலம் (1969-1974). அந்த நாடு பாரிய நெருக்கடிகளைச் சந்தித்த நேரம் அது. அவற்றையெல்லாம் மதிநுட்பத்துடன் கையாண்டு அவர் சாதனை படைத்தார் என்பதே வரலாறு. தென்னாபிரிக்காவின் ஜனநாய ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட முதல் ஜனாதிபதியான நெல்சன் மண் டேலா பதவியேற்கும் பொழுது அவரது வயது 76. அரசியலில் மட்டுமல்ல, வேறு பல துறைகளிலும் முதியவர்கள் சாதனை படைத்துள்ளார்கள். இவர் களின் பங்களிப்புச் சமூகத்தின் முதுமை பற்றிய பார்வையை மாற்றிட வழிகோலியுள்ளது.

இதைவிடத் தனி மனிதனில் முதுமை பற்றிய பயம், ஒருவித அச்சம் காணப் படுகின்றது. முதுமைப் பராயத்தினுள் செல்லும் பொழுது எல்லாவற்றினையும் இழந்துவிட்ட, ஒன்றுக்குமே உதவாத ஒரு பராயத்தினுள் செல்வதாகப் பெரும்பாலானோர்கள் பயப்படுகின்றார்கள். இதனை அகற்றி, முதுமை வாழ்வின் ஒரு படிநிலையாக, அதனை ஆரோக்கியமாக எதிர்கொள்ளுவதற்கு மனிதனைத் தயார்ப்படுத்த வேண்டிய பொறுப்பும் சமூகத்தினுடையதேயாகும்.

நூறு வயதினைக் கடந்த, ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களில் மேற்கொண்ட ஆய்வுகள் பல உண்மைகளை எமக்கு எடுத்துரைக்கின்றன. நீண்ட வாழ்நாளிற்குரிய பல காரணிகள் அதிற்கோடி காட்டப்படுள்ளன.

01. பரம்பரைக் காரணிகள்
02. ஆரோக்கியம்
03. கல்வியறிவு
04. ஆளுமை
05. வாழ்க்கை முறை

இதனை நோக்கும் போது நாம் மேம் படுத்தக்கூடிய பல காரணிகள் இருப்பது வெளிப்படையாகிறது. அதிலும் குறிப்பாக கவனிப்புள்ள சமூகம் மற்றும் ஆன்மீகம் என்பன பல பகுதிகளில் நீண்ட வாழ்நாளுக்குக் காரணமாக அமைந்துள் ளது. நெருக்கீடு குறைந்த ஆரோக்கியமான வாழ்க்கைமுறை இவற்றிற்கு இட்டுச் செல்கின்றது.

வெற்றிகரமான முதுமை என்பதனை நாம் எப்படி அடையப் போகின்றோம் என்பது இன்றைய முக்கிய விடயமாக இருக்கின்றதல்லவா? வயதானவர்களின் எண்ணிக்கை சமூகத்தில் அதிகரித்துச் செல்கின்ற இன்றைய உலகில், அவர்களின் மூலம் எதிர்காலச் சந்ததி பெற்றுக் கொள்ளக்கூடிய பல விடயங்கள் அறியப் படுகின்ற தறுவாயில், நாம் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியுள்ளது.

முதுமையில் ஏற்படுகின்ற எதிர்மறையான விடயங்களை முதன்மைப்படுத் தலை விடுத்து, அதன் நேரான பகுதியைக் கருத்திற் கொள்வது சாலச்சிறந்ததாகும். எனவேதான் வெற்றிகரமான முதுமை அல்லது ஆரோக்கியமான முதுமையை அடைவதில் மிக முக்கியமான காரணிகளிற் சூழலின் மீது இருக்கும் கட்டுப்பாடு (Control over environ ment) மற்றும் தன் வினைத்திறனுடன் கூடிய மனநிலை (Sense of self - Effi cacy) என்பன குறிப்பிடப்படுகின்றன. எனவேதான் இவற்றினைப் பெறுவதற்கு இருக்க வேண்டிய காரணிகளாவன:

01. சரியான உணவு - Proper diet
02. இயங்கு திறனுடன் கூடிய வாழ்க்கை முறை - Active life style
03. மனத்தூண்டுதலும், நெகிழ்வுத் தன்மையும் - Mental stimulation Flexibility
04. நேரான நெருக்கீட்டை எதிர்கொள்ளும் திறன் - Positive coping skill
05. ஆரோக்கியமான சமூக உறவும் ஆதரவும் - Good social relation-ship support
06. நோய்களற்ற நிலை - Absence of disease என்பன அமைகின்றன.

பலரும் பலவாறு குறிப்பிட்டாலும் மூளை தொடர்ந்து தனது செயற்பாட்டினை இழந்து செல்கின்றதே? இவையெல்லாம் எப்படிச் சாத்திய மாகும்? எனப் பலர் வினவுகின்றனர்.

மூளை உண்மையிற் பல தொழிற் பாட்டினை இழந்தாலும் அதனால் ஏற்படுகின்ற நிலையினை ஒருவித இயைபாக்கத்திற்கூடாகவே கையாளுகின்றது. மூளை இறக்கும் வரைக்கும் புதிய கலன்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றது என்பதும், அதனைச் சூழலில் ஏற்படுகின்ற தூண்டுதல்களும், உடலியற் செயற்பாடுகளும் பாதிக்கின் றன என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. புதிதாகக் கற்றல்கூட இத்தகைய செயற்பாட்டினை அதிகரிக்கின்றதென விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இந்தக் கலங்களின் உற்பத்திக்கு மேலாக மனித னில் 40 வயதிற்கும் 70 வயதிற்கும் இடைப்பட்ட காலங்களில் நரம்புக்கலங் கள் கிளைகொண்டு பெருகுகின்றன எனவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே தான் மூளை தனது இழப்பினை ஈடுசெய்து கொண்டு இயைபாக்கமடை கின்றது. எனவே ஒரு மனிதனின் வய தினை வெறுமனே வருடங்களின் எண்ணிக்கையினால் மட்டும் அளவிட முடியாது. அதற்கும் அப்பால் உயிரியல் வயது, உளவியல் வயது, சமூக வயது என இவற்றினை வகைப்படுத்தலாம் என்பது கண்கூடு. இந்த வயதுகளே மனி தனது தொழிற்பாட்டு வயதினைத் தீர்மானிக்கின்றன. என்பது இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. உதாரண மாக 70 வயது மதிக்கத்தக்கவர்களின் தொழிற்பாட்டு வயது வேறுபடுகின்றது.

வயதானவர்களின் உள சமூகப் பிரச் சினைகளுக்குக் காரணமாக அமைகின்ற காரணிகளை நோக்குவோமாயின், அவர் களுக்கு ஏற்படுகின்ற உடல் நோய்கள் மிக முக்கியமான காரணியாக அமைகின்றது. வயோதிபத்தில் பல உடல் அங்கங்களது அவயங்கள் செயற்பாடுகளிற் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. கண்பார்வை, காது கேட்டல், மூட்டுக்களின் இயங்குதிறன் என்பன முக்கியமாக அமைகின்றது.

# முதியோரின் அச்ச உணர்வை அவர்தம் மனதிலிருந்து நீக்க உதவுகின்ற சமூகப் பொறுப்புத் தேவை

அடுத்ததாக, அறிவுசார் தொழிற்பாடு, இழப்புக்கள் மற்றும் ஆளுமை மாற்றங்கள் உளசமூகப் பிரச்சினைகளுக்குரிய காரணிகளாகின்றன. இவற்றைவிட உணர்ச்சி சார்ந்த பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள், மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன.

பொதுவாக, ஒரு வயோதிபரின் மன நல மேம்பாடென்பது மற்றைய பராயத் தினரை விட வேறுபட்டு அமைகின்றது. இந்த வேறுபாட்டிற்கு மேற்குறிப்பிட்ட காரணிகள் ஏதுவாக அமைந்துள்ளன. உதாரணமாக ஒரு பார்வைக் கோளாற்றினால் அதிலும் குறிப்பாக மூப்புடன் கூடிய வெண்படலத்தினால் ஏற்படக்கூடிய பார்வைக் கோளாறுக்கு அதற்குரிய சிகிச்சையளிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி வழங்கும்போது, அந்த நபருடைய மனநலம் பன்மடங்கு மேம்படுகின்றது. அதைவிடுத்து அந்தக் குறைபாடுடன் எப்படி வாழ்வது என்று ஆலோசனை வழங்குவது நகைப்பிற்கிட மானது. ஓர் ஊன்று கோல், மூப்படைந்து நடையில் தளர்வடைந்த ஒருவருக்கு மிக முக்கியமாக உதவுகின்ற ஒரு சாதானமாக அமைகின்றது. கேட்டலுக்கு உதவி செய்கின்ற கருவி கூட இவ்வாறான ஒரு

(18ஆம் பக்கம் பார்க்க)

வைத்தியக்கலாநிதி சி.சிவதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY OF JAFFNA. SRI LANKA

**MEDIA RESOURCE AND TRAINING CENTER (MRTC)**

The Media Resource and Training Centre is a joint venture of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden.

Applications *are* invited from suitable candidates for the following posts in *the Media* Resource and Training Centre, University of Jaffna upto **10th June 2010**

### 1.Post of Director (on Contract)

**Qualifications:**

i. A Degree of a recognized University and a postgraduate degree with **publications** of high quality. Priority will be given to applicants with publications related to **Media Studies;**

ii. Minimum of 15 years experience in **academic administration** and/or In an Executive position in a Government Department, State Corporation, Higher Educational Institution / Institute or in a recognized N.GO

• Preference will be given to those who have experience in Leadership from both media and academic world and have vital and upto date knowledge with information technology and engagement with media and civil Society

**Applications are expected from suitable candidates below 55 years**

**Salary:** Salary is negotiable and shall be determined based on the qualifications and experience of the selected candidate.

The Candidates are required to sbmit **a statement of vision for the development of the MRTC**

**Selection by interview**

**2.Post of Course Coordinator (On Contract)**

**Qualifications:**

i. A Degree of a recognized University and a Master degree in journalism

ii. At *least* six years **experience** in one or more of the followings:

a- Teaching /conducting courses in training of Trainers at University Level

b. Professional experience in Media

c. Research in a recognized Institution in the field of Journalism

**Salary:** Salary is negotiable and shall be determined **based on** the qualifications and *experience* of the selected candidate.

**Selection by interview**

**3. <u>Post of Trainer in Journalism (On Contract)</u>**

**Qualifications:**

i. A Degree from a recognized University

ii. Should have completed a course in Training of Trainers in Journalism

iii. Possesses minimum of one year experience in print or electronic media or both

**Salary:** Rs.20,750/- (All inclusive and fixed per month)

Selection by interview

**General Conditions;**

This is a full-time **assignment** and initially it is for a period of **one** year from the date of commencement of the assignment. However, the assignment is renewable if the services rendered and work performance during the tenure of assignment is satis factory.

The appointee will become a contributor to the Employees Provident Fund (EPF). Media Resources and Training Centre will contribute the EPF and the Employees Trust Fund.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of **Rs.100/-** per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order- drawn in favour of the Bursar, University of Jaffna together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications for the above posts shall be sent to the **Senior Assistant Registrar/Academic Establish mecnts, University of Jaffna.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Incomplete, illegible applications and applications **received** after the closing date will be rejected without intimation.

**Registrar 2010.04.30**

(சி/567201)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Original No - 01 Broiler கோழிக் குஞ்சுகள் 04.05.2010 அன்று விநியோகிக்கப் படும். முற் பதிவு செய்யவும்.

தொடர்பு - நல்லூர் பாம் சென்ரர்.
இல 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

எமதுகிளை-சுட்டிபாம்,வட்டுக்கோட்டையிலும் பெற்றுக் கொள்ளவும். T.P :- 021 321 6290

குறிப்பு - மிக விரைவில் Prima No - 01 பேட்டுக் குஞ்சு, கோழித்தீன், மருந்து வகை என்பன பெற்றுக் கொள்ளலாம்.

எமது T.P :- 021 222 6944

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர்,கல்பேட்ஸ் என்பன மலிவான விலையில் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். விலைக்கழிவு உண்டு.

தொடர்பு: லக்ஸ்மி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி,கலட்டி.

## மாடி வீடு வாடகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் 5 அறைகள், 2 வரவேற்பு மண்டபம், குளியல் அறை, வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. வங்கி,NGOs, குடும்பப் பாவனைக்கு விரும்பத்தக்கது.

தொடர்பு: 0775581490
(சி/567048)

## தோட்டக்காணி குத்தகைக்கு

மணற்காடு, கச்சாய், அல்லாரை, சாவகச்சேரியில் 6¾ஏக்கர் தோட்டக்காணி குத்தகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0771199988 (சப்னி)

## காணி விற்பனைக்கு

நவாலிதெற்கில்விசாலமானபாதையோரமாக கிணறடங்கிய 5 ப.6.6கு.காணி விற்பனைக்குண்டு. காத்திரமானவர்களின் தொடர்புகளுக்கு T.P.0779676128 (97621)

## டைனமோ விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள டைனமோ(18.7 KVA Each phase) 56.1 KVA out put, Dc converter உடன் விற்பனைக்குண்டு. விலை: 200,000/=

தொடர்பு: 0779472808

## கணிதம் - O/L (2010)

குழு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. புதன், வியாழன்-காலை 6 மணி. ஆசிரியர் K.நிரஞ்சன்.

தொடர்பு:- 0776139307
(யாழ்.இந்துக் கல்லூரி அருகில்)

## ஆண்டு விழா

கைதடி,மே.2

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு நிலையத் தலைவர் வி.துபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அறவழி நிறுவனச் செயலாளர் க.ஜீவகதாஸ் கலந்துகொள்வார்.

ஆண்டு விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய வீர வீராங்கனைகளுக்கான பரிசில்கள் இந்நிகழ்வில் வழங்கப்படுவதுடன் கல்விக் கழக மாணவர்களினதும் நிலைய அங்கத்தவர்களினதும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (201-288)

## புதிய குருக்களாக நால்வர்

குருநகர்,மே.2

நான்கு அருட் சகோதரர்கள் எதிர்வரும் மே 27ஆம் திகதியன்று யாழ்.மரியன்னை பேராலயத்தில் புதிய குருக்களாக யாழ். ஆயரால் திருநிலைப்படுத்தப்பட உள்ளார்கள்.

அருட் சகோதரர்கள் ஏ.ஜே.அன்ரனி ஜெயரஞ்சன், எஸ்.டியுக் வின்சன்ற், ஏ.ஜஸ்ரின், ஆ.மைக் மயூரன் ஆகியோரே புதிய குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். (ஒ-51)

## இரத்ததான நிகழ்வு

கைதடி,மே.2

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 51 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சனசமூக நிலைய உறுப்பினர்களும், விளையாட்டுக் கழக உறுப்பினர்களும் இணைந்து இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நிலையத்தின் தலைவர் சி.கந்தசாமி தலைமையில் நடைபெற இருப்பதாக நிலையச் செயலாளர் செ.மதனரூபன் அறிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினர் நேரடியாக வருகை தந்து மேற்படி இரத்தத்தினைப் பெறவுள்ளதாகவும், இந்நிகழ்வில் ஆர்வமுள்ளவர்களை கலந்துகொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (201-288)


## எமது மக்களின் நலன் கருதிய எமது சேவைகள் G.W

• வடக்கிலும் கிழக்கிலும் வீடு, காணிகளை வாங்கவும் விற்கவும்

• பழுதடைந்த வீடுகளை மறுசீரமைத்து நவீனப்படுத்தல்.

• கொழும்பிலுள்ள தொடர் மாடி வீடுகளை மறுசீரமைத்து நவீனமயப்படுத்தி வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கு வாடகைக்கு விடுதல்.

• வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் சொகுசுநிறைந்த தங்கும் வசதிகளை அமைத்து கொடுத்தல்.

உடன் தொடர்புகொட்டு **"Golden Wonder"**

132, Kachcheri Nallur Road, Jaffna, Sri Lanka.
T.P: 021-4922588, 021-4922589 Fax No: 021-2226180
E-mail: golden realestate@gmail.com


## 16ஆம் நாள் நினைவுகள்

மண்ணில் 09 ★ 09 ★ 2003



விண்ணில் 17 ★ 04 ★ 2010

### செல்வன் நாகேந்திரன் கிஷாவன்

செல்லக் குழந்தை முகமாய்
எம்முன் ஒளி வீசினாய்
காலம் எல்லாம் சுமக்கும் அளவுக்கு
உன்னைப் பார்த்த நாள்கள் கொஞ்சம் என்றாலும்
காலம்வரை வளர்த்த பாசத்தில் நீ நிலைத்தாய்
நீ போனாலும் நினைவுகள் விட்டுப் பிரியாது....

(97606)

புலவனார் வீதி,
கல்வியங்காடு.
தொ.பே: 0774676594

என்றும் உன் நினைவில்:
குடும்பத்தினர்.

## 4 ஆம் ஆண்டு நினைவாஞ்சலி

மண்ணில்:
23.11.1969

விண்ணில்:
02.05.2006



'இன்றே நீ என்னோடு
வான்வீட்டில் இருப்பாய்'

### அமரர் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஸ்)

(சந்தைப்படுத்தல் முகாமையாளர்,
உதயன் பத்திரிகை நிறுவனம் - யாழ்ப்பாணம்)

ஜெபம்: எல்லாம் வல்ல தந்தையே! இறைவா இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு தனது மறு உலக வாழ்வில் அடி எடுத்து வைத்துள்ள உமது அடியார் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸை உமது கரங்களில் ஒப்படைக்கின்றோம். உமது இரக்கத்தையே எதிர்பார்த்து வாழ்ந்த இவருக்கு அறிந்தும் அறியாமலும் இவர் செய்திருக்கக்கூடிய அனைத்துக் குறைகுற்றங்களும் மன்னிப்பு அளித்து நிலையான வாழ்வில் இவரை ஏற்றுக்கொள்ளும்.

எம் அன்பு சுரேஸ்!
என்றென்றும் உங்கள் நினைவுகளோடும்
ஆறாத் துயரத்தோடும் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

Queensland,
Brisbane-Australia.

மனைவி: சுவேந்தினி
பிள்ளைகள்: அல்றின்,சேஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் விழிப்புணர்ச்சியை முஸ்லிம் சமூகத்திடம் தமிழர் கற்க வேண்டும்


றவூப் ஹக்கீம்


ஹிஸ்புல்லா

இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூகதுறைகளில் ஏனைய இனங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த தமிழர் சமூகம் இப்பொழுதும் அந்த நிலையைத் தக்க வைத்துள்ளதா என்ற கேள்விக்கு மிகக்கசப்பான பதில்களே வெளிவருகின் றன.

அரசியல்துறையாக இருந்தாலும் சரி, கல்வி, பொருளாதார, சமூகத்துறைகளாக இருந்தாலும் சரி, தமிழர்களே இலங்கையில் ஏனைய இனங்களுக்கு முன்னோடியாக இருந்தனர் என நாம் பெருமையாகப் பேசிக் கொண்டாலும் இன்று அந்நிலை தலைகீழாக மாற்றப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

இன்று தமிழர்கள் இருக்கும் நிலையில் ஏனைய இனங்களிடம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறையவே உள்ளன. குறிப்பாக இலங்கையில் தமிழர்களோடு மொழியால் இணைந்து வாழும் முஸ்லிம் சமூகத்திடமிருந்து நிறையவே கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

அவர்களின் அரசியல் வியூகம் 'கல்வி' பொருளாதார முன்னேற்றம், அதற்காக அவர்கள் எடுக்கும் முயற்சிகள், திட்டமிட்ட செயற்பாடுகள், அவர்களுக்கிடையே இருக்கும் ஒற்றுமை, தமது சமூகம் என்று வருகின்றபோது அவர்களிடம் காணப்படும் ஒன்றிணைவு எனப் பல விடயங்களில் முஸ்லிம் மக்களிடமிருந்து தமிழர்கள் நிறையவே கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த தேர்தலில் கூட முஸ்லிம்கள் தமது சமூகத் திற்காக எவ்வாறு ஒற்றுமையாக பல வியூகங்களை வகுத்து செயற்பட்டார்கள் என்பதை பார்த்தால் தமிழர்கள் அவர்களிலிருந்து எவ்வளவு தூரம் பின்தங்கி உள்ளனர் என்பதை உணர முடியும்.

வடக்கு, கிழக்கில் கடந்தகால போரினால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டமையால் அரசியல் ரீதியாக செயற்பட முடியாத சோர்வு நிலை காணப்படுவதாக ஒரு காரணத்தை நாம் கற்பித்துக்கொண்டாலும் வடக்கு, கிழக்கிற்கு வெளியில் நிரந்தரமாக வாழும் தமிழர்களிடம் இந்த அரசியல் விவேகமோ, தமது சமூகம் பற்றிய - தமது சமூக, பொருளாதார முன்னேற்றம் பற்றிய அக்கறையோ ஏன் காணப்படவில்லை?

கடந்த தேர்தலின்போது வடக்கு, கிழக்கிற்கு வெளியில் இருந்த தமிழர்கள் மிக மோசமான நிலையில் அரசியல் வியூகங்கள் அற்றவர்களாகவே இருந்துள்ளார்கள் என்பது புலனாகும். முக்கியமாக வடக்கு, கிழக்கிற்கு வெளியில் வாழும் மலையகத் தமிழர்களை விட வடக்கு, கிழக்கை பூர்வீகமாகக் கொண்ட ஈழத்தமிழர்களிடம் இந்த அசமந்த போக்கு அதிகமாகக் காணப்பட்டு வருகிறது.

கொழும்பு மாவட்டத் தில் சிங்களவர்கள் 76.6 வீதமும், 2,47,139 பேரைக்கொண்ட இலங்கைத் தமிழர்கள் 11வீதமும், 2,02731பேரைக்கொண்ட முஸ்லிம்கள் 9 வீதமும் 24,821பேரைக்கொண்ட மலையகத்தமிழர்கள் 1.1 வீதமும் உள்ளனர். நடந்து முடிந்த தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் வடக்கு, கிழக்கை சேர்ந்த இலங்கை தமிழர்கள் ஒரு லட்சத்து 80ஆயிரம் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக் கூட அவர்களால் தெரிவு செய்ய முடியாமல் போய்விட்டது. வடக்கு, கிழக்கு தமிழர்கள் சரியான அரசியல் வியூகத்துடன் கொழும்பு மாவட்டத்தில் வாக்களித்திருந்தால் நான்கு தமிழர்களை தமது பிரதிநிதி களாகத் தெரிவு செய்திருக்க முடியும். ஆனால் அவர்கள் எந்த அரசியல் வியூகமோ, அக்கறையோ இல்லாமல் இருப்பது ஏனைய இனங்களுக்கு பெரும் சாதகமாக அமைந்து விடுகிறது. கொழும்பில் உள்ள வடக்கு, கிழக்கு தமிழர்கள் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட குமரகுருபரன் போன்றவர்களுக்கு வாக்களித்திருந்தால் மிக இலகுவாக கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளினால் அவர் வெற்றிபெற்றிருக்க முடியும்.

கொழும்பு மாநகர சபைப்பகுதியில் தற்போது சிங்களவர்களை விட தமிழர்களும் முஸ்லிம்களுமே அதிகமாக உள்ளனர். ஆனால் தமிழர்கள் தங்களுக்கிடையில் ஒற்றுமையின்மை காரண மாக இன்னமும் அவர்கள் பலமிழந்தவர்களாகவே உள்ளனர்.

அதேபோன்று கண்டி மாவட்டத்தில் கூட தமிழர்கள் இம்முறை பல படிப்பினைகளை பெற்றுள்ளனர். கண்டி மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 12.1வீத சனத் தொகைக்கொண்ட தமிழர்கள் ஒரு நாடாளுமன்ற பிரதிநிதியைக்கூட பெற்றுக்கொள்ளவில்லை. 11.2வீதமாக உள்ள முஸ்லிம்கள் 4 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமது பிரதிநிதிகளாக தெரிவு செய்துள்ளனர். கண்டி மாவட்டத்தில் மலையகத் தமிழர்கள் ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து 622 பேரும் வடக்கு, கிழக்கை பூர்வீகமாக கொண்ட தமிழர்கள் 52,052பேருமாக 1,55,674 பேர் உள்ளனர். கண்டி மாவட்டத்தில் ஒன்றரை இலட்சம் தமிழர்கள் இருந்த போதிலும் - மொத்த சனத்தொகையில் 12.2 வீதம் இருந்த போதிலும் - அவர்களால் தங்களுக்கென்று ஒரு பிரதிநிதியை ஏன் பெற்றுக்கொள்ள முடியவில்லை? இந்த தோல்வியில் ஒரு பாடத்தை கற்க வேண்டுமாக இருந்தால் அங்குள்ள முஸ்லிம்களின் அரசியல் விவேகத்திலிருந்து தமிழர்கள் கற்பதற்கு நிறையவே உள்ளன. கண்டியில் உள்ள தமிழர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக வேறு இன நாடாளுமன்ற உறுப்பினர்களையே நாடி செல்வ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

கம்பஹா மாவட்டத்தில் கூட கணிசமான தமிழர்கள் வாழ்கின்றனர். கம்பஹா மாவட்டத்திற்குட்பட்ட நீர்கொழும்பையும் அதனை அண்டிய பகுதிகளிலும் இலங்கைத்தமிழர்கள் 65,302 பேரும் மலைய கத்தமிழர்கள் 7,621 பேருமாக மொத்தம் 72,923 பேர் நிரந்தர குடியிருப்பாளர்களாக உள்ளனர். அவர்கள் அரசியல் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட்டால் தங்களுக்கான ஒரு பிரதிநிதியை பெற முடியும்.

இது தவிர வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம் மக்களின் வியூகம் வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது.

2 இலட்சத்து 66 ஆயிரத்து 975 வாக்கா ளர்கள் உள்ள வன்னி மாவட்டத்தில் முஸ்லிம்களில் ஆகக்கூடியது 30 ஆயிரம் வாக்காளர்களே உள்ளனர். 2 இலட்சத்து 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களை கொண்ட தமிழர்கள் மூன்று பிரதி நிதிகளை பெற்ற அதே வேளை 30 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட முஸ்லிம் மக்கள் மூன்று பிரதிநிதிகளை பெற்றிருக்கிறார்கள். இது முஸ்லிம் மக்களின் தவறல்ல. அவர்களின் அரசியல் வியூகம், விவேகம் என்றுதான் சொல்ல வேண்டும். வன்னிமாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் வெற்றிபெற்ற. ரிஷாத் பதியுதீன் பெரும்பான்மையாக தமிழர்களின் வாக்குகளி லேயே வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்க தாகும். இலங்கையில் உள்ள முஸ்லிம்களில் ஒருவர் கூட தமிழ் வேட்பாளர் ஒருவருக்கு வாக்களித்தாரா என்று தெரிய வில்லை. ஆனால் அம்பாறை, மட்டக்களப்பு திருகோணமலை, வன்னி மாவட்டங்களில் உள்ள தமிழர்கள் பலர் முஸ்லிம் - சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்த அதேவேளை, தமிழ் வேட்பாளர்கள் யாருக்கும் முஸ்லிம், சிங்கள வாக்காளர்கள் வாக்களித்தனர் என்ற வரலாறு இல்லை. அத்தகைய விழிப்புணர்வு ஏனைய இனங்களுக்கு இருக்கும் அளவிற்கு தமிழ் மக்களிடம் ஏன் அற்றுப் போய்விட்டது என்பதை தமிழர் சமூகம் நன்றாக ஆராய வேண்டும்.

அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் 75 வீதமாக உள்ள தமிழர்கள் 3 பிரதிநிதிகளைப்பெற்ற அதேவேளை 25 வீதமாக உள்ள முஸ்லிம்கள் இரு பிரதிநிதிகளைப்பெற்றுள்ளனர். இவர்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட ஹிஸ்புல்லா பெரும்பான்மையான தமிழர்களின் வாக்குகளினாலேயே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

அம்பாறை மாவட்டத்தில் 44 வீதமாக உள்ள முஸ்லிம்கள் 4 பிரதிநிதிகளை பெற்றிருக்கிறார்கள். 20 வீதமாக உள்ள தமிழர்கள் ஒரு பிரதிநிதியை மட்டுமே பெற்றிருக்கிறார்கள்.

அரசியல் விழிப்புணர்வு மட்டுமல்லாது இன்று கல்வித்துறையிலும் பொருளாதார சமூக துறைகளிலும் முஸ்லிம் மக்களின் முன்னேற்றம் என்பது வியக்கத் தக்க அளவு வளர்ந்து இருக்கிறது.




றிஷாத் பதியுதீன்

1978ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட மாவட்ட ரீதியான தேர்தல் முறையில் வாக்குகளின் மகிமையையும் முக்கியத்துவத்தையும் முஸ்லிம் சமூகமே சரியாக புரிந்து கொண்டு செயற்பட்டு வருகிறது. அவர்கள் அந்த வாக்குரிமையையே தமது அரசியல் இலக்கை அடைவதற்கான ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். முஸ்லிம் மக்களின் இந்த எழுச்சிக்கு காரணம் மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் அஷ்ரப் என்றுதான் சொல்ல வேண்டும்.

அது போன்று கல்வி, பொருளாதார துறைகளிலும் தமிழர் களை விட முஸ்லிம் மக்கள் பல மடங்கு உயர்ந்து நிற்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.


குமாரகுருபரன்

1977ஆம் ஆண்டு வரை முக்கியமாக கிழக்கு மாகாணத்தில் கைத்தறி போன்ற உள்நாட்டு உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் ஈடுபாடு காட்டிவந்த முஸ்லிம் சமூகம் இன்று கல்வித்துறையில் காட்டிவரும் ஆர்வம் என்பது வியக்கும் வண்ணம் உள்ளது. இலங்கை நிர்வாக சேவை மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவைதுறைகளில் தெரிவு செய்யப்படுபவர்களில் தமிழர்களை விட முஸ்லிம்களே அதிகமாகும்.

இதுதவிர மருத்துவ, பொறியியல்துறைகளில் கூட தமிழர்களை விட முஸ்லிம்களின் வரவு அதிகமானதாகும்.

பொருளாதார ரீதியாக முஸ்லிம் சமூகம் எவ்வாறு முன்னிலையில் உள்ளது என்பதை பார்ப்பதாக இருந்தால் கிழக்கில் இருக்கும் முஸ்லிம் கிராமம் ஒன்றிற்கும் அதற்கு அருகில் இருக்கும் தமிழ் கிராமங்களுக்கும் செல்லும் போது இலகுவாக புரிந்து கொள்ள முடியும்.

காத்தான்குடியிலோ அல்லது ஏறாவூரில் ஏற்பட்டிருக்கின்ற அபிவிருத்திகளையும் பொருளாதார விருத்தியையும் அந்த கிராமங்களுக்கு அருகில் உள்ள தமிழ் கிராமங்களான ஆரையம்பதி அல்லது செங்கலடியில் இல்லை. இந்த வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் இடையிலானதாக இருக்கும்.

எந்த ஒரு சமூகமும் தன்னை உறுதி உள்ள சமூகமாக நிலை நிறுத்திக்கொள்ளுகின்ற போதுதான் உரிமைகளையும் விடு தலையையும் பெற்றுக்கொள்ள முடியும். யூதர்களைப்பற்றி உதாரணத்திற்கு பேசும் தமிழர்கள் யூதசமூகம் தன்னை உறுதிப்படுத்திக்கொண்டமை போல கல்வி பொருளாதார துறைகளில் தன்னைப் பலப்படுத்திக்கொண்டதில் ஒரு வீதத்தினைக்கூட அடையாத நிலையில் யூதர்களை உதாரணமாக பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது என்று சிந்திக்கவேண்டும்.

தமிழர் சமூகம் விடுதலை பெற்ற சமூகமாகத் திகழ வேண்டுமாக இருந்தால் முதலில் அரசியல், கல்வி, பொருளாதார, சமூக ரீதியில் தன்னை பலப்படுத்திக்கொள்ள வேண்டும். அதை விடுத்து எல்லாவற்றையும் இழந்து விட்டு விடுதலை பற்றியோ உரிமை பற்றியோ எப்படிப் பேச முடியும்?

எனவே, எங்கோ இருக்கும் யூதர்களை பற்றி பேசிக்கொண்டிருப்பதை விடுத்து அருகில் இருக்கும் எமது சகோதர இனமான முஸ்லிம் சமூகத்தில் இருக்கும் அரசியல் விழிப்புணர்ச்சியை நாம் படிப் பினையாக கொள்ள வேண்டும் ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த நாடாளுமன்ற அமர்வில் பொன்சேகா கலந்துகொள்வாரா?

கொழும்பு, மே.02

நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நிலையில், ஏற்கனவே திட்டமிட்டபடி அன்றைய தினம் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா மீதான இராணுவ நீதிமன்ற விசாரணையை நடத்துவதா, இல்லையா என்பது குறித்து படைத்தரப்பு ஆராய்ந்து வருகின்றது.

பொன்சேகா மீதான இராணுவ நீதிமன்ற விசாரணையை எதிர்வரும் 4ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அன்றைய தினம் நடைபெறவுள்ள அமர்வில் பொன்சேகா கலந்துகொள்ள வசதியாக, அவர் மீதான விசாரணையை வேறொரு திகதிக்கு மாற்றி வைக்கலாமா என்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். இது குறித்து அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்றும் அவர் சொன்னார். (அ-சி)


## Vacancies

**Receptionist:-**

We are looking for girls below 30 years, who have good knowledge in Computer typing and operating photo copy machine and other office equipments

**Technician:-**

We want a trainee photo copy technician below 30 years with technical and computer background

Both candidates should pass O/L and have good command in English.

**Northern Office Automation**
738, Hospital Road, Jaffna.
0722263778
0714167878

(97503)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**மாரிமுத்து இராசதுரை**

பிறப்பு 13★09★1936

இறப்பு 02★04★2010

கடந்த 02.04.2010 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு அனுதாபம் கூறி எமது துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆனந்தா வீதி,
மானிப்பாய். (97505)

தகவல்:
குடும்பத்தினர்.

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 ★ 07 ★ 1930 | 22 ★ 04 ★ 2000 |



**அமரர் சின்னத்துரை சோமசேகரம்**

(ஓய்வூதியர், யாழ்.மாநகர சபை)

(திதி: 02.05.2010 (சங்கடஹர சதுர்த்தி)

பந்தபாசம் மறந்து பரமனடி சேர்ந்து பத்து ஆண்டுகள் ஆனதுவே ஐயா எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகளே எங்கள் உள்ளத்தில் என்றும் நிலைத்திருக்கும்

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

39/2, புதுவீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (97650)

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா (பேபி) காசிப்பிள்ளை



60/2 யாழ்.இந்துக்கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற முதலியார் காசிப்பிள்ளையின் மனைவி நல்லம்மா காசிப்பிள்ளை 26.04.2010 அன்று கனடாவில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை பார்வைக்கு வைக்கப்பட்டு நாளை (03.05.2010) திங்கட்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: நடேசன்
001416 287 8734 (சி/567205)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# வடமராட்சியில் இரவுத் திருவிழாக்கள் களைகட்டியுள்ளன

பருத்தித்துறை, மே.02

வடமராட்சியில் நீண்ட காலத்துக்குப் பின்னர் இந்து ஆலயங்களில் இரவு நேரத் திருவிழாக்கள் வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றன.

கடந்த பல வருடங்களாக இரவு நேர ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காரணத்தினால் ஆலயங்களில் திருவிழாக்கள் மாலை நேரத்துடனேயே நிறைவு பெற்று வந்தன்.

இரவுநேர ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதை அடுத்து முன்னைய காலங்களைப் போல திருவிழாக்களை உபயகாரர்கள் விமரிசையாக நடத்தத் தொடங்கியுள்ளார்கள். திருவிழாக்களில் வர்ண மின்சார அலங்காரங்கள், சிகரச் சோடனைகள், வாண வேடிக்கைகள் ஆகியவற்றினை காண்க்கூடியதாக இருப்பதுடன் அதிகாலைவரை மேளக் கச்சேரிகளும், இன்னிசை நிகழ்ச்சிகளும் பெரும் செலவுடன் நடத்தப்பட்டு வருகின்றன. (1-190)

# பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி

வலி.வடக்கு, மே.02

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் பெண்கள் அணிகளுக்கு இடையே முதல் தடவையாக கிரிக்கெட் போட்டி நாளை திங்கட்கிழமை அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

கொடிகாமம் கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி. இதில் வெற்றிபெறும் அணி இரண்டாம் சுற்றில் கொக்குவில் இந்து அணியுடன் மோதவுள்ளது.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி எதிர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. இதில் வெற்றிபெறும் அணி இரண்டாம் சுற்றில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியுடன் மோதவுள்ளது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி எதிர் உடுவில் மகளிர் கல்லூரி. இதில் வெற்றிபெறும் அணி இரண்டாம் சுற்றில் உரும்பிராய் இந்துக் கல்லூரியுடன் மோதும்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி. இதில் வெற்றிபெறும் அணி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியுடன் மோதவுள்ளது. (1-86)


## காணி விற்பனைக்கு

பழைய பூங்கா வீதி ஒழுங்கையில் 5½ பரப்புப் காணியும் பெந்தகோஸ் ஒழுங்கையில் 1½ பரப்பு காணியில் மாடி வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0770776434, 0776126887

## தேவை

கட்டட நிர்மாணப்பணிக்கு அடிப்படை தேவையான மூலப்பொருள்கள் (Hardware) உற்பத்தி மற்றும் விநியோக நிறுவனம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு முதலீட்டாளர்கள் தேவை. மேலதிக விவரங்களுக்கு 071[illegible]2869


# ஜொலிஸ்ரார் - பொலநறுவ இன்று மோதுகின்றன

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய கிரிக்கெட் போட்டிகளின் அடிப்படையில் பிரிவு II இற்கான போட்டியில் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் பொலனறுவை மாவட்ட விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (86)

## மரண அறிவித்தல்கள்

### சுஜீந்திரன் தரண்ஜா



மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சுஜீந்திரன்-தாரணி தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வி தரண்ஜா கடந்த (29.04.2010) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சாருஜன், சாருஜா ஆகியோரது பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் சுலோஜனாதேவி, பரராஜசிங்கம்-சறோஜினிதேவி, கனகநாயகம் (ரஞ்சனாஸ் புடைவையகம்), நிர்மலாதேவி, பாலகிருஷ்ணன்-பத்மாஜினிதேவி, சண்முகானந்தன், காலஞ்சென்ற பமிலா மற்றும் அன்னலிங்கம்-திருப்பதி, சேக்கிழார்-வதனி ஆகியோரது பாசமிகு பேர்த்தியும் மதனமோகன், குகதாஸ், வைகுந்தன், கஜேந்திரன், பகீரதன், நிஷாந்தன் (பெஷன் பார்க்), பிரசாந்தன், சுஜாந்தன், ரஜீந்தன், தனோஜன், லதன், மதிவதனி ஆகியோரது பெறாமகளும் தயாபரன், ஜெயராஜ், கார்த்திகா, கம்சாஜினி, கம்சாரமணி, சர்மிளா, சாஜினி, பிரகீர்த்தனா ஆகியோரது மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி இன்று (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஏழாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'தேவிவர்சா',
மல்லாகம். (97644)

தகவல்:
சுஜீந்திரன்-தாரணி (அப்பா, அம்மா)

### வீரசிங்கம் புஸ்பராணி (குப்பிளான்)



குப்பிளான் கம்பித்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வீரசிங்கம் புஸ்பராணி கடந்த 30.04.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நா.வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான் சின்னத்துரை- தங்கராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் சோ.ஜீவரஞ்சினி, வீ.குகநாதன் (ஜேர்மனி- 00492261588070), பா.டஸ்மலா (டென்மார்க்-004559622428), ம.மனோன்மணி (ஜேர்மனி-00495971899533), இ.சாந்தாதேவி, வீ.இதயகுமார் (நோர்வே- 004773945134, றோ.வசந்தமாலா (நோர்வே-0047223 50224), வீ.ஜெயக்குமார் (சுவிஸ் 0041763059268) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு,
ஏழாலை. (சி/567232)

தகவல்:
குடும்பத்தினர்.

### மாணிக்கவாசகர் சிவபாதசுந்தரம்



கரணவாயைப் பிறப்பிடமாகவும், இல.19, மூத்தவிநாயகர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் சிவபாதசுந்தரம் (இளைப்பாறிய பிரதம லிகிதர், விவசாய இலாகா) கடந்த (30.04.2010) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர்- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - மாணிக்கம் தம்பதியரின் அருமை மருமகனும் அமரர் செல்வராணியின் அன்புக் கணவரும் ஏகாம்பரம், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் திருமதி பவளம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், இரத்தினம், அன்னபூரணம், குழந்தைவேலு, சுப்பிரமணியம், இராசம் துரையம்மா, இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் சிவனேசராசா (பிரான்ஸ்), நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரசேகரம் (இளைப்பாறிய பதில்பிரதம பாதுகாப்பு அதிகாரி, யாழ்.பல்கலைக்கழகம்), நீத்தா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் கோணேஸ்வரன் (கனடா), கைலைநேசன் (கனடா), நிறஞ்சன் (அவுஸ்திரே லியா), கஸ்தூரி (கனடா), கிறிஸ்ணா, லக்ஷ்மி (பிரான்ஸ்), சாளினி (கனடா), காயத்திரி (அவுஸ்திரேலியா), கங்கை அமரன் (போலண்ட்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆகேஷின் அருமைப் பூட்ட னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப. 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (97630)

தகவல்:
சிவனேசராசா (மகன்),
சந்திரசேகரம் (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கல் பேசுகிறது!

பாமா ராஜகோபால்

1960களில் ஈழத்துப் புனை கதைத்துறையில் பிரவேசித்த பாமா ராஜகோபால் வடமராட்சி வல்வெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியர்களில் ஒருவராகப் பணிபுரிந்தவர். அத்துடன் கண்டியிலிருந்து வெளிவந்த 'செய்தி' என்ற வார இதழின் ஆசிரியர் பீடத்திலும் கடமையாற்றியவர்.

தற்போது லண்டனில் வசித்துவரும் பாமா ராஜகோபால் ஊடகத்துறையில் தமக்குள்ள ஈடுபாடு காரணமாக 'ஈழகேசரி' என்ற பெயரில் வார மலரொன்றினை லண்டனில் வெளியிட்டு வருகின்றார்.

இவரது சிறுகதைகள் சுதந்திரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும் அக்காலத்து ஈழத்துச் சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ளன.

''சுதந்திரன்'' பத்திரிகையில் 1963ஆம் ஆண்டில் வெளிவந்த அவரது ''கல் பேசுகிறது'' சிறுகதை இங்கு பிரசுரமாகின்றது.

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 147

மெல்லிய மேனியின் மோகனமும், அழகும் புலப்பட்ட அந்த நங்கையை மிகவும் அற்புதமாகக் கல்லில் சமைத்து விட்டான் சிற்பி. வலது கையில் தாமரை மலருடன், துவண்டு வளைந்து நெளிந்து நின்றிருந்தாள். அவள் இடையின் வளைவில் சிங்காரச் சோபை; அவள் உதட்டின் வளைவில் பெருமையின் மலர்ச்சி, மருண்ட நோக்கில் உலகமே மயங்கும் இனிமை, இப்படிப்பட்ட கலை அம்சம் பொருந்திய சிற்பம் அந்தக் கோயிலுக்கே ஒரு பொக்கிஷம் என்பது எல்லோருடைய அபிப்பிராயம்.

கையில் இருக்கும் தடியைக் கீழே தட்டிக் கொண்டே சென்ற பிச்சைக்காரக் குருடன் 'பளிச்' சென்று ஒரு நிழல் தன் சூட்சுமக் கண்ணில் விழவே நடையைத் தளர்த்திக் கொண்டு, மிகவும் ஜாக்கிரதையாக அடி எடுத்து வைத்தான்.

மறுகணம் -

ஒரு பாறாங்கல்லின் ஸ்பரிசம் அவன் தடியில் பட அதே இடத்தில் நிதானமாய் நின்று விட்டான். கொஞ்சநேரம் யோசித்துவிட்டு, தோளில் தொங்கும் மூடையைக் கீழே இறக்கித் தன் ஜாகையை அங்கேயே விரித்துக் கொண்டான்.

அவன் தடியில் தட்டுப்பட்ட அந்தப் பாறாங்கல் அந்த நங்கையின் சிற்பம் திகழும் அலங்கார மேடை என்பது அவனுக்கு எப்படித் தெரியும்? ஆனால் அந்த இடத்தில் அவன் ஜாகையை விரித்துக் கொண்டதற்குக் காரணம் இல்லாமலில்லை. கோயிலுக்கு வரும் பக்தர்கள் எல்லோரும் இந்தச் சிற்ப வாசலின் வழியாகத்தானே வரவேண்டும்? பக்தர்களின் கருணையால் நிறையப் பிச்சை கிடைக்கலாமல்லவா?

தனக்கு முன்னால் சர்வ வியாபியாகப் பரந்து கிடக்கும் அந்த காரத்தைப் பார்த்துக் கொண்டு அலங்கார மேடையில் அவன் சாய்ந்தான்.

அவன் அங்கே ஜாகையை விரித்துக் கொண்டு ஒரு வாரமாகி விட்டது. ஆனால் ஒரு பக்தனின் கருணையாவது அவனுக்குக் கிடைக்கவில்லை. பக்திப் பரவசத்தால் மெய்மறந்த பக்தர்கள் அவனையும் மறந்துவிட்டுப் போய்விட்டார்களோ, என்னமோ! ஆனால், அவர்கள் அந்தக் கலையின் எல்லையைத் தொட்டு நிற்கும் அந்த நங்கையின் சிற்பத்தைப் பார்ப்பதற்கு மட்டும் மறக்கவில்லை.

'அற்புதம்!' - என்று அதைப் பார்த்து ஒருவர் வியந்தார். 'என்ன அழகு!' - என்று நங்கையின் அழகிலே தன்னைப் பறிகொடுத்தான் ஒரு வாலிபன்.


(12 ஆம் பக்கம் பார்க்க.....)

## இயலாமை

சகோதரனே
உன்னால் முடிகிறது
கடைத்தெருக்களில்
இயல்பாய்
நடமாடவும்
விளையாட்டயரங்குகளில்
துள்ளியெழவும்
எவருமேயற்ற
அமானுஷ்ய இடமெதிலும்
நிம்மதியாய்
கண்மூடித் துயின்றிடற்கும்
உன்னால் முடிகிறது
ஆனால்
என்னால் அது
இயல்வதில்லை
தூக்கம்
விழிபிதுக்க
முகிழ்த்திடினும்
திடீரெனத் தலை சாய்க்க
இயல்வதில்லை
இயற்கையின்
மடியதனில் சுதந்திரமாய்த்
தலைசாய்த்து
துயிலத் துடிக்கு மென்மனதில்
ஏக்கமது எனதுள்ளே
இன்னும் கனக்கிறது
தனித்தவளா யெங்கும்
நடமாடக் கூட இங்கு
இயல்வதில்லை!
திடீர்ப்பொழுதுகளில்
அப்படியே
முயன்றிடினும்
இதயமிது பயங்கரமாய்த்
துடித்தபடி !
காலமது மாறிடினும்
மனிதங்களின்
பார்வை வீச்சுக்களிலேதும்
மாற்றமில்லை!
இப்படியே
மீண்டும்......
மீண்டுமாய்....
பீதியுடன்
கலைந்து கரைகிறதென்
உலகம்!
நிதமும் புலரிகள்
மௌனிப்பூடே
எச்சரிக்க
நானும் மௌனித்தபடியே.....
ஏனென்றால்
நானும்
எல்லோர் பாஷையிலும்
'பேதை' எனப்படும்
பெண்ணாய்ப்
பிறந்ததனால்
என் இயலாமைகளும்
தொடர்ச்சியாய்.........

திட் சண்யா, சங்கத்தானை.

# அழகனே! நீராட வாராய்



தூயஅன்புக்கு இவ்வுலகில்' ஈடாக எதுவுமில்லை. பெரியாழ்வார் தன்னை ஒருதாயாகப் பாவனை செய்து கண்ணன் மீது பல பாடல்களைப் பாடியுள்ளார். அன்பு நிலையில் நெருக்கமாக இணைவதற்குக் குழந்தையாகக் கண்ணனைக் கற்பனை செய்து மனம் ஒன்றிப்பாடுகிறார். குழந்தைக் கண்ணனை நீராட அழைக்கும் தாயாக மாறி நின்று பாடுகின்றார். குழந்தையை நீராட்ட வேண்டும் என்ற பரிவால் அவர் பாடல் உண்மையனுபவமாகவே அமைந்து விடுகின்றது.

கண்ணனைத் தெய்வநிலையில் அறிந்த அனுபவத்தோடு இப்புதிய பாவனை அனுபவத்தையும் இணைத்துப் பாடும் பெரியாழ்வார் பாடல்கள் சிறந்த சொற்சித்திரங்களாகவே காட்சி தருகின்றன. கம்சனின் ஆணவத்தையும் வஞ்சப் பூதகியின் வலியையும் அழித்த கண்ணனே என முதலில் அழைக்கின்றார். பின்னர் அவனைக் குழந்தையாக உருவகித்துப் பாடுகின்றார்.

''கஞ்சன் புணர்ப்பினில் வந்த
கடிய சகடம் உதைத்து
வஞ்சகப் பேய்மகள் துஞ்ச
வாய்முலை வைத்த பிரானே
மஞ்சளும் செங்கழு நீரின்
வாசிகை யும்நாறு சாந்தும்
அஞ்சனமும் கொண்டு வைத்தேன்
அழகனே நீராட வாராய்!''

பாடலில் முதலிரு அடிகளும் கண்ணனின் அருட் செயல்பற்றிக் கூறுகின்றது. ஏனைய இரு அடிகளும் நீராடுவதற்கும் அலங்காரம் செய்வதற்குமான பொருள்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. தன் குழந்தையை நீராட்டுவதற்கு முன்னர் தேவையான எல்லாப் பொருள்களையும் எடுத்து வைக்கும் செயற்திறமுள்ள தாயாகவே பெரியாழ்வார் மாறி நிற்கின்றார். மஞ்சள், செங்கழு நீரின் வாசிகை, நாறு சாந்து, அஞ்சனம் என எல்லாவற்றையும் தாய் எடுத்து வைத்துவிட்டுக் கண்ணக் குழந்தையைக் கூப்பிடுகின்றாள். பாடல் நீராட்டத்திற்குப் பயன்படுத்திய பொருள்கள் பற்றிய பதிவையும் செய்துள்ளது.

சிறு குழந்தைகளை நீராட்டும் போது அவர்களுடைய நாவையும் சுத்தம் செய்ய வேண்டும். அவ்வாறு சுத்தம் செய்வதற்குப் பசுமஞ்சளே பயன்படுத்தப்பட்டது. நாக்கிலே மஞ்சளைப் பூசி கையினால் வழித்துச் சுத்தம் செய்யும்போது அழுக்குகள் அகன்றுவிடும். குழந்தையின் பேச்சுத் தெளிவாக அமைவதற்கு இச்சுத்தம் அவசியமானது.

செங்கழுநீர்ப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை 'வாசிகை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் நறுமணம் பொருந்திய சந்தனமும் மேனியிலே பூசுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. கண்களுக்குத் தீட்டுவதற்காகக் கண் மையும் இருந்தது. கண் மை குழந் தையின் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். புறத்தூசிகள் கண்ணிலே [illegible] தடுக்கும். அழகை[illegible] நறுமணமும் குளிர்ச்சியும் தரும்.

இலக்கியக் காட்சி 39

இவையெல்லாவற்றையும் நீ அணிந்துகொண்டால் அழகாக இருப்பாய் என்று கூறி 'அழகனே நீராட வாராய்' என ஆசையோடு கூப்பிடுகின்றார்.

கண்ணனுடைய திருவவதாரச் சிறப்பு என்னும் பகுதியில் பெரியாழ்வார், யசோதை கண்ணனை நீராட்டும் காட்சியைக் காட்டுகின்றார்.

''கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய நா வழித் தாளுக்கங் காந்திட
வையம் ஏழும் கண்டாள் பிள்ளை
வாயுளே''

யசோதையைப் போலத் தானும் கண்ணனை நீராட்டப் பெரியாழ்வார் ஆசைப்படுகின்றார். தான் யசோதையைப் போல வளர்ப்புத் தாயாக மாறிப் பணிசெய்ய விரும்புகிறார்.

மஞ்சன மாட்டுவதற்குரிய பொருள்கள் எல்லாவற்றையும் ஓரிடத்திலே கொணர்ந்து வைத்துவிட்டுக் காத்திருக்கும் உணர்வைத் தனது பக்தியுணர்வாகப் பாடும் முறைமை தனித்துவமானது. [illegible] நிலையே பிற்காலத்தில் 'பிள்ளைத்தமிழ்' என்னும் இலக்கியவடிவம் தோன்றுவதற்கும் ஊற்றுக் காலாக அமைந்தது.

அக்காலக் குழந்தைவளர்ப்பு பற்றிய பண்பாட்டு நடைமுறை களும் பாடலில் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. சொற்பிரயோகங்களில் வாசிகை, சாந்து, அஞ்சனம் என்னும் சொற்கள் பண்பாட்டை விளங்கும் சொற்களாகப் பாடலிலே காணப்படுகின்றன. குழந்தைகளுக்காகத் தொடுக்கப்படும் மாலையில் செங்கழுநீர்ப்பூ சிறப்பிடம் பெற் றுள்ளது. தெய்வ நிலையில் கோயில்களிலே நடைபெறும் திருமஞ்சனம் சிறப்பாக அதற்கு நியமிக்கப்பட்டவரால் மட்டுமே செய்யப்படும். ஆனால் பெரி யாழ்வார் அந்த மரபை மாற்று கின்றார். கண்ணக் குழந்தையை நீராட்டலாம் எனப் புதியதொரு வழியைக் குறிப்பிடுகிறார். கண்ணனின் உருவத்திலே ஆழ்ந்து ஈடுபடுவதற்கு அவனைக் குழந்தை வடிவில் பாவனை செய்து வழிபடுவதே சிறந்ததென வழிகாட்டுகின்றார். அதனை அனைவரும் பின்பற்றிக் கண்ணனிடம் பக்திகொள்ளலாம்.

★★★★★



கலாநிதி
மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 111

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| | ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| 14 | | | ■ | 15 | | ■ | 16 |
| 17 | | | 18 | ■ | 19 | | |
| | ■ | 20 | | 21 | | ■ | |
| ■ | 22 | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. கம்பன் மகனின் மனம் கவர்ந்தவள்.
5. இரு வந்தால் பத்தும் பறந்திடுமாமே!
7. பிழை அல்ல.
8. இடையூறு.
9. கோபம்.
10. சக்தி/ வலிமை.
11. இந்தியா.
13. துள்ளி ஓடும் புள்ளித் தோல் மிருகம்.
14. நஞ்சு.
15. மரம்.
17. கணவன்/ மனைவி.
19. தலைவன் மனம் கவர்ந்தவள்.
20. அறுக்கும் கருவி.
22. சந்திரன்.
23. முதுகு வளைவால் வருவது.

### மேலிருந்து கீழ்

1. நடக்கக் கூடாத நிகழ்வு.
2. இற.
3. முகம்.
4. உறுதி.
5. திருவள்ளுவர் கூறும் கடவுள்.
6. சக்கரம்.
9. தில்லை.
12. சோறுக்குச் சேர்த்து உண்பது. தனியாகவும் குடிக்கலாம்.
13. காற்று/ வாயு.
16. கவிதையை யாப்பவன்.
18. பூட்டான் தலைநகர்.
21. ஒன்றுக்காக உயிரைக் கொடுப்பது.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 111**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 12.05.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.111 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 16.05.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 109 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1)விகடகவி. (5) அது. (7)வட. (8)வியாபகம். (10) சால்பு. (12)திரும்பு. (13) தக. (15) பல்லவி. (17) சத. (18)அருவி. (19) சந்தடி. (20) சக. (21) ஆம். (22) தில்லானா. (23) பாம்பு.

**மேலிருந்து கீழ்**
(1)விவசாயி. (2)கடல். (3) கவி. (4) வியாதி. (5) அகம். (6) தும்புத்தடி. (9) பருகு. (11) புதல்வி. (14)கல. (15) பருகல். (16)விசம். (17) சதகம். (18)அசதி. (21) ஆனா.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 109 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** செல்வி செ.சங்கவி,
பழைய சந்தை, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு** ஜில்பேட் தர்சானன்,
A/L2011, ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

**3 ஆம் பரிசு** லக்சனா அம்பிகைராசா,
யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்,
கைதடி தெற்கு.

**4 ஆம் பரிசு** வ.சிவப்பிரகாசம்,
இல. 99, ஸ்டேசன் வீதி,
கொக்குவில்.

**5 ஆம் பரிசு** திரு.த.ஆனந்த ஆழ்வார்,
இல.75, தம்பசெட்டி வீதி, புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **தம்பு பாலசுப்பிரமணியம்,**
சிறிலங்கா வீதி, உடுவில், சுன்னாகம்.

(2) **கு.ஒஷானி,**
முதலியார் கோவிலடி,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

(3) **வே.தர்மலிங்கம்,**
அரசடி வீதி, தாவடி வடக்கு,
கொக்குவில்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# கல் பேசுகிறது!

( 11 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

'ஆஹா, என்ன வேலைப்பாடு!' - என்று வியந்தார் ஒரு ரசிகர்.

'ஆ! அந்தக் கண்களே போதுமே!' - இப்படி ஒருவர். 'சிக்' என்று மூடியிருக்கும் தன் கண்களைக் கசக்கிக் கொண்டு மிகவும் கஷ்டப்பட்டு எழுந்து நின்றான். மேடைக்கு மேலே தடவிப் பார்த்தான். இரண்டு பாதங்கள் தட்டுப்பட்டன. ஆம், ஒரு பெண்ணின் பாதங்கள். ஆனால் அவனுக்குகென்னவோ வெறுங் கல்லாய்த்தான் தோன்றின.

'வெறுங்கல்!' - என்று சொல்லிச் சிரித்துக் கொண்டான். வெறுப்போடு கிளம்பிய அவன் சிரிப்பு உலகத்தையே கேலி பண்ணும் தோரணையில் இருந்தது.

அவன் திரும்பவும் தன் இருப்பிடத்தில் அமர்ந்து கொண்டு, தனக்கு முன்னால் காசு வாங்குவதற்கென்று விரித்திருந்த துணியைத் தடவிப் பார்த்தான். அதில் இரண்டு தினங்களுக்கு முன், ஒரு யுவதி சிற்பத்தில் எறிந்துவிட்டுப் போன மல்லிகைப்பூ மட்டும் அவனைப் போலவே வாடித் துவண்டு கிடந்தது. அதை எடுத்து அப்பால் எறிந்துவிட்டு ஒரு பெருமூச்சு விட்டான். அவன் சுவாசத்தின் வேகத்தில் மல்லிகைப் பூ கருகி இருக்க வேண்டும்.

எலும்பும் தோலுமாய் போய்விட்ட அவன் விகாரமான உருவம் அலங்கார மேடையில் சாய்ந்து கொண்டது.

அன்று வெள்ளிக்கிழமை; அடியார்கள் அதிகமாய் வரும் தினம். அவனும் ஒரு புது உற்சாகத்தோடு தனக்கு முன்னால் இருந்த துணியை நன்றாக விரித்துக் கொண்டான்.

மேளத்தின் ஒலி, குழந்தைகளின் அழுகை ஒலி, பூவின் மணம் இவைகள் எல்லாம் அயர்ந்து போய்விட்ட அவன் உயிருக்கு நம்பிக்கை ஊட்டின.

அன்று கோயிலுக்கு வந்த ஒவ்வொருவரும் அவன் பக்கத்தில் நின்று அவன் சாய்ந்திருந்த மேடைக்கு மேலே உள்ள சிற்பத்தைப் பார்த்தார்கள். சிற்பத்தைச் செய்த சிற்பியை மிகவும் புகழ்ந்துவிட்டுப் போனார்கள். ஆனால் அந்தப் பிரமாண்டமான சிற்பத்தின் காலடியில் சுருண்டு கிடந்த அவன் உருவத்தை எவரும் கவனிக்கவில்லை. அருவம் அஸ்தமித்துவிட்டது. தன்னைச் சுற்றி நிரந்தரமாகக் குடிகொண்டிருந்த இருளில் அவன் சோர்ந்து கிடந்தான்.

இப்பொழுது அவன் முன்னால் -

பேராசிரியர் கணேசலிங்கம் நின்று கொண்டிருந்தார். அவர் ஒரு சிறந்த ரசிகர். கலை வளம் கொழிக்கும் பல கோவில்களின் சிற்பங்களை அவர் பார்த்திருக்கின்றார். ஆனால் அந்த மேடையில் இருக்கும் சிற்பத்தைப் போல் எங்கும் பார்த்தில்லை. அசையாமல் அதையே பார்த்துக் கொண்டிருந்தார்.

கபோதி தன் தலைக்குமேல் கைகொண்டு, 'இந்த ஏழைக்குக் கருணை காட்டுங்கள்! - என்று ஈனஸ்வரத்தில் குரல் கொடுத்துக் கொண்டிருந்தான். பேராசிரியர் காதுகளுக்கு அவன் குரல் விழுவதற்கு முன்பாகவே, நாயகன் வரவுக்காகக் காத்திருந்த அந்த நங்கையின் குரல் விழுந்துவிட்டது.

ஆராய்ச்சிக் கண்களோடு அந்தச் சிற்பத்தின் அடியிலிருந்து முடிவுவரை அங்கம் அங்கமாக ஆராய்ந்தார். பேராசிரியர். பிறகு தம் அருகில் நின்ற மாணவரிடம் சொன்னார்; 'உயிரற்ற கல்லை ஒரு சிற்பி பார்த்தான். அந்தக் கல்லிற்கு ஓர் உருவம் கொடுத்தான். அது மட்டுமல்ல அந்த உருவத்திற்குள் ஓர் உயிரையும் புகுத்தி விட்டான் பார்!'

மாணவன் பலமாகத் தலையை ஆட்டினான்.

'ஐயா. கருணை காட்டுங்கள்!' - என்று கபோதி கத்திக் கொண்டிருந்தான். ஆனால் கொட்டும் மேளமும், கூத்தும் கும்மாளமும் அவன் குரலை அமுக்கி விட்டன. அதோ ஆண்டவன் பவனி ஆரம்பித்துவிட்டார். பேராசிரியரும் மாணவனும் அதோடு கலந்து மறைந்து போனார்கள்.

தள்ளாடிக் கொண்டு கிழவன் எழுந்து நின்றான். அவன் தலை சுழன்றது. காது அடைத்துக் கொண்டது. ஏதோ அரைகுறையாகப் பிதற்றிக் கொண்டே பேராசியர் ஆராய்ந்த சிற்பத்தை தடவிப் பார்த்தான். உயிர் இருக்கிறதா என்று. ஆனால் கல்லைத் தவிர அவன் கண்டது வேறொன்றுமில்லை.

தன் தலைமயிரைப் பிய்த்துக் கொண்டு உயிரற்ற இந்தக் கல்லில் உயிரைப் பார்த்து விட்டார்கள்! தேய்ந்து போன என் உடலில் ஊசலாடும் உயிரை யார் பார்த்தார்கள்? என்றான்.

திரும்பவும் அவன் அந்தச் சிற்பத்தை அசைத்துப் பார்த்தான்.

அது அசைவதாகத் தெரிவதில்லை.

கல், கல்!

அசையாத இந்தக் கல்லில் உயிர். அசையும் என்னுடல் பிணம்; என்று கத்திக் கொண்டு கீழே பாய்ந்தான்.

பொழுது புலர்ந்து பிணமாகிக் கிடந்த அவன் உடலை ஒருவன் குப்பை வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தான்.

அதேசமயம் - மனோரம்மியமான அந்தக் காலை வேளையில் ஒரு கப் காப்பி அருந்திவிட்டு, கல் பேசுகிறது என்ற தலைப்பில் பேராசிரியர் கணேசலிங்கம் ஒரு கட்டுரை எழுதிக் கொண்டிருந்தார்.

★★★★★★★★★★★★★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## மே 02 முதல் 08 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

இந்த வாரம் எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். ஆன்மீக விடயங்களில் நாட்டம் செல்லும். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். பண வரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். உறவினர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். நட்பு வட்டம் விரிவடையும்.குருவும், சனியும் சாதகமான நிலையில் இருப்பதால், பணப்புழக்கம் தேவையான அளவுக்கு இருக்கும். குடும் பத்தினரின் தேவைகளைக் குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். புதிய வேலை முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. வளர்ந்த பிள்ளைகள் வழியில் வரும் வருமானத்தால், வீட்டில் வசதி, வாய்ப்புகள் கூடும். மேலும், சுக்கிரன் இரண்டாம் இடத்தில் ஆட்சி பலத்துடன் இருப்பதால், பெண்கள், பயணங் கள், பொழுதுபோக்கு விடயங்கள், விருந்து உபசரிப்புகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடை வர். கொடுக்கல் வாங்கல்கள் குறைவின்றி நடைபெறும். எதிர்பார்த்த கடனுதவிகள் கிடைக்கும். ஜென்மராசியில் [illegible] இருப்பதால், கோபம், வேகத்தை அதிகரிக்கும் சம்பவங்கள் அடிக்கடி நடக்கலாம் என்ப[illegible], பொறுமையாகச் செயற்பட வேண்டும். அரசியல்வாதிகள் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். பணிபுரிவோர் அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். உதவிகள் கிடைக்கும். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும். அலைச்சல், திரிச்சல் உண்டு. வீண் செலவு நேரும்.

### இடபம்

இந்த வாரம் ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் வகையில் அன்புத் தொல்லைகளை சந்திக்கலாம். நம்பிக்கை குறைந்து, அவ நம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளை, அலைச்சல்களை சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல் அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம்.ஐந்தாம் இடத்தில் வக்கிரகதியில் இருக்கும் சனியால், குடும்பத்தினருடன் பிள்ளைகளுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். மற்றவர்கள் சொல்வதை நம்பாமல், எதிலும் தீர விசாரித்து முடிவுக்கு வருவது நன்மை தரும். பத்தாமிடத்தில் குரு இருப்பதால், தொழில் ரீதியான விடயங்களில் கவனம் அவசியம். சிலர் உங்களை மாட்டிவிட்டு வேடிக்கை பார்க்கலாம். சூரியன், புதன் சாதகமாக இருப்பதால், திட்டமிட்ட காரியங்கள் மட்டுமின்றி, திட்டமிடாத காரியங்களும் முடிவுக்கு வரும். அரசியல், மருத்துவம், அரசாங்கம், அதிகாரிகள் தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். உறவினர்கள், நண்பர்கள், மாமன், மைத்துனர்கள் உதவிகரமாக இருப்பர். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். நண்பர்கள் உதவி கிட்டும்.

### மிதுனம்

இந்த வாரம் அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். உறவினர்கள் வழியில் தொல்லைகள் நேரும். பிள்ளைகள் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். திடீர் பயணங்கள் செல்லலாம்.செவ்வாய் சாதகமான நிலையில் இருப்பதால், எதையும் சமாளிக்கும், பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வல்லமை அதிகரிக்கும். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட சிலர் மனம் மாறி உதவி செய்யலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போர் கூடுதல் வருமானம் பெறலாம். நிலம், பூமி விவகாரங்கள் சாதகமாக முடியும்.சூரியன் விரய ஸ்தானத்தில் இருப்பதால், தந்தை வழியிலும், மருத்துவ காரியங்களுக்காகவும் கணிசமான பணத்தைச் செலவிடலாம். அரசு தொடர்பான காரியங்கள் எளிதில் முடியாமல் இழுத்தடிக்கலாம். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். சுக்கிரன் சாதகமான நிலையில் இருப்பதால், பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதிலும், விலை உயர்ந்த பொருள்களை வாங்கிச் சேர்ப்பதிலும் நாட்டம் செல்லும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்களால் ஆறுதல் அடைவீர்கள். தன, குடும்ப, வாக்கு ஸ்தானமான இரண்டாம் இடத்தில் கேது இருப்பதால், ஒருவரைப் பற்றி மற்றவர்களிடம் விமர்சிப்பதையும், கடும்வார்த்தைகள் பேசுவதையும் தவிர்க்க வேண்டும். பணவரவுகளைப் பெறலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

### கடகம்

இந்த வாரம் குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பணவரவுகளைப் பெறலாம். சிரமம் இல்லாமல் சுலபமாக சிலவேலைகளை முடித்துக் கொள்வீர்கள். கடன்மிகுதிகளை, கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். மூன்றாம் இடத்தில் சனியும், ஆறாம் இடத்தில் ராகுவும் சாதகமான நிலையில் இருப்பதால், கடந்த காலத்தில் உங்களுக்குத் தொல்லை கொடுத்தவர்கள் எல்லாம் இப்போது அடங்கியிருப்பர். சோர்வு, சோம்பலின்றி எப்போதும் பரபரப்பாக செயற்பட்டுக் கொண்டிருப்பீர்கள். அதற்கேற்ற வகையில் உங்களின் ஆரோக்கியம் உற்சாகம் தரும். நீண்ட நாள்களாக இழுத்தடித்து வட்டி கொடுத்து கவலைப்பட்ட கடன் பிரச்சினைகள் எல்லாம் தீர்விற்கு வரும். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர்.சுக்கிரன் லாப ஸ்தானத்தில் ஆட்சி பலத்துடன் இருப்ப தால், பொன், பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். உறவுப் பெண்கள், சகோதரிகள், தாய் வழியில் உதவிகள் கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங் கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க கணிசமான பணத்தை செலவிடுவீர்கள். சூரியன் சாதகமான நிலையில் உள்ளதால், அரசியல், மருத்துவம், அதிகாரிகள், தந்தை தொடர்பான விடயங்கள் சாதகமாக இருக்கும். விமர்சனங்களை எதிர்கொள்ளலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். வீண் பயம் உண்டாகும். குழப்பங்கள் கூடும்.

### சிங்கம்

இந்த வாரம் எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். பணவரவுகளைப் பெறலாம். சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செல வுகளைச் சந்திக்கலாம். திட்டமிட்ட காரியங்களைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிலர் கேட்ட உதவிகளைச் செய்யாமல் அதிருப்திக்கு ஆளாகலாம்.குரு சாதகமான நிலையில் இருப்பதால், மற்றவர்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படும் வகையில் எதிலும் நடந்து கொள் வீர்கள். விலை மதிப்பு மிக்க பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். வருமானத்தை அதிகரிப்பதில் நாட்டம் செல்லும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். சுபகாரிய நிகழ்ச்சி களுக்காக கணிசமான தொகையைச் செலவிடலாம்.இருந்தாலும், சனி இரண்டாம் இடத்தில் இருப்ப தால், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் அவசியம். மற்றவர்களை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். குடும்பத்தினரிடம் குதர்க்கமான பேச்சுக்களைத் தவிர்க்கவும். விரய ஸ்தானத்தில் செவ் வாய் இருப்பதால், வீடு, மனை தொடர்பான வகையிலும், கட்டடங்கள் கட்டுவதாலும், சுய தொழில் புரிவோர் புதிய இயந்திரங்கள் வாங்குவதாலும், சகோதரர்கள் மற்றும் பங்காளிகள் வகையிலும் செலவுகளைச் சந்திக்கலாம். சுக்கிரன் பாதகமாக இருப்பதால், பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவேண்டும். திடீர் பயணங்களால் செலவுகள் அதிகரிக்கும். கேளிக்கை, கொண்டாட்டங் களிலும் நாட்டம் செல்லும். மாற்று மதத்தினர் அனுகூலமாக இருப்பர். புதிய முயற்சிகளில் வெற்றி கிட் டும். பணவரவுகளைப் பெறலாம். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு. கடன் மிகுதிகள் வசூலாகும்.

### கன்னி

இந்த வாரம் ஒன்றுக்கு இரு மடங்காகச் செலவுகளைச் சந்திக்கலாம். தேவையற்ற விடயங்களுக்காக சிலரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். ஆன்மீக விடயங்களில் நாட்டம் செல்லும். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். சிறிய வேலைகளுக்காகப் பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். ஜென்மத்தில் சனியும், ஆறாம் இடத்தில் குருவும் இருப்பதால், தெம்பு, தன்னம்பிக்கை குறைந்து, செயற்பாடுகளில் சுறுசுறுப்பில்லாத தன்மை நிலவும். எந்த வேலையும் எடுத்த வேகத்திற்கு நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். தொழில் ரீதியான விடயங்களும் திருப்தி தரும் வகையில் இருக்காது. ஆறாம் இடத்தில் குரு இருப்பதால், பணப் பிரச்சினைகளை சந்திக்கலாம். கடன் விவகாரங்களில் சிரமங்கள் ஏற்படுவதோடு, மன அமைதியும் பாதிக்கப்படலாம். தாய் உடல் நலன் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம்.சுக்கிரன் சாதகமான நிலையில் இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், சகோதரிகள், உறவுப் பெண்கள் வழியில் உதவிகள் கிடைத்தல், விருந்து, உபசரிப்புகளால் மகிழ்ச்சி போன்ற நல்ல பலன்களைக் காணலாம்.செவ்வாய் லாப ஸ்தானத்தில் இருப்பதால், நிலம், பூமி தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். சகோ தரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் இருக்கும். பழைய கட[illegible] சிலர் புதிய கடன்கள் வாங்கலாம். செலவுகள் கூடும். மன அமைதி பாதிக்கலாம். [illegible]

### துலாம்

இந்த வாரம் ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். புதியவர்களின் சந்திப்பு நிகழும். எதிர்பாராத செலவுகளைச் சந் திக்கலாம். சில வேலைகளுக்கு ஒன்றுக்கு பல முறை அலையலாம். தொழில் ரீதியா கவோ அல்லது வேறு வகையிலோ சிலருக்கு உதவிகள் செய்யலாம். விரய ஸ்தானத்தில் சனி இருப்ப தால், பணம் வந்த வேகத்தில் கரைந்து கொண்டிருக்கும். அந்தச் செலவு, இந்தச் செலவு எனப் பல செலவுகள் உங்களைத் துரத்திக் கொண்டிருக்கும். அடுக்கடுக்காக குவியும் வேலைகளால் அவதிப்படலாம். தூக்கமில்லாமல் பல நேரங்களில் கடுமையாகப் பணியாற்ற நேரிடலாம். சுயதொழில் புரி வோர் சரியான வேலையாள்கள் கிடைக்காமல் சங்கடப்படலாம். வீடு, மனை தொடர்பான வகை யிலும் செலவுகளைச் சந்திக்கலாம். இருந்தாலும், குரு சாதகமாக இருப் பதால், கடன்மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்கி பற்றாக்குறையைச் சரி செய்வீர்கள். சிறிது, சிறிதாகச் சேமித்த பணம் மொத்தமாகக் கிடைத்து அவற்றை முக்கிய காரியம் ஒன்றுக்குப் பயன் படுத்துவீர்கள். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். ஏழாம் இடத்தில் சூரியன் இருப்பதால், தம்பதியர் இடையே சில பிரச்சினை களால் நல்லிணக்கம் பாதிக்கப்படலாம். சிலர் தொழில் நிமித் தம் குடும்பத்தினரைப் பிரியலாம். பரபரப்பாகச் செயற்படுவீர்கள். பணவரவுகளைப் பெறலாம். செல வுகள் கூடும். தடை, தாமதங்கள் நேரும்.

### விருச்சிகம்

இந்த வாரம் திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் ரீதியான ஒப் பந்தங்கள் போடலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். அடகு வைத்த பொருள்களை மீட்கலாம். நண்பர்களுடன் கொண் டாட்டங்களில் பங்கேற்பீர்கள். புதியவர்கள் அறிமுகம் கிடைக்கும்.சனி சாதகமான நிலையில் இருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விஷ யங்களில் சாதகமான நிலைமை காணப்படும். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியங் களில் எல்லாம் பெரிய அளவில் ஆதாயம் கிடைக்கலாம். வழக்கு விவகாரங்களில் வெற்றி கிடைக்கும். குடும்ப உறுப்பினர்களின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படும். ஆறாம் இடத்தில் சூரியன் இருப்பதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விஷயங்கள் எல்லாம் அனுகூலமாக அமையும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். அல்லது அவர்களுக்கு தேவையானதை செய்வீர்கள்.

ஏழாம் இடத்தில் சுக்கிரன் இருப்பதால், பெண்கள், தாய், உறவுப் பெண்கள் வழியில் தொல்லைகளைச் சந்திக்கலாம். வாகனங்கள் திடீரென பழுதாகி கணிசமான பணத்திற்கு செலவு வைக்கலாம். பயணங்களால் அலைச்சல்கள் உண் டாகும். செவ் வாய் சாதகமற்ற நிலையில் தேக ஆரோக்கிய விஷயங்களில் அக்கறை அவசியம். செலவு, அலைச்சல் உண்டு. பரபரப்பாக செயல்படுவீர்கள். உதவிகள் கிட்டும்.

### தனுசு

இந்த வாரம் கலகலப்பான அனுபவங்களை எதிர் கொள்ளலாம். நண்பர்களு டன் பார்ட்டி, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். சில பிரச்சினைகளை நினைத்து அதிக பயம் கொள்வீர்கள். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறை வேறும். பல நாட்களாக வராமல் இருந்த பணவரவுகள் வரலாம். விருந்து, உபசரிப்புகளால் சந்தோஷம் அடைவீர்கள்.மூன்றாம் இடத்தில் குரு இருப்பதால், எந்த விஷயமும் எதிர்பார்த்தது போல நடக் காமல் முட்டுக் கட்டைகள் உருவாகலாம். பண விஷயங்களிலும் தட்டுப்பாடான நிலைமை காணப்படும். சுபகாரிய விஷயங்களில் பின்னடைவுகளைச் சந்திக்கலாம்.மேலும், ஆறாம் இடத்தில் சுக்கிரன், ஐந்தாம் இடத்தில் சூரியனும் சாதகமற்ற நிலையில் இருப்பதால், பெண்கள், தேவையற்ற பயணங்கள், ஆடம்பர ஈடுபாடுகள், சகோதரிகளின் தேவைகளை நிறைவேற்றுதல், ஆடம்பரப் பொருட்கள் வாங் குதல் போன்ற வழிகளில் செலவுகள் நேரும். பணிபுரியும் பெண்கள் கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். தந்தை தொடர்பான விஷயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அரசு காரியங்கள் இழுபறிக்குப் பின்னரே முடிவுக்கு வரும்.ஜென்மத்தில் ராகுவும், ஏழாம் இடத்தில் கேதுவும் இருப்பதால், மற்றவர்களை விமர்சித்து அவர்களின் ஏச்சு பேச்சுக்களுக்கு ஆளாகலாம். வேண்டாத விவகாரங்களில் தலையிட்டு மன உளைச்சல்களுக்கு ஆட்படலாம். மாற்று மதத்தினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதும் தள்ளிப் போகலாம். சகோதரர்கள், பங்காளிகள் வகை யிலும் அனுகூலம் இல்லை. ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். புதிய பொருட்கள் வாங்கலாம். செலவு, அலைச்சல் உண்டு.

### மகரம்

இந்த வாரம் சந்திராஷ்டமம் என்பதால், மந்தம், மறதி, கவனக்குறைவு, அலைச் சல், திரிச்சல் போன்றவற்றைச் சந்திக்கலாம். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் நீங்களும் கலந்து கொள்ளலாம். வெளியூர் பயணங்கள் செல்லலாம். இரண்டாம் இடத்தில் குரு இருப்பதால், குடும்பத்தில் பற்றாக்குறை நிலவரம் தீர்ந்து செழிப்பான நிலைமை காணப் படும். வாங்கிய கடன்களை திருப்ப அடைப்பீர்கள். வீண் பழிகள் விலகி, எதிலும் மற்றவர்கள் பாராட் டும் வகையில் செயற்படுவீர்கள். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சி களில் முன் னேற்றம் உண்டு.நான்காம் இடத்தில் சூரியன் இருப்பதால், ஓய்வின்றி பரபரப்பாக செயல்படலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆளாகலாம். சுகம் கெடும் வகையில் வேலை நெருக்கடிகள் இருக்கும். தந்தை தொடர்பான விஷயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும்.சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விஷயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். விருந்து, உபசரிப்புகளுக்காக கணிசமான தொகையை செலவு செய்வீர்கள். ஏழாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், கூட்டுத் தொழில் விவகாரங்களில் கவனம் அவசியம். கணவன் - மனைவி இடையே பிரச்சினைகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.வரும் திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். நல்ல செய்திகளைக் கேட்கலாம். பணவரவுகளைப் பெறலாம். பொருள்கள் சேரும்.

### கும்பம்

இந்த வாரம் ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள். நண்பர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். மற்றவர்களுடன் சேர்ந்து கூட்டாக சில காரியங்களைச் செய்வீர்கள். சந்திராஷ்டமம் என்பதால், வீண் செலவுகளைச் சந்திக்கலாம். காரியங்களில் ஏற்படும் தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். சிலர் உங்களின் மனம் புண் படும் வகையில் பேசலாம். பயணத் தடைகள் நேரும்.அஷ்டமத்தில் இருக்கும் சனி, உங்களை எளிதில் எதையும் செய்ய விட மாட்டார். அடுக்கடுக்காக ஏதோ ஒரு ரூபத்தில் தடைகள் உருவாகலாம். தொழில் ரீதியான விடயங்களும் பெரிய அளவில் திருப்தி தரும் வகையில் இருக்காது. தண்டச் செலவுகளைத் தவிர்க்க எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். மற்றவர்களை நம்பி எந்தக் காரியத் திலும் இறங்க வேண்டாம்.ஆறாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், நிலம், பூமி தொடர்பான விஷ யங்கள் சாதகமாக இருக்கும். சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். கடன் பரச்னை களை சமாளிக்கும் வல்லமை அதிகரிக்கும். சூரியனின் சாதகமான சஞ்சாரத்தினால், அரசு தொடர் பான காரியங்கள் அனுகூலமாக முடியும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும்.சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விஷயங்கள் போன்றவற்றால் அவ்வப்போது ஆறுதலான அனுபவங்களைச் சந்திக்கலாம். சிறிய பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். இழுபறி வேலைகள் முடியும். பணவரவு உண்டு.

### மீனம்

இந்த வாரம் பணவரவுகளைப் பெறலாம். அலைச்சல் இல்லாமல் சுலபமாக வேலைகளை முடிப்பீர்கள். அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். புதியவர்கள் சிலரின் நட்பை பெறலாம். உறவினர்கள் சிலரின் உதவிகளைப் பெறலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்குவீர்கள்.மூன்றாம் இடத்தில் சுக்கிரன் இருப்பதால், பெண்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். வீட்டுக்குத் தேவையான சில பொருள்களை வாங்குவீர்கள். பயணங்கள் அனுகூலம் தரும். இருந்தாலும், இரண்டாம் இடத்தில் சூரியன் இருப்பதால், சூடான பேச்சுவார்த்தை தவிர்க்க வேண்டும். சிலருக்கு சிறு கண் உபாதைகள் உருவாகலாம். கடன் பிரச்சினைகளாலும் சிலருக்கு பதற்றம், எரிச்சல் உண்டாகலாம்.புத்தி ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றங்கள் தொடரும். பிள்ளைகளிடம் அதிக கண்டிப்பை காட்டாமல் கனிவாக நடந்து கொள்ளவேண்டும். குரு விரய ஸ்தானத்தில் இருப்பதால், சுய தேவைகளை பூர்த்தி செய்யவும், நீண்ட தூர பயணங்கள் செல்லவும், தொழில் விஸ்தரிப்புக்காகவும் கணிசமான பணத்தை செலவிடலாம்.சனி பகவான் சாதகமற்ற நிலையில் இருப் பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் நிம்மதியற்ற நிலைமை காணப்படும். சிலர் விரும்பத்தகாத இடமாற்றங்களுக்கும் ஆளாகலாம். சந்திராஷ்டமம் என்பதால், தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். எந்த வேலையும் எளிதில் முடியாமல் சுற்றலில் விடலாம். சிலருக்கு உதவி செய்யலாம். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு**

நாவற்குழி - கோயிலாக்கண்டியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு.

**தொடர்பு**

இராசலிங்கம் - முதியோர் இல்லம் கைதடி

077-6203909, 077-9177145

**விற்பனைக்கு**

சுதுமலை தெற்கில் நல்ல சூழலில் 4-¾ பரப்புக் காணி நாலு அறை வீட்டுடனும், தனிக் கிணற்றுடனும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு

077-6935852

**காணி விற்பனைக்கு**

இருபாலை சந்திக்கும், அம்மன் கோவிலடிக்கும் இடையில். பருத்தித்துறை றோட்டில் 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு

011-2553220

**வீடு விற்பனைக்கு**

யாழ்.மாநகரசபை எல்லைக்குள், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில் 4 அறைகள் கொண்ட 2 ½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 1-647-229-9160( கனடா),214903423 (973594)

**புதிய இடத்தில் எமது சேவைகள்**



பொலிமர் றபர் ஸ்ராம் 200ரூபா
பிறீ இங்க் றபர் ஸ்ராம் 500ரூபா
வரிக்கணக்கோ, அளவோ இல்லை. உங்கள் விருப்பம் போல் இக் கட்டணத்தில் செய்து கொள்ள யாழ். நகரில்.

S.S.யசோதரன் ஆட்ஸ்,
381u, K.K.S வீதி, யாழ்ப்பாணம்,.
(வண்ணை சிவன் கோயில் அருகில்)

# Computer Express

## Institute of Information Technology



மாணவர்களுக்கும் ஊழியர்களுக்குமான தொழில்சார் கணிக்கற்கை நெறிகள் புதுப்பொலிவுடன் ஆரம்பமாகின்றன.

மாபெரும் புலமைப்பரீட்சைத்திட்டம். 2010

| Course | Price | Duration |
|---|---|---|
| Professional Diploma in Microsoft Office | 3500/= | 3 Months |
| Diploma in Printing Technology & Desk top Publishing | ~~22500/=~~ 4500/= | 4 Months |
| Diploma in Server Technology & Web Page Designing | ~~22500/=~~ 4500/= | 3 Months |
| Diploma in Graphic Designing & Adverdisement Marketing | ~~22500/=~~ 4500/= | 4 Months |
| Diploma in Hardware Engineering & Net-working | ~~20000/=~~ 4000/= | 3 Months |
| Diploma in Computerized Accounting & E-Commerce | ~~22500/=~~ 4500/= | 3 Months |
| Diploma in Computer Science & Programming | ~~22500/=~~ 4500/= | 4 Months |
| Diploma in Auto CAD & Arcetecture Designing | ~~22500/=~~ 4500/= | 3 Months |
| Honours Diploma in Information Technology | ~~32500/=~~ 6500/= | 6 Months |

80% off

100% செய்முறைப்பயிற்சி ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

**50 % Advance Courses**

| Course | Price | Duration |
|---|---|---|
| Diploma in Film Technology & Video Editing | ~~10000/=~~ 5000/= | 4 Months |
| Diploma in Studio Technology & Multi Media | ~~9500/=~~ 4750/= | 4 Months |

எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம்செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.



No.167, Kasthuriyar Road, Jaffna.
Tel: 021 222 8250

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

| | |
|---|---|
| Batch I | 05/05/2010 9am Or 3pm |
| Batch II | 07/05/2010 9am Or 3pm |
| Batch III | 08/05/2010 10am Or 3pm |
| Batch IV | 09/05/2010 10am Or 3pm |

Einhell · Husqvarna · WATERTEC

Our company is established in the Hardware and Machinery business for the past 6 decades and is the agent for many internationally acclaimed leading brands. We are looking for a Manager to handle all aspects coupled with strong disciplined approach to Sales Administration. The selected candidate will be posted at our Territory Office in Jaffna.

## Territory Manager – Northern Province

The prospective candidate for the position should be qualified in Finance & Accounting disciplines along with adequate experience. He will be responsible within the territory & should maintain all relevant records for the administration of Sales & Stocks. The Territory Manager will be reporting directly to the General Manager.

The candidate should be between 35 – 45 years.

The job opportunity offers excellent prospects in career growth with an attractive remuneration package, plus a company maintained vehicle, family insurance cover etc.

*Applications with detailed CV, including names and addresses of 2 non - related referees indicating the post applied for on the top left hand corner of the envelope should be posted or e-mailed within 7 days to:*

**The Manager HR & Administration,**
**St. Anthony's Hardware (Pvt) Ltd**
524, Sri Sangaraja Mawatha, Colombo 10.
Fax: 2446554, E-mail: vacancy@stanthonys.lk

# ஆங்கில மொழிமூல ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

கலைமகள் சர்வதேச கல்லூரியில் ஆங்கில மொழிமூல ஆசிரியர் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:
க.பொ.த (உ/த) சித்தியடைந்தோர்
வயதெல்லை:
2010 ஜனவரியில் 35 வயதிற்கு மேற்படாதோர்
காலஎல்லை : ஒரு வருடம்
அடையும் இலக்கு:
பயிற்சிக் காலத்தின் பின் எமது சர்வதேசக் கல்லூரியில் ஆங்கில மொழிமூல ஆசிரியராக நியமனம் செய்யப்படுவார்.

நேர்முகத் தேர்வு:
3,4,5 ஆம் திகதிகளில் காலை 9மணிமுதல் மதியம் 2மணிவரை
நேர்முகத் தேர்விற்கு சமூகம் தரும்போது கல்விச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடன் சமூகம் தரவும்.

தேர்வுக்கு சமூகம் தரவேண்டிய இடம்:
*Kalai Magal International Teachers Training College*
Muthali Kovil Lane, Kokuvil.
(குளப்பிட்டிச் சந்தி அருகில்)

மேலதிக விபரங்களுக்கு
0778834592, 021 2222773

# Diploma in English & IELTS

சிறந்த ஆங்கில அறிவைப் பெற, கூச்சமின்றி எந்தச் சூழ்நிலையிலும் ஆங்கில மொழியில் சரளமாக உரையாட இலக்கண சுத்தமாக எழுத, மொழி பெயர்ப்புச் செய்ய, கடினமான ஆங்கிலமொழி நடையையும் வாசித்து விளங்கிக்கொள்ள

* க.பொ.த. (உ/த) சித்தியடைந்தோர்
* தொழில் புரிவோர்
* உயர் கல்வி பயில்வோர்
* ஆங்கிலப் புலமை விரும்புவோர்
* பாடசாலை மாணவர்கள்

அனைவருக்கும் வாரநாள்களிலும் வார இறுதி நாள்களிலும் (சனி, ஞாயிறு) விசேட திறமை மிக்க விரிவுரையாளர்கள் மூலம் இலகுவாகப் பயிற்சி நெறிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதிய வகுப்புகள் மே 5 முதல் எமது நிறுவனத்தின் கீழ்வரும் கிளைகளில் மேற்கொள்ளப்படும்.

## KALAIMAGAL INTERNATIONAL COLLEGE

53/A, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (கொமர்ஷல் வங்கி அருகில்)

முதலி கோயில் ஒழுங்கை, கொக்குவில். (குளப்பிட்டிச் சந்தி அருகில்)

தொ.பே.0778834592, 0212222773


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WANTED

It is intended to open branches of the Gateway Language and IT centers at Nelliyady and Chavakachcheri. House with minimum floor area of 1200 S.ft with water, toilet and parking space is required in both areas. Preferably located closer to the Busstand along the Main Road. Please contact.

Manager,
**Gateway Language & ICT Centre**
347, Kasthuriar Road, Jaffna. T.P: 0215677602



# VACANCIES



Vacancies exist for the following positions. Persons with suitable Qualifications are requested to apply. Please apply before 07.07.2010

**1.MANAGER – 03 POSITIONS**
To look after the affairs of IT Centers. Persons who have already managed similar Institutions, with 03 years experience. Retired persons who held Managerial Positions can also apply.

**2.LECTURERS – ENGLISH (FULL TIME)**

**3.COMPUTER LECTURERS / COMPUTER INSTRUCTORS**
Qualification : - B.Sc in Computer Science/ Dip. In Computer Science or equivalent with minimum 1 year experience

**4.SECURITIES – 02 POSITIONS**
Residents of Nelliyady and Chavakachcheri will be given preference.

*Salary Negotiable*

Manager,
**Gateway Language & ICT Centre**
347, Kasthuriar Road, Jaffna. T.P: 0215677602


# இலங்கையில் அமைச்சரவை மாறினாலும் மேற்குலகுடனான முறுகல் தணியாது

• கொழும்பு, மே.02

நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து இலங்கையில் புதிய அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ள போதிலும் மேற்குலகுடனான இலங்கையின் முறுகல் நிலை தொடரும். இதனால் நீண்ட கால வர்த்தக முதலீடுகள் பாதிக்கப்படும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவுடனான இலங்கையின் உறவுகள் மேலும் மோசமடையும் என ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஈரான், லிபியா, சீனா, மியன்மார் போன்ற நாடுகளுடன் இலங்கை அரசு நெருக்கமான உறவுகளைப் பேணுவதற்கான காரணம் என்ன என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசு இந்த நாடுகளின் முன்னால் மண்டியிட்ட போதிலும் எங்களுக்கு என்ன கிடைத்துள்ளது? இந்த நாடுகளுக்கு நாங்கள் பெருமளவிற்கு ஏற்றுமதி செய்யவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எமது ஏற்றுமதிகள் செல்லவேண்டிய மேற்குலகம் மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான உறவை எமது வெளிவிவகாரக் கொள்கை மோசமாகப் பாதிக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அரசின் மிக முக்கிய அமைச்சுக்களான மின்சக்தி, எரிசக்தி, வீடமைப்பு, நீதித்துறை போன்றவற்றை ஜனாதிபதி மேற்குலகைக் கடுமையாக எதிர்ப்பவர்களின் கைகளில் ஒப்படைத்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் வெளிவிவகாரக் கொள் கையில் மாற்றமிராது. முன்னைய கொள்கையே தொடரும் எனக் குறிப்பிடுகிறார் அரசியல் ஆய்வாளர் ஜெஹான் பெரேரா.

எனினும் நாட்டின் வெளிவிவகாரக் கொள்கை குறித்துக் கருத்துத் தெரிவிக்க மறுத்துள்ள பதில் பிரதி வெளிவிவகார அமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இது குறித்துப் பின்னர் கருத்துத் தெரிவிப்பார் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமை நிலைவரம் குறித்து மேற்குலகம் கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருவதைத் தொடர்ந்து அரசு கடந்த வருடம் புதிய நண்பர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கியது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது ஆயுதங்களை வழங்கிய இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஈரான், லிபியா போன்ற நாடுகளுடன் கொழும்பு வலுவான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

ஈரான் ஜனாதிபதிக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையிலான நெருக்கமான நட்புறவு காரணமாக இரு தலைவர்களும் பரஸ்பரம் இரு நாடுகளுக்கும் கடந்த வருடங்களில் விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக ஜி - 15 நாடுகளின் இவ்வருடத் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஈரான் அழைப்பு விடுத்துள்ளது.

மே மாதம் 17ஆம் திகதி ஈரான் தலைநகரில் ஆரம்பமாகவுள்ள உச்சி மாநாட்டிற்கு இலங்கை ஜனாதிபதி செல்லவுள்ளார். ஈரான் ஜனாதிபதியுடன் பேச்சுகளை மேற்கொள்வார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## மயிர்கொட்டி தொல்லை

நவாலி, மே.2

நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதியில் மயிர்க்கொட்டிகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

காலையில் சூரியன் உதயமானதும் மரங்களில் இருந்து மயிர்க் கொட்டிகள் வீதிகளிலும், வீடுகளிலும் இறங்கி விடுவதால் பொது மக்கள் சிரமப்படுகின்றனர். (ஓ-100)


## வீடு வளவு விற்பனைக்கு

உடுவில் அம்பலவாணர் வீதியில் மில்லுக்கு முன்பாக 4½பரப்புக் காணியில் சுற்று மதிலுடன் கூடிய புதிய பெரிய வீடு வளவு விற்பனைக்குண்டு.

தொடர்பு: க.சேதுபதி,
புத்தூர் வடக்கு, புத்தூர்.
தொ.பே. 0217914052, 004721687032
(9567239)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் (நல்லூர், திருநெல்வேலி, கந்தர்மடம் விரும்பத்தக்கது) சிறிய குடும்பம் (03பேர்) தங்குவதற்கு நல்ல சூழலில் வீடு வாட கைக்குத் தேவை.

தொடர்பு: 0776354224 (97509)

## முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை

தென்மராட்சி பரீட்சார்த்திகளுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள்.
ஞாயிறு தொடக்கம் வெள்ளி வரை
பி.ப. 3.00 - 5.30 வரை
புதிய பட்டப்படிப்புகள் கல்லூரி
சங்கத்தானை, சாவகச்சேரி.

## நெதர்லாந்து மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் உயர் கல்வியுடன் கூடிய தொழில் வாய்ப்பு!!

நெதர்லாந்து மற்றும் நியூசிலாந்து நாட்டில் உயர் கல்வியுடன் கூடிய தொழில் வாய்ப்பிற்கான விசா மூன்று மாதத்தினுள் பெற்றுத் தரப்படும்.
*(100% Visa உத்தரவாதம்)*

எதிர் பார்க்கப்படும் கல்வித்தகமை - *O/L or A/L or Degree / Diploma*

இவ்விரு நாடுகளின் உயர் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் வெகு விரைவில் யாழ்ப்பாணம் வந்து உங்களை சந்திக்கவுள்ளனர்.

உடன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்
இறுதித் திகதி : - 05/05/2010

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
Call : - 021 321 6433 / 0777 110 862

## வேலையாள்கள் தேவை

பிரபல சைவ உணவகம் ஒன்றுக்கு கீழ்வரும் வேலை வெற்றிடத்திற்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1) உணவு பரிமாறுபவர்கள்
2) காசாளர்
3) பில்கிளார்க்
4) பாதுகாப்பு உத்தியோகத்தர்
5) சமையலறை உதவியாளர்கள்
6) ரொட்டி போடுபவர்கள்
7) மரக்கறி வெட்டுபவர்கள்
8) சமையல் ஆள்கள்; இடியப்பம் போடுபவர்கள்
9) ரீமேக்கர், சுவிற்மேக்கர்
10) பார்சல் கட்டுபவர், வெளிக்கள உத்தியோகத்தர்.

{ஆண், பெண் இருபாலாருக்கும்}

ஆகிய வேலைக்கு 3 நேர உணவு, தங்க இருப்பிட வசதி, சம்பளம் போன்றவை சிறப்பாகக் கவனிக்கப்படும். உடன் தொடர்பு கொள்க.

மலாயன் கபே,
36,38, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2373, 0777917753


## நெசவு ஆலையை புனரமைத்து செயற்பட வைத்தல் குறித்த அறிவித்தல்

யுத்தத்திற்கு முன்னர் திறம்பட செயற்பட்ட நெசவு ஆலை யுத்தத்தின் போது முற்றாக சேதமாக்கப்பட்டதுடன், அதில் இருந்த இயந்திர தளபாடங்கள் யாவும் முற்றாக இல்லாது அழிக்கப்பட்டன. எனவே இதனை புனரமைத்து அவ்விடத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சி அளித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க திட்டமிட்டுள்ளதால் இவ் விடயத்தில் அக்கறை உள்ளவர்களையும் மேற்படி நெசவு ஆலைக்கு காணிகளை நன்கொடை செய்தவர்களையும், மேலும் இந்நடவடிக்கையில் ஆர்வம் உள்ளவர்களையும் எதிர்வரும் 09.05.2010 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10மணிக்கு 15ஆம் கட்டை, உடுப்பிட்டி என்ற விலாசத்தில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து உரிய ஆலோசனைகளை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
உடுப்பிட்டி நலன்புரிச்சங்கம்.


# MEGA OFFERS @ MUSIC WORLD

**Computer Accessories**

| | |
|---|---|
| NETWORK CABLE (300m Box) | 3,500.00 |
| POWER SUPPLY 450 W | 1,250.00 |
| MICRO LAB 2.1 | 2,800.00 |
| WEB CAMERA | 950.00 to 3,500.00 |
| RECOVERY CARD (No.1) | 1,200.00 |
| KEYBOARD | 350.00 |
| OPTICAL MOUSE | 230.00 |
| SOUND CARD | 500.00 |
| Intel LGA FAN | 500.00 |
| 478 FAN | 750.00 |
| FM MODULATOR | 700.00 |
| MODEM | 600.00 |
| NETWORK CARD | 750.00 |
| USB CAPTURE CARD | 3,500.00 |

**Memory (RAM - Kingston)**

| | |
|---|---|
| RAM DDR I 400 Mhz 512 Mb | 2,500.00 |
| RAM DDR II 800 Mhz 1 Gb | 3,600.00 |
| RAM DDR III 1333 Mhz 1 Gb | 6,900.00 |

**Dongle**

| | |
|---|---|
| D Link HSDPA | 8,750.00 |
| Prolink HSDPA | 9,250.00 |
| Normal HSDPA Modem | 5,500.00 to 7,500.00 |

**ADSL Routers**

| | |
|---|---|
| TP Link ADSL 1 port Router | 3,750.00 |
| TP Link ADSL 2 port Router | 3,900.00 |
| TP Link ADSL 4 port Router | 5,800.00 |

**PAP2 LinkSYS**

| | |
|---|---|
| PAP 2 Link SYS (No.1 Green Light) | 6,500.00 |

**DVD Writers**

| | |
|---|---|
| SAMSUNG SATA | 3,200.00 |
| SONY SATA | 3,700.00 |

**ATX Casing**

| | |
|---|---|
| Power logic | 2,700.00 |
| MAGA (500 W) (All Models) | 2,500.00 |

**Scanners**

| | |
|---|---|
| Mustek USB | 5,250.00 |
| Hp G 2410 | 7,250.00 |

**Hard Disks**

| | |
|---|---|
| 40 Gb SATA | 2,200.00 |
| 160 Gb SATA | 4,800.00 |
| 250 Gb SATA | 5,600.00 |
| 320 Gb SATA | 6,000.00 |

**Mother Boards**

| | |
|---|---|
| Intel G 31 pr | 7,100.00 |
| Foxconn G 31 | 5,600.00 |
| Asrock G 31 | 5,300.00 |
| E - Sonic G 31 | 5,250.00 |
| Intel DG 41 | 8,500.00 |
| Asus G41 | 7,500.00 |

**Processor**

| | |
|---|---|
| Intel 2.6 Ghz / 4 M Core 2 Quad Box | 23,900.00 |

**Monitors**

| | |
|---|---|
| CRT 17" Flat | 7,500.00 |
| LCD 16" | 12,000.00 |
| LCD 19" | 15,250.00 |

**Printers**

| | |
|---|---|
| Hp 1663 | 4,250.00 |
| Epson T 10 | 4,600.00 |
| Canon Laserjet *(LBP 3050)* | 14,250.00 |
| Hp 3 in 1 (Printer,Scanner & Fax) | 4,355.00 to 14,250.00 |

**UPS**

| | |
|---|---|
| UPS 650 V | 3,900.00 |
| UPS 1200 V (1Kv) | 7,900.00 |

SAMSUNG Digital Camera 12.2 Mega pix 14,500.00 Only

Games Player (Mp3 / Mp4) 9,750.00 Only

3 வருடம் வரையிலான உத்தரவாதம்

கடனட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

MUSIC WORLD & COMPUTERS
THE LEADING IT SUPER MARKET IN JAFFNA
141B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
musiccom27@yahoo.com / musicworld@sltnet.lk - 021 222 6554


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில்

JCB Backhoe Loader

மணித்தியால அடிப்படையில்
வாடகைக்கு பெறலாம்



தொடர்புகளுக்கு:

நிமோவி றெடிமிக்ஸ்நிறுவனம்
Nimovi Readymix (Pvt) Ltd

இல.25 இராமகிருஸ்ண வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-06
011-2363435

கேரதீவு வீதி,
நாவற்குழி,
யாழ்ப்பாணம்.
071-3680291
0777252722


## சங்கானையில் தேசிய சேமிப்பு வங்கிக் கிளை

தேசிய சேமிப்பு வங்கியின் கிளை பொன்னாலை வீதி, சங்கானையில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.20 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி கிளையை தேசிய சேமிப்பு வங்கித் தலைவர் எஸ்.ஆர். ஆட்டிகல திறந்து வைப்பார்.

(201-க-29)

## திறப்பு விழா

பிரிட்டிஷ் பிஸ்னஸ் ஸ்கூலின் சாவகச்சேரி வளாகத்தின் திறப்புவிழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.சிறினிவாசன் கலந்துகொள்வார்.

(04-14)


## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

## ஜெகப்பிரதாபன் வித்தியா



மண்ணில்
22.02.1976

விண்ணில்
13.05.2009

திதி: 02.05.2010

எம் குடும்ப விளக்கை-ஊழிக்
காற்றனைத்துச் சென்று
ஆண்டொன்று அகன்ற நாளில்
விழி சொரியும் கண்ணீரில்
துளித் துளியாய் உன் விம்பம்
கலைந்து போக உன் நினைவு மேகமல்ல
எம் உயிர் கலந்த உதிரம் அது
துயில் கொள் கண்மணியே!
எம் நினைவுகள் உன்னைத் தாலாட்டும்

என்றும் எம் நெஞ்சை விட்டகலா
நினைவுகளுடன்:

முதிரைக்கட்டை ஒழுங்கை,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை. (97393)

கணவர்,
பிள்ளைகள்.





STUDY IN
UK
USA, AUSTRALIA,
MALAYSIA &
SINGAPORE

VISA பெற்றுக்கொள்ள
முன்னர் அல்லது அதன் பின்னர்
எந்தவொரு கட்டணமும்
அறவிடப்படமாட்டாது.

எமது சேவை
முற்றிலும் இலவசம்

O/L உடன் குறைந்த கட்டணத்தில்! NO NEED IELTS

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
(A Subsidiary of Flex Graphic)

FLEX Graphic

www.flexinstitute.lk



## கடை வாடகைக்கு

இல. 77 கே.கே.எஸ். வீதியிலுள்ள கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 077 - 9937402
077 - 2356355

## வாடகைக்கு

நாவலர் றோட், மலர் மகள் வீதியிலுள்ள வீடொன்றில் அறை வாடகைக்குண்டு. பெண்களுக்கு மட்டும். (பல் கலைக்கழக, வேலை பார்க்கும்).

தொடர்பு :- 0779937402

## திருமண சேவை

துரிதமான-சுலபமான வாழ்க்கைத் துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவுமுறைபற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள்,புதன்,வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு நண்பகலிலோ மூத்த-புகழ்பூத்த-சுயதெரிவுமுறை-முன்னோடி-தனிமனித நிறுவுநர்-சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெமு வேல் அமுதனுடன் தொடர்புகொள்ளுக!

தொலைபேசி: 2360488, 2360694, 4873929



வசீகரத் தோற்றத்திற்கு!

## சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சுமருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும்.

சந்தனாலேப

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்

'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/55555)

MANUFACTURED BY: SANJEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/I. 250.



## காணிகள் விற்பனைக்கு

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையிலுள்ள நான்கு பரப்புக் காணியும், கோண்டாவில் மேற்கில் 13 பரப்பு பயன்தரு தென்னை மரங்களுடன் கூடிய காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778446028



## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA NO -1 புறொயிலர் குஞ்சுகள்
04.05.2010 விநியோகிக்கப்படும். 150/=

★ ராஜீன், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ ஜெனிசி பாம், முதலாம் கட்டை, தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.
★ பி.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

தொ.பே: 021 321 3952, 0776090926



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் ஆபரணம் யோவான்பிள்ளை
(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர்,புகையிரத சேவை சுப்பப்குதி)

மலர்வு: 05.06.1928 உதிர்வு: 03.05.2009

தந்தையே என அழைத்து இறுமாந்தோம்!
உம் உறவுகளைத் தவிக்கவிட்டீர் என்செய்வோம்?

நாவற்குழி புனித அந்தோனியார் தேவாலயத்தில் இன்று (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

22/1, புனித பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம். றஞ்சன் (மகன் - சாரதி).



## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனடா PR உள்ள, 1970 ஆம் ஆண்டு, திருவோண நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்ற, பாவம் 32 உடைய Bachelor of Engineering மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: 0789131905, 011455740
anlingesh@gmail.com

## கமரா விற்பனைக்கு

Jvc HDD வீடியோ கமரா, Hard Disk Cam Corder வசதியுடைய வீடியோ கமரா விற்பனைக்குண்டு.

தொடர்பு: 234, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 077 5581490



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில்
17
★
02
★
1920

விண்ணில்
01
★
04
★
2010

திருமதி பரமு நாகம்மா
(சாவகச்சேரி, பெரியமாவடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு 13 ஐ வதிவிடமாகவும் கொண்டவர்)

அன்போடு எம்மை அழைத்து
உணவூட்டிய அன்புத் தெய்வமே!
இன்முகமாய் இன்பம் காட்டி -எல்லோர்
இதயத்திலும் இடம் பிடித்தவரே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
மாதமொன்று ஆனாலும் ஆறாது எம் துயரம்.

இல.21, புளுமெண்டல் ஒழுங்கை,
கொட்டாஞ்சேனை, கொழும்பு -13.
தொ.பே:0112470057/0776718178

குடும்பத்தினர்.



## நெஞ்சைவிட்டு அகலா முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
02
02
1978



அரன் அடியில்
13
05
2009

அமரர் இராமலிங்கம் பிரபாகரன்
(நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - கண்டாவளை)

திதி: 02.05.2010

எம்மைத் தவியாய்த் தவிக்க வைத்து
ஓராண்டு சென்றாலும் என்றும் உம் நினைவுடன் வாழும்

பெரியதம்பிரான் கோயில் வீதி,
தும்பளை மேற்கு, பருத்தித்துறை. (97648)

மனைவி, மகள், தாய், தந்தை,
சகோதரர், உறவினர்.



## வீடு விற்பனைக்கு

நவக்கிரி, எல்லாளன் வாசிகசாலைக்கு அண்மையில் வீட்டுடன் கூடிய 10பரப்புக் காணி விற்பனைக்குண்டு.


தொடர்புகளுக்கு: 0779045043

## T.V விற்பனைக்கு

புதிய 32'' LCD T.V, 3HD MI Sam Sung விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779599527,
0212229078


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலைக்காட்சியும் தொலைபேசியும்

தொலைக்காட்சிக்கும் தொலை பேசிக்கும் என்ன வேறுபாடு? தொலைபேசி பேசுவதற்கு மட்டுமல்லாது கேட்பதற்கும் இடம் தருகிறது. தாம் கூற விரும்புவதை மற்றொருவருக்குக் கூற வழிசெய்வது போன்றே, மற்றவர் கூறுவதைக் கேட்டுப் புரிந்து கொள்ளவும் அது வழிவகுக்கிறது. அந்த வகையில் செய்தியொன்றை வெளிப்படுத்தவும் உள்வாங்கிக் கொள்ளவுமென இருவித பயன்பாடுகளைத் தொலைபேசி எமக்கு ஆக்கித் தருகிறது. தொலைக்காட்சியோ தன் இஷ்டப்படி தகவல்களை ஒலி மூலமும் ஒளிமூலமும் காட்சிப்படுத்தி உதவுகின்றது. ஆனால் பிறர் சொல்வதைக் கேட்க - உள்வாங்க தொலைக்காட்சியில் வாய்ப்பமைவதில்லை.

மனிதர்களில் ஒரு சாரார் தொலைக்காட்சி போன்று தங்களையும், தங்களது மனக் கருத்துக்களையும் வெளிப்படுத்தவே விரும்புகின்றனர். பிறரது கருத்தை அவர்கள் ஒரு போதும் உள்வாங்குவதில்லை. நீங்கள் தொலைக்காட்சி போல அல்லாமல் தொலைபேசி போன்று செயற்படல் முக்கியம்.

கருத்துக்களை, எண்ணங்களை வெளிப்படுத்தவும், உள்வாங்கவும் பழகிக்கொள்ளல் அவசியமாகும். உங்களது கருத்துக்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவது எவ்வளவு முக்கியமோ, அதே போன்று மற்றவர்களது கருத்துக்களையும் உள்வாங்கிச் செயற்படுதலும் அவசியமானதொன்றாகும்.....

ப. ஆதவன் நல்லூர்.

# பஞ்சாமிர்தம்





## யதார்த்த உண்மை

கடுமையான கோடை காலமொன்றில் ஒரு நாட்டின் அரசன் தனது படைவீரர்களுடன் பாதையொன்றில் நடந்து சென்று கொண்டிருந்தான். அது பொதுமக்கள் பெருமளவில் பயணிக்கும் முக்கிய பாதையாகும். வெய்யிலில் நடந்து சென்றதால் களைப்புற்ற அரசனும் படை வீரர்களும் பாதை ஓரத்திலிருந்த ஒரு மர நிழலில் தங்கி ஓய்வெடுத்தனர். எதிரிலுள்ள ஒரு வேலியில் படர்ந்திருந்த வெள்ளரிக் கொடியொன்றில் ஏராளமான வெள்ளரிப் பிஞ்சுகள் காய்த்துத் தொங்குவதை அரசன் கண்டான். படை வீரர்களில் ஒருவனை அழைத்து ''போய் அந்த வெள்ளரிப் பிஞ்சுகளில் சிலவற்றைப் பறித்து வா. நாங்கள் எல்லோரும், சேர்ந்து உண்ணலாம்'' என்றான்.

அந்த மர நிழலில் தங்கி இளைப்பாறிக் கொண்டிருந்த கண்பார்வையில்லாத ஒரு முதியவர் அரசனின் அந்த வார்த்தைகளைக் கேட்டு வாய்விட்டுச் சிரித்தார். இதனைக் கண்ட அரசன் அவரது அந்தச் சிரிப்புக்கான காரணம் என்ன என அந்தக் குருட்டு முதியவரிடம் கேட்டான்.


''அந்த வெள்ளரிப் பிஞ்சுகள் உண்ணவே இயலாத அளவுக்கு கசப்பாயிருக்கும்'' என அந்தக் குருட்டு முதியவர் கூறினார். ஆனாலும் அரசனோ அந்த முதியவரின் பேச்சை அலட்சியப்படுத்தி, வெள்ளரிப் பிஞ்சுகளைத் தருவித்து அவற்றைச் சாப்பிட்டுப் பார்த்தபோது அவை கடும் கசப்பாகவே இருந்ததை உணர்ந்தான்.

அரசன் அந்த குருட்டு முதியவரைப் பார்த்து பெரியவரே! உமக்கோ பார்வை கிடையாது, நீர் வெள்ளரிப் பிஞ்சுகளைப் பறித்து சாப்பிட்டுப் பார்த்திருக்க வாய்ப்பில்லை, அப்படியிருந்தும் இவை கசப்பானவை என்ற உண்மை உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' எனக் கேட்டான்,

அதற்கு அந்தக் குருட்டு முதியவரோ ''அரசே!, தினமும் பலரும் பயணம் செய்யும் இப்பாதையில் எவராலும் பறிக்கப்படாமல் இத்தனை வெள்ளரிப் பிஞ்சுகள் காய்த்து தொங்க முடியுமா?'' எனக் கேட்டார். யதர்த்தமும் அதுதானே? உண்மையில் அந்த முதியவருக்கு விழிஇல்லைத்தான். ஆனால் அவரிடம் விழிப்பு இருந்தது,

கே.கோபிகிருஷ்ணா, ஊரெழு

## தணடை விட்டாலும்..





திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகர், அறிஞர் அண்ணா ஒரு சமயம் டில்லி மாநிலங்களவையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து உருக்கமாக உரையாற்றிக் கொண்டிருந்தார்.

இலங்கையில் தமிழ்மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள், தொல்லைகள் குறித்து சபை உறுப்பினர்களின் மனங்கள் கசிந்துருகும் விதத்தில் அறிஞர் அண்ணா உரையாற்றிக் கொண்டிருந்தார்.

அந்த வேளையில் இந்தியாவின் வெளிநாட்டுத்துறை அமைச்சராகப் பதவி வகித்த வி.கே.கிருஷ்ணமேனன், அறிஞர் அண்ணாவின் பேச்சில் குறுக்கிட்டு,

"நீங்கள் வேற்றுநாடொன்றின் பிரச்சினையில் இவ்வளவு அக்கறை காட்டிப் பேசுவதேன்? இது பிறிதொரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக அமையாதா?" எனக் கேட்டார்.

அவரது அந்தக் கேள்வியைக் கேட்ட அறிஞர் அண்ணாவோ "அடுத்தவீட்டில் கணவனும் மனைவியும் மகிழ்ச்சியாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கும் பொழுது எட்டிப்பார்ப்பது தவறுதான். ஆனால் அந்த மனைவியை கொடுமைக்காரக் கணவன் கழுத்தை நெரித்துக் கொல்ல முயலும் போது - அந்த ஆபத்து வேளையில் உதவி கோரி அவள் கூக்குரலிடும் போது, ஓடிச்சென்று அவளுக்கு உதவ நினைப்பதை- உதவுவதை எவ்வாறு தவறு எனக் கொள்ள முடியும்? அதிலும் அந்தப் பெண் எனக்குத் தங்கை போன்று அமைந்திருக்கும் போது?" என ஆவேசத்தோடு பதிலளித்தார்.

இதைக்கேட்ட வி.கே.கிருஷ்ணமேனன் தலை குனிந்தபடி மௌனமாகத் தமது இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

தமிழகத்தின் அன்றைய ஒட்டு மொத்த உணர்வின் வெளிப்பாடு இது. ஆனால் இன்றோ? எல்லாமே தலைகீழ் மாற்றம்.

கே.கே. கோண்டாவில்

## மனிதனோடு பிறந்தது காருண்யம்



பொதுவாக,விஞ்ஞானிகள் எலிகளை அறுத்துப் பார்த்து ஆராய்ச்சிகளை மேற்கொள்வது வழக்கம். தாம் தயாரிக்க முனையும் மருந்துகளை பரீட்சார்த்தமாக எலிகளுக்கு கொடுத்துப் பார்த்துத் தமது கண்டு பிடிப்புக்களின் பலாபலன்களை அவர்கள் உறுதி செய்து கொள்வதுண்டு.

ஸ்டீன்மெட்ஸ் என்பவர் ஒரு அறிவியல் மேதை. தமது ஆராய்ச்சிகள் மூலம் நோய்களைக் குணமாக்கும் மருந்துகளைக் கண்டறிந்து அறிமுகப் படுத்திய ஒரு விஞ்ஞானி. கடும் குளிர்காலமொன்றின் போது அவருடைய நண்பரொருவர் அவரைக் காணச் சென்றபோது ஸ்டீன்மெட்ஸ் தமது உடலில் நிறையப் போர்வைகளைப் போர்த்துக் கொண்டு நாற்காலியொன்றில் உட்கார்ந்திருந்தார். அப்போதும் அவரது உடல் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தது "அருகில் தான் கணப்பு இருக்கிறதே?அதில் நெருப்பை மூட்டிக் குளிர்காயலாமே?ஏன் குளிரால் நடுங்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கின்றீர்கள்? என ஸ்டீன்மெட்ஸ்சின் நண்பர் அவரைக் கேட்டார்.

ஸ்டீன்மெட்ஸ் மௌனமாகத் தமது நண்பரை அழைத்துச் சென்று அருகிலிருந்த கணப்பைக் காண்பித்தார். அதற்குள் பெரிய எலிகளும் அவற்றின் குஞ்சுகளுமாக ஏழெட்டு ஜீவன்கள் பதுங்கியிருந்தன.

ஸ்டீன்மெட்ஸ் அமைதியாகத் தமது நண்பரைப் பார்த்து "இந்த எலிக்குஞ்சுகள் பெரிதாகி வளர்ந்து தாமாக எழுந்து வேறெங்காவது செல்லும்வரை நான் இந்தக் கணப்பை மூட்டப் போவதில்லை. பாவம், இப்போது அவற்றால் வேறெங்கும் செல்ல இயலாதே'' எனக் கூறினார்.

எலிகளைக் கொன்று பரிசோதனைகளை மேற்கொள்ளும் தமது விஞ்ஞானி நண்பரின் இதயத்தின் ஒரு மூலையில் காருண்யமும் உண்டு என்பதை அவரது நண்பர் அப்போதுதான் உணர்ந்தார்.

யோ.மது, உரும்பிராய்

## அதுவும் நானும்

துறவி ஒருவர் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தார். ஆற்றங் கரையிலிருந்த மரமொன்றிலிருந்து தேளொன்று தவறித் தண்ணீரில் விழுந்து தத்தளித்தது. இதைக் கண்ட அந்தத் துறவி தண்ணீருக்குள் கையை விட்டு அந்தத் தேளைத் தூக்கினார். தன்னைக் காப்பாற்ற விளைகிறாரே என்ற உணர்வின்றி அந்தத் தேள் அவரது கையில் தீண்டியது. வேதனையால் துடித்து கையை உதறி மீண்டும் அந்தத் தேளைத் தண்ணீரில் விட்டுவிட்டார் அந்தத் துறவி. கருணை உணர்வால் மீண்டும் தண்ணீரில் கையை விட்டுத் தேளைத் தூக்கினார். மறுபடியும் தேள் அவரது கையில் கொட்டியது. அந்தத் தேளின் உயிரைக் காப்பாற்றிவிட வேண்டுமென்ற உணர்வோடு இவ்விதம் பல தடவைகள் அந்தத் துறவி தேளைத் தண்ணீரிலிருந்து கையில் எடுத்தபோதும் மீண்டும் மீண்டும் அந்தத் தேள் அவரது கையைப் பதம் பார்த்துக் கொண்டே இருந்தது.



ஆற்றின் கரையிலிருந்து இதனைப் பார்த்த ஒருவர் அந்தத் துறவியை நோக்கி ''சுவாமி! தேளோ விடாமல் கொட்டுகிறதே. திரும்பத் திரும்ப ஏன் அதனைக் காப்பாற்ற முயல்கிறீர்கள்? பேசாமல் நீரிலேயே விட்டுவிட வேண்டியதுதானே நியாயம்?'' எனக் கேட்டார்.

துறவியோ அமைதியாகப் பதிலளித்தார். ''கொட்டுவது தேளின் இயற்கைக் குணம். ஆபத்தில் உதவுவது - காப்பாற்றுவது மனிதனின் இயற்கைக் குணம். அதனுடைய இயல்பை அது விடாது ஆற்றும் போது நான் மட்டும் மனித இயல்பைக் கைவிடலாமா?

இதைக் கேட்ட அந்த மனிதருக்கு மனித வாழ்க்கையின் தத்துவம் தெளிவாகப் புரிந்தது.

பகவான் இராமகிருஷ்ணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Voyages Lanka plc

ஆச்சரியமூட்டும் விலைக்கழிவுடன் உலகின் எந்த இடத்திற்கும் பயணம் செய்வதற்கான விமானப்பயணச் சீட்டுக்களை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள யாழ்ப்பாணத்தில் ஒரேயொரு அசைக்க முடியாத போக்குவரத்து நிறுவனம் வொஜஜெஸ் லங்கா மட்டுமே.

| | |
|---|---|
| COLOMBO - CHENNAI - COLOMBO | Rs. 12,200/= |
| COLOMBO - SYDNEY - COLOMBO | Rs. 91,800/= |
| COLOMBO - MELBOURNE - COLOMBO | Rs. 92,800/= |
| COLOMBO - SINGAPORE - COLOMBO | Rs. 29,400/= |
| COLOMBO - DUBAI | Rs. 15,100/= |

**வொஜஜெஸ் லங்கா**

137, பலாலி வீதி,
தபால் பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: M.M.லின்ரன் 021 7200404
Q.றீகன் 021 7200405


# VACANCY ANNOUNCEMENT

In response to the official request of the Government of the Democratic Socialist Republic of Sri Lanka, a Japan International Cooperation Agency (JICA) team is going to implement the Project for Development Planning for the Rapid Promotion of Reconstruction and Development in Jaffna District, or PDP Jaffna in short. To carry out the tasks of the project, the JICA team now invites applicants for local consultant positions specified below.

**Post titles:**

- Agriculture Development Specialist: 1 person
- Fishery Development Specialist: I person
- Community Development Specialist: 2 persons - Civil Engineer: 2 persons
- Architect: 1 person
- Structure Engineer: I person
- Facility Engineer: 1 person
- Cost Estimation Specialist: 2 persons
- Document Specialist: 1 person
- Draft man: 2 persons
- Site Engineer: 3 persons
- Administrative officers: 2 persons

**General Qualifications:**

Applicants for the positions above must have at least the following qualifications.
(a) Proven ability to undertake research, analytical and evaluation work on well-defined tasks, collect and organize required data and information, and apply appropriate computer skills.
(b) Excellent command of English in speaking and writing capable to produce well-organized reports.
(b) Excellent command of Tamil language at least in speaking. Originating from or resident in Jaffna District is an advantage.
(c) Bachelor's degree or above in the area of expertise or related areas, preferably from a renowned university. A master's or more advanced degree is an advantage.
(d) Work experience with international donor organizations, bilateral development agencies, and projects supported by these organizations/agencies is an advantage.
For the further details of each position, please visit the following website. http://pdpjsl.blogspot.com/

**How to Apply:**

To apply, please visit our website and send your CV to the following email address. pdpjaffna@gmail.com
Or send it to the following address.
PDP Jaffna Office, 3rd Floor,
Register's Office Building, District Secretariat, Jaffna
Closing Date: Friday, 14th May 2010

**Only short-listed candidates will be contacted. Submitted documents will not be returned to the applicants.**

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

தூய இன அல்சேஷன் டோமன் பிஞ்சர் குறொஸ் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: இல.6, நந்தாவில் ஒழுங்கை
(இராமகிருஷ்ணமிஷன் பாடசாலை பின் ஒழுங்கை)
கொக்குவில் கிழக்கு.
தொடர்பு நேரம்: காலை 9 - 12 மணிவரை.
மாலை 4 - 6 மணிவரை.

## மணமகன் தேவை

1979ஆம் ஆண்டு பிறந்த ரோகிணி, 2ஆம் பாதம் 67 கிரகபாவம், வடமராட்சியைச் சேர்ந்த, B.A. இந்து கௌரவ பட்டதாரிப் பெண்ணுக்கு அரச தொழில் புரியும் மணமகன் தேவை.
தொடர்பு: 077 6348624

db ESTD 1848 DARLEY BUTLER

# CAREERS AT

Darley Butler & Company Limited

**Darley Butler & Company LTD** is a leading consumer marketing organization and is rapidly expanding in the pharmaceutical sector. In view of ambitious expansion plan for the future, we are on the look out for suitable candidates who are self-motivated, ambitious and energetic individuals having a good personality to fill the following vacancies.

## MEDICAL DELEGATES

- Good communication skills in English / Tamil.
- Age less than 25 years.
- A/L qualified.
- Outgoing personality and willing to work long hours in the field.
- Experience in the pharmaceutical trade will be an added advantage.

**School leavers also will be considered.**

If you meet the above requirements and believe that we can fulfill your career objectives, please forward a duly completed resume with contact details of two non-related referees with a copy of passport size recent photograph with the position applied for marked on the left hand top corner of the envelope within 7 days of this advertisement to:

The Manager Human Resources
**DARLEY BUTLER & COMPANY LTD.**
98 Sri Sangaraja Mawatha, Colombo 10.
Fax : 0112-478777. E-mail : hr@creasy.lk

# மனிதனின் வயதை ....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

உபயோகத்தினை அவர் களுக்கு வழங்கக்கூடியதாக இருக்கின்றது. இவை ஏற்படுத்துகின்ற மனநல மேம்பாடென்பது அளவிடற்கரியது.

இதேபோன்று அறிவுசார்ந்த, உணர்ச்சி சார்ந்த குறைபாடுகளும் கூட அதன் தன்மைக்கேற்ப, தேவைக்கேற்பச் சீர்செய்யப் படவேண்டும். அவர்களுடைய கற்றற் செயற்பாடுகளை, தூண்டற் செயற்பாடுகளை அதிகரிக்கும்போது, அறிவுசார் தொழிற்பாட்டு இழப்புக்களில் தாக்கத்தினை ஏற்படுத்த முடிகின்றது. பொழுதுபோக்கு அம்சங்கள், ஆத்மீக செயற்பாடுகள் என்பன உணர்ச்சி சார்ந்த பிரச்சினைகளை மேன்படுத்துவதற்கு ஏதுவாக அமைகின்றன. இதைவிடுத்து எல்லாவற்றுக்குமே சர்வரோக நிவாரணிச் செயற்பாடு இங்கு பொருந்தாது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகையவர்களின் பாதிப்புக்களுக்கான தலையீடு என்பது அவர்கள் சூழலில் ஏற்படுத் தும் தாக்கம் அல்லது கட்டுப்பாடு (Control over Environment) மற்றும் தன் வினைத்திறனுடன் கூடிய மனநிலையினை (Sense of self - Efficacy) மேம்படுத்துவதாகவே அமைந்திட வேண்டும்.

சமூகப் பிரச்சினைகளை நாம் கருத்திற் கொள்வோமாயின், அவை பல காரணிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. அவையாவன:

01. குடும்ப அமைப்பின் சிதைவு- நவீன நகரமயமான வாழ்க்கை முறை குடும்ப அமைப்பினைப் பெருமளவிற் சிதைவடையச் செய்துவிட்டது. முதியோர்களைப் பாதுகாப்பதற்கு ஏதுவாக இருந்த அமைப்பு இழக்கப் படுவதென்பது இன்று மிக முக்கிய சமூகப் பிரச்சினையாக இருக்கின்றது. குடும்ப அங்கத்தவரின் இழப்பு, சந்ததியினருக்கு இடையிலான இடை வெளி, முதியோர் பற்றிய எண்ணக்கரு என்பனவும் இங்கு முக்கிய காரணிகளாக அமைகின்றன.

02. சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் - வேலைவாய்ப்பு இழந்து போதலும், வருமான இழப்பும் இங்கு மிக முக்கிய பிரச்சினைகளாகக் கொள்ளப்படுகின்றன. எனவே, முதியவர்களின் மருத்துவச் செலவு அதிகரிப்பதற்குரிய ஏதுநிலை இருப்பதனால் இதனைக் கருத்திற் கொள்ளவேண்டி ஏற்படுகின்றது.

03. சமூக மயமாக்கலிலிருந்து விலகுதல் -
பொதுவாக வயதானவர்கள் பொழுதுபோக்கு அம்சங்களிலும் நாளாந்த உடற் செயற்பாடுகளிலிருந்தும் ஒதுங்கிக் கொள்கின்றனர். இது அவர்களுக்கு மிக முக்கிய பிரச்சினையாக மாறிவிடுகின்றது.

04. சமூக - சமய பெறுமானங்களில் ஏற்படும் மாற்றங்கள்

05. நவீன மயமாதல், நகர மயமாதல் என்பன ஏற்படுத்தும் தாக்கங்கள்.-
முக்கியமாக இத்தகைய மாற்றங்கள் முதியவரின் வாழ்க்கை முறையில் மிகவும் பாதிப்பினை ஏற்படத்துகின்றன. அவர்களின் சமூக உறவாடலைக் குறைத்து, அவர்களை முதியோர் இல்லங்களிற் பராமரிக்கும் நிலைக்கும் இட்டுச் செல்கின்றது. பல சந்தர்ப்பங்களில் வீடற்றவர்களாகவும், பட்டினி, பிணி போன்றவற்றால் பாதிக்கப்படுபவர்களாகவும் அவர்களை இட்டுச் செல்கின்றது. இவ்வாறான பிரச்சினைகளை முகங்கொடுப்பதற்கும், வயோதிபர்களைப் பாது காப்பதற்கும், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவக் கூடிய நிறுவனங்கள் அவசியமாகின்றன.

வயதானவர்களை அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கி, சமூக அங்கீ காரத்துடன் வாழவைப்பதே இன்று எமக்கு முன்னேயுள்ள முக்கியமான பணியாகின்றது. அதற்குரிய நலவாழ்வுத் திட்டங்கள் அரச மட்டத்திலும், சமூக மட்டத்திலும் மேற்கொள்ளப்படவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக முதியோர்கள் பற்றிய எமது பார்வை மாறு படுவதுடன் அவர்களது தனித்துவத்துடன் அவர்களை ஏற்றுக்கொள்கின்ற போதே இவையெல்லாம் சாத்தியமாகும். ✱

(இதய நோய் நிபுணர் வைத்தியக் கலாநிதி பூ. லக்ஷ்மன் தனது தாயாரின் நினைவாகத் தொகுத்து வெளியிடப்பட்ட 'பண் சுமந்த பாடல்' என்ற நூலில் இருந்து இக்கட்டுரை வெளியிடப்படுகிறது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பலில் இருந்து மீண்டெழுந்து உலகுக்கே உதாரணமான ஜப்பானுக்கு ஒரு பயணம்

**இலங்கை மற்றும் ஜப்பான் அரசுகளின் ஏற்பாட்டில் 'சமாதான முன்னெடுப்பு பயணம்' என்ற திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து ஐவர் சமீபத்தில் ஜப்பானுக்கு ஒருவார சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவரான 'உதயனின்' சகோதரப்பத்திரிகையான 'சுடர்ஒளி' யின் உதவி ஆசிரியர் செ. அற்புதன் தமது அனுபவத்தை இங்கு தொடராகப் பகிர்ந்துகொள்கிறார்.**

பகுதி 1

எத்தகைய பேரழிவுகள், பெரும் இழப்புகள் ஏற்பட்டாலும் அதிலிருந்து மீண்டெழுந்து வெற்றிகரமாக முன்னுக்கு வரலாம் என்று உலகிற்கே பாடம் புகட்டிய நாடு ஜப்பான்.

தனது சாம்பலில் இருந்து உயிர்பெற்று எழும் பீனிக்ஸ் பறவை போல, இரண்டாம் உலகப் போரில் வெறும் மண்மேடாக்கப்பட்ட தமது நாட்டை உலகமே வியக்கும் வகையில் மீண்டும் கட்டியெழுப்பினார்கள் ஜப்பானியர்கள்.

இரண்டாம் உலகப் போர் உச்சமடைந்திருந்த 1945 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நேசநாடுகள் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீது அணுகுண்டுகளை வீசியும் தலைநகர் டோக்கியோ உள்ளிட்ட நகரங்கள் மீது கண்மூடித்தனமாக குண்டுகளை வீசியும் நாசவேலை செய்தன. லட்சக்கணக்கான ஜப்பானியர்கள் கொல்லப்பட்டார்கள். ஏறக்குறைய ஜப்பானின் பெரும்பகுதி தரைமட்டமாகிப் போனது.

இனி ஜப்பான் தனது பழைய நிலைமைக்கு வரவே முடியாது என்று அப்போது ஏனைய உலக நாடுகளும், சர்வதேச நிபுணர்களும் தெரிவித்தார்கள். ஆனால் ஒட்டுமொத்த உலகினது கணிப்புகளையும் பொய்ப்பித்து எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் மீண்டுடெழுந்தது ஜப்பான். இன்றைக்கு நவீன விஞ்ஞான தொழில்நுட்பத்துறையில் உலக வல்லரசான அமெரிக்காவுக்கே சவால் விடக்கூடிய வகையில் ஜப்பான் முன்னேற்றம் கண்டிருக்கிறது. ஆசிய நாடுகளில் மாத்திரமல்ல; மேற்கு நாடுகளில் கூட வாகனங்கள், இலத்திரனியல் பொருட்கள் முதற்கொண்டு எல்லாவற்றிலும் 'மேட் இன் ஜப்பான்' (Made in Japan) பொறிக்கப்பட்டிருக்கிறதா என்று மக்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

**ஆங்கிலம் வேண்டாம்!**

உலகில் இன்று பெரும்பாலான நாடுகள் தங்களின் சொந்த மொழிக்கு அடுத்தபடியாக இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தை வைத்திருக்கின்றன. நவீன தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞானத் துறைகள் பெரும்பாலும் ஆங்கிலத்தை மையமாகக் கொண்டே வளர்ச்சியடைந்திருப்பதால் உலகில் ஆங்கிலம் தவிர்க்கப்படமுடியாத பொது மொழியாகி விட்டிருக்கிறது.ஆனால் ஜப்பானியர்கள் அதிலும் சற்று வித்தியாசமானவர்களாக இருக்கிறார்கள். ஆங்கிலத்தை ஜப்பானியர்கள் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. ஆரம்பக்கல்வி முதல் கொண்டு உயர் பட்டப்படிப்புகள் வரை அந்த நாட்டு மாணவர்கள் ஜப்பானிய மொழியிலேயே கல்வி கற்கிறார்கள். உயர் அதிகார அரசியல் பதவிகளில் இருப்பவர்கள் முதற்கொண்டு சாதாரண பிரஜைகள் வரை எப்போதுமே தங்களது சொந்த மொழியிலேயே பேசுகிறார்கள்.

ஆங்கிலம் தங்களுக்குத் தேவையில்லை யென்று கருதி அதைப் புறக்கணித்து விட்டு தாய்மொழியில் முன்னேறிக் காட்டியவர்கள் ஜப்பானியர்கள். அமெரிக்கா ,பிரிட்டன் போன்ற ஆங்கிலேய நாடுகள் ஜப்பான் மீது அணுகுண்டுகளை வீசி பேரழிவை ஏற்படுத்தியமையால் ஏற்பட்ட வெறுப்பும் ஜப்பானியர்கள் ஆங்கில மொழியை அங்கீகரிக்காமல் விட்டமைக்கு ஒரு காரணம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்த நாட்டுக்குச் சென்று ஒரு வாரம் அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிடுவதற்கு சமீபத்தில் வாய்ப்புக் கிடைத்தது. 'சமாதான மேம்பாட்டுப் பயணம் (Peace promotion tour) என்ற திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து ஐவர் ஜப்பானுக்குச் சென்றிருந்தோம். இலங்கை மற்றும் ஜப்பான் நாடுகளுக்கிடையில் கடந்த 2002 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் பிரகாரம் வருடாந்தம் இங்கிருந்து ஜப்பானுக்கு ஒரு குழு சென்று வருகிறது. இம்முறை அந்தக் குழுவில் கிழக்கு மாகாண சபையின் உதவிச் செயலாளராகப் பணியாற்றும் கருணாகரன், அம்பாறையைச் சேர்ந்த திட்டமிடல் அலுவலர் சிவயகுமார், வவுனியாவில் ஐ.நா. நிறுவனத்தில் பணியாற்றும் குரூஸ், கொழும்பில் 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்காக பணியாற்றும் ரங்க (சிங்களநண்பர்) ஆகியோருடன் நானும் இடம்பெற்றிருந்தேன். இங்கிருந்து புறப்பட்டு மீண்டும் திரும்பி வரும் வரைக்குமான அத்தனை செலவுகளையும் ஜப்பானிய அரசு பொறுப்பேற்றிருந்தது.


டோக்கியோ நகரின் ஒரு தோற்றம்

கட்டுநாயக்காவிலிருந்து சிங்கப்பூர் சென்று அங்கிருந்து ஜப்பான் தலைநகர் டோக்கியோவிலுள்ள நரிட்டா (Narita) சர்வதேச விமான நிலையத்தை மாலை 6 மணியளவில் அடைந்தோம். அங்கு நடுத்தர வயது மதிக்கத்தக்க ஜப்பானியப் பெண் ஒருவர் எங்களை வரவேற்றார். வெளியில் கடும் குளிர். குளிரைத் தாங்கக் கூடிய உடைகளை அளித்திருந்தாலும் எங்களால் தாங்க முடியவில்லை. அங்கு எங்களை ஏற்றிச் செல்லவெனத் தயாராக இருந்த வாகனத்தில் ஏறிக்கொண்டோம். வாகனம் புறப்பட்டதும் தன்னை அறிமுகப்படுத்தினார் அந்த ஜப்பானிய பெண். ''எனது பெயர் ஒகா (Oka) உங்களைச் சந்தித்ததில் எனக்கு மகிழ்ச்சி. நீங்கள் இங்கு தங்கியிருக்கும் ஒரு வாரத்துக்கும் உங்களுக்கான வழிகாட்டியாக (guide) நான் செயற்படுவேன்'' என்றார். நாங்களும் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டோம். விமான நிலையத்திலிருந்து நாங்கள் தங்குவதற்கான ஹோட்டலுக்குச் செல்ல ஒரு மணித்தியாலம் எடுத்தது.

''உங்களிடம் தரப்பட்ட நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டபடி சகல விடயங்களும் நேரம் தவறாமல் நடக்கும். ஜப்பானியர்களுக்கு நேரம் மிகவும் முக்கியமானது. எந்த நிகழ்வாக இருந்தாலும் அவர்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு 10 நிமிடங்கள் முன்னதாகவே அந்தந்த இடங்களில் தயாராக இருப்பார்கள். எனவே நீங்களும் நேரம் தவறக்கூடாது'' என்று முதலாவது குண்டைத் தூக்கிப் போட்டார் ஒகா. அந்தப் பழக்கம்தான் நம் நாட்டில் இல்லையே!

**பெயருக்குப் பின்னால் 'சன்'!**

ஜப்பானியர்களிடம் விசித்திரமான சில வழக்கங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று என்னவென்றால் யாரையாவது பெயர் சொல்லி அழைக்கும்போது அவரின் பெயருக்குப் பின்னால் 'சன்' என்ற சொல்லையும் சேர்த்துத்தான் அழைப்பார்களாம். பெயருடன் 'சன்' சேரும் போது அழைப்பதற்கு இலகுவாக இருக்குமாம். அதிலும் வெளிநாட்டவர்களுக்கு இது கொஞ்சம் வித்தியாசம். பெயரின் முதல் இரு எழுத்துக்களை மாத்திரம் எடுத்து, அதற்குப் பின்னால் 'சன்' சேர்த்து அழைப்பார்களாம். கருணாகரன் 'கருசன்' ஆகினார். இதுபோலவே எல்லோருக்கும் பெயர்கள் மாறின.

டோக்கியோ மத்தியில் இருந்த 'ஷிபா பார்க் ஹோட்டல்' (Shipa park hotel) என்ற விடுதியில் எமது வாகனம் நின்றது. அந்த ஆடம்பர ஹோட்டலில் எங்களுக்கு தனித்தனி அறைகள் ஏற்கனவே முற்பதிவு செய்யப்பட்டிருந்தன. அங்கு எங்களுக்கான இரவு உணவு மற்றும் ஏனைய வசதிகளைச் செய்துவிட்டு மறுநாள் காலையில் வருவதாகக் கூறிவிட்டுப் புறப்பட்டார் ஒகா.

மறுநாள் காலையில் 'கோட்சூட்' அணிந்து வரவேற்பறையில் காத்திருந்தோம். குறித்த நேரத்துக்கு அங்கு வந்து சேர்ந்தார் ஒகா. எங்களைப் பார்த்ததும் ''நேற்று நீங்கள் எல்லோரும் அழகாக இருந்தீர்கள். ஆனால் இன்று மிகவும் அழகாக இருக்கிறீர்கள்'' என்றார். பொய்யைச் சொல்லியாவது மற்றவர்களை குஷிப் படுத்த வேண்டும் என்ற ஜப்பானியர்களின் 'ரெக்னிக்' மிகமிக அழகாக இருந்தது.

காலை 10 மணிக்கு வெளிநாட்டு அமைச்சின் அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தை அடைந்தோம். அங்கு எம்மை வரவேற்று கலந்துரையாடுவதற்காகக் காத்திருந்தார் கென்ஜி மியாட்டா(Kenji Miyata) தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு ஆகிய நாடுகளுக்கான வெளிவிவகார அலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர். இலங்கையில் உள்ள ஜப்பான் தூதரகத்தில் சுமார் 10 வருடங்களுக்கு மேல் பணியாற்றியுள்ளார். அப்பொழுது சில வருடங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது மேற்படிப்பையும் முடித்துவிட்டார். சிங்களம் அவருக்கு அத்துப்படி. சரளமாகப் பேசு வாராம். தமிழ் படிக்க முடியவில்லை என்று சொல்லி வருத்தப்பட்டார். சுமார் 20 நிமிடங்கள் எங்களோடு உரையாடி எங்களது ஒருவாரகால நிகழ்ச்சி நிரல் தொடர்பாகவும் விரிவாக விளக்கம் தந்துவிட்டு மீண்டும் மறுநாள் எங்களை சந்திப்பார் என்று சொல்லி அனுப்பி வைத்தார்.


இவர்தான் ஓகா

**இலங்கைத் தூதரகம்**

அங்கிருந்து நேராக ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்குப் போனோம். நல்ல அழகான சூழலில் நான்கு மாடிக்கட்டடத்தில் அமைந்திருந்தது தூதரகம். தற்காலிகமாக பதில் தூதராகக் கடமையாற்றுகிறார் எசல வீரக்கோன். வரவேற்பு அறையில் சிங்கள இளைஞர் ஒருவர் இருந்தார். அவர் எங்களை அழைத்து உட்காரவைத்தார். பதில் தூதரையும் ஏனைய அதிகாரிகளையும் நான்காவது மாடியில் சந்திப்பதற்கு ஏற்பாடாகியிருந்தது.

**அழகான ஆச்சரியம்!**

அங்கு பணிபுரியும் ஜப்பானிய யுவதி ஒருவர் எங்களை நான்காவது மாடிக்கு அழைத்துப் போவதற்காக வந்திருந்தார். அங்குள்ள 'லிப்டில்' ஒரே தடவையில் ஆகக் கூடுதலாக ஐந்து பேர் மட்டுமே செல்ல முடியும். எனவே எங்கள் அனைவரையும் லிப்டில் ஏற்றிவிட்டு அந்த யுவதி ''நான் படியில் ஏறிவருகிறேன் நீங்கள் நாலாம் மாடிக்கு லிப்டில் வாருங்கள்'' என்று கூறிவிட்டு மறைந்துவிட்டார். சுமார் 10 செக்கன்களில் 'லிப்ட்' நான்காம் மாடியில் போய் நின்றது. லிப்டின் கதவு திறக்கப்பட்டது. அங்கு எங்களை வரவேற்பதற்கு ஓர் 'அழகான ஆச்சரியம்' தயாராக நின்றது. எங்களால் நம்பவே முடியவில்லை! எங்களை லிப்டில் ஏற்றிய யுவதி லிப்ட் மேலே வருவதற்குள் - சுமார் 10 செக்கன்களில் - நான்கு மாடி தூரத்துக்கு படியேறி வேகமாக ஓடி வந்து லிப்ற் வாசலில் நின்று 'வெல்கம்' என்கிறார். மூச்சு வாங்கக் கூட இல்லை! தங்களுடைய நாடு இந்த வேகத்தில் தான் சளைக்காமல் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை எங்களுக்கு சைகையால் உணர்த்தினாள் போலும் அந்த இளநங்கை.

(பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகுமுக மாணவரை....

*(5ஆம் பக்கத் தொடர்ச்சி)*

எனும் சிறப்பு அம்மாணவனின் ஒழுக்க சீலத்தாலும் அர்ப்பணிப்பான சேவையாலும் மட்டுமே பெறப்பட வேண்டும்.மாறாக இச் சிறப்புக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை யாரும் அனுமதிக்க முடியாது.

சமூக சீர்கேடு என்ற வகையில் நீதிமன்றத்தில் நிறுத்தப்படும் பல்கலைக்கழக மாணவர் தொடர்ந்து கற்கும் தகுதியை சட்டரீதியாக இழந்துவிடுவதால் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ள முடியாத இயல்புள்ள ஒருவர் பட்டதாரியாவது தடுக்கப்பட்டு சமூக நன்மை விளையும். எனவே பகிடிவதையிலீடுபடும் முதுநிலை மாணவரை, குறிப்பாக மருத்துவ மாணவரைப்பற்றி அநாமதேயக்கடிதம் எழுதுவதை விட்டு அவர்களை கையும் களவுமாகப் பிடித்துக் காவல்துறை மூலம் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவதே வரவேற்கத்தக்கது.

மேலும் இனிவரும் காலங்களில் மருத்துவ புகுமுக மாணவரின் முதல்நாள் மருத்துவ பீடப்பிரவேசத்தின் போது அவர்களின் பெற்றோரில் ஒருவரையாவது அழைத்துவர வேண்டுகிறேன். பெற்றோருக்கு மருத்துவக் கல்வி பற்றியும் மாணவரின் கட்டுப்பாடுகள் பற்றியும் எடுத்துக் கூறி, சமூக ரீதியான விழிப்புக்கு வழிவகுக்க வேண்டும் என மருத்துவ பீடச்சபை முடிவெடுத்துள்ளது. மருத்துவ பீடச்செயற்பாடுகளுக்கு பெற்றோரின் ஆக்கப்பூர்வமான பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது தற்கால நடைமுறையாக பல பல்கலைக்கழகங்களில் காணப்படுகின்றது.

இந்த வகையில் விரும்பத்தகாத பகிடிவதைகளைத் தடுப்பதற்கும் புத்திபேதலித்து, அதிகார வெறிபிடித்து அலையும் முதுநிலை மாணவரை இனங்கண்டு சிகிச்சையளிக்க அல்லது குற்றமிழைப்போரைத் தண்டிக்க பொதுமக்களும் பெற்றோரும் முன்வர வேண்டுகிறேன். பாதிப்புக்குள்ளாகும் புகுமுக மாணவரோ அவரது பெற்றோரோ என்னை அல்லது மருத்துவ பீட மாணவ ஆலோசகரை அல்லது எந்த ஒரு மருத்துவபீட விரிவுரையாளரை நாடி ஆலோசனை பெறலாம். ஏதாவது முறைப்பாடு செய்ய விரும்புவோர் தமது அடையாளத்தையும் தக்க சான்றுகளையும் நிர்வாகத்துக்கு வெளிப்படுத்த வேண்டியது அவசியம். அவ்வாறு செய்யப்படும் முறைப்பாட்டின்மீது ஏற்ற நடவடிக்கை எடுப்பதோடு அவரின் சம்மதம் இல்லாமல் ஏனையோருக்கு அவரது அடையாளம் வெளிப்படுத்தப்பட மாட்டாது எனவும் உறுதியளிக்கிறேன்.

# நல்ல ஆயனின் பணியை அகிலத்தில் தொடர்வோம்

அது ஒரு மேய்ச்சல் வெளி. ஆட்டுமந்தைகள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன. அந்த மந்தையின் உரிமையாளர் கூலிக்கு ஒரு மேய்ப்பனை அமர்த்தியிருந்தான். அவன் ஆடுகளை புல்வெளிகளுக்கும் நீரோடைகளுக்கும் அழைத்து செல்வதில்லை. மந்தையின் பசியாற்ற நினைக்காது தான் அவற்றால் பசியாற எண்ணினான். ஒவ்வொன்றாக விற்று பணம் சேர்த்தான். காட்டு விலங்குகளும், திருடர்களும் மந்தையை சூறையாடிய போது ஒளிந்து கொண்டான். ஆடுகள் அழிந்து குறைந்து கொண்டிருந்தன.

இதையறிந்த உரிமையாளரோ பொறுப்பற்ற மேய்ப்பனை நீக்கிவிட்டு புதிய ஆயனிடம் மந்தையை ஒப்படைத்தான். அவன் பசும் புல் வெளிகளிலும் தெளிந்த நீரோடைகளிலும் உணவூட்டி சொந்தப் பிள்ளைகள் போல் பராமரித்து வந்தான். அவையும் ஆயனது குரலுக்குச் செவிசாய்த்து மகிழ்ந்திருந்தன. மந்தை உரிமையாளரிடம் கொண்டுள்ள அன்பை, உறவை ஆடுகளிடமும் பகிர்ந்து வந்தான் அந்த நல்ல ஆயன்.

ஒருநாள் அந்த மந்தையைச் சிதறடிக்க சாத்தான் போல ஒரு எதிரி நுழைந்தான். மந்தைக்கு கவசமாக நின்று எதிர்ப்பை எதிர் கொண்டான் அந்த ஆயன். நல்ல ஆயன் நானே ஆடுகள் நிறைவாழ்வைப் பெறும் பொருட்டு என்னுயிரையே கொடுக்கிறேன் என்று தன்னை முழுவதும் மந்தைக்காக அர்ப்பணித்தான்.




இறைவன் படைத்த மக்கள் இறைவனை மறந்து அலகையின் வழிகாட்டலில் தடுமாறி நின்றார்கள். அவர்களின் வாழ்வு கேள்விக்குறியானபோது இறைமகன் இயேசு மீட்புத் திட்டத்தை தம் தோளில் ஏற்றார். அனைவரையும் அரவணைத்து, மன்னித்து, அன்பையே ஆயுதமாக்கி நல்வழிகாட்டினார். அனைவரின் வாழ்வுக்காகவும் நல்ல ஆயனான அவரே பலியானார். தலைமைத்துவத்தின் பொறுப்புக்கும் அர்ப்பணிப்புக்கும் மேல்வரிச் சட்டமாக விளங்கினார். ஆடுகளுக்காக உயிரைக்கொடுக்கும் நல்ல ஆயனானார்.

இன்றைய காலகட்டத்தில் தலைமைத்துவங்களின் செயற்பாடும், நோக்கங்களும் எந்த அளவுக்கு தூய்மையானதாக இருக்கின்றன? மக்களுக்கான, பொது நலனுக்கான அர்ப்பணிப்பு காணப்படுகிறதா? உண்மைக்கும், நீதிக்கும் குரல் கொடுக்க மறுப்பவர்கள் மக்களை வழிநடத்தும் நல்ல ஆயன் என்று சொல்ல முடியுமா?

எனவே சமூகத்திலும், பொதுப்பணி வாழ்விலும், பதவி நிலைகளிலும் எமது செயற்பாடுகள் அக்கறையுள்ள ஆயனைப் போல் இருக்கட்டும். மேய்ப்பன் - மந்தை உறவு பொதுவாழ்வில் மிளிரட்டும். இறை அழைத்தல் பெற்ற கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகிய நாம் ஆற்றும் பணிகள் கிறிஸ்துவின் மேய்ப்புப்பணியின் தொடர்ச்சியே. நல்ல ஆயனான இயேசுவின் குரல் எமது சொல்லிலும், செயலிலும், சிந்தையிலும் வெளிப்படட்டும்.

**எஸ்.போசுதாஸ்,** கொழும்புத்துறை.


## மாபிள் வகைகள் மலிவு விற்பனை

இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர மாபிள் வகைகள், கொமட் செட், சிங் வகைகள், பிளாஸ்ரிக் கதவு வகைகள், பைப் வகைகள், மரஅடைப்புகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட 'DUKE' பெயின்ற் வகைகள் என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள.

**ஸ்ரார் செரமிக்ஸ்**

இல.05, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

*021- 5672061, 077 7578277- ராஜா*

(இ/567231)



## 30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி

ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்

பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.




10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று

Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை

Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லாம் வழங்கப்படும்.

எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.

UNION EDUCATIONAL INSTITUTE

P.O. BOX 143, KANDY, SRI LANKA. Call: 0817 918 981 / 0773 123 523


## அண்மையில் புனரமைக்கப்பட்ட வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில்

யாழ்ப்பாணம், மே 2

காரைநகர் பிரதேசத்தில் அண்மையில் புனரமைக்கப்பட்ட பல வீதிகள் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

காரைநகர்ப் பிரதேச சபைக்குட்பட்ட பல வீதிகள் அண்மைக்காலமாகப் புனரமைக்கப்பட்ட போதிலும் அவை சீராகப் புனரமைக்கப்படாமையால் அந்த வீதிகள் ஊடாகப் போக்குவரத்துச் செய்யும் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதிகள் புனரமைப்பிற்காக கொட்டப்பட்ட கற்கள், மண் என்பன சீராகப் பரவப்பட்டு உருளை போடப்படாமையாலே இவ்வாறு சீரற்றுக் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

நாவலடிக் கேணி வீதி, காரை மத்தி வீதிகள் உள்ளிட்ட பல வீதிகள் சீரற்ற முறையில் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை மீண்டும் சீராகப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பல தடவை கள் பிரஸ்தாபிக்கப் பட்டும் பலன் ஏதும் இல்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (50-250)

## தேர்த்திருவிழாவில் நகைகள் திருட்டு

கைதடி,மே 2

தேர்த்திருவிழாவிற்குச் சென்ற பக்தர்களின் தங்க நகைகள் மாயமான சம்பவம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை கைதடியில் இடம்பெற்றுள்ளது.

கைதடிப் பிள்ளையார் கோயில் திருவிழாவிற்காக பெருமளவு பக்தர்கள் ஆலயச்சூழலில் திரண்டு நின்று சுவாமியைத் தரிசித்துக் கொண்டிருந்தவேளை தம் கைவரிசையைக் காட்டிய திருடர்கள் பக்தர்களின் தங்க நகைகளை அபகரித்ததாகக் கூறப்படுகின்றது.

மூன்று பெண்களின் பெறுமதிமிக்க நகைகளே இவ்வாறு திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(04-288)


## கணபதி துணை

ஊர்காவற்றுறை - புளியங்கூடல்

## இந்தன் முத்து விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2010

**மஹாகணபதி ஹோமம்:-** 03.05.2010 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு

**கொடியேற்றம்:** 04.05.2010 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு

**தேர்த்திருவிழா:** 12.05.2010 புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு

**தீர்த்தத்திருவிழா:** 13.05.2010 வியாழக்கிழமை மு.ப. 10மணிக்கு

**ஆலய பரிபாலன சபையினர்.**

(97645)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் வைரமுத்து கந்தலிங்கம்**

தோற்றம்
20★07★1941

மறைவு
13★05★2009

எங்கள் இதய தெய்வமே! தன் அடியை இருட்டாக்கி
ஒளியை பரவவிடும் விளக்கைப் போல உங்களை இருட்டாக்கி
எங்கள் வாழ்வை ஒளிரவிட்ட எங்கள் தெய்வமே!
ஓராண்டு கடந்தாலும் என்ன இன்னும் ஓராயிரம் ஆண்டு கடந்தாலும்
எங்கள் எண்ணங்களில் என்றென்றும் ஒளி விடுவீர்கள்

*உங்கள் பாசத்தால் வாடும்:*
**குடும்பத்தினர்.**

*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.* (97643)



## யாழ். - கொழும்பு வான் சேவை

உங்கள் இல்லங்களில் ஏற்றி உரிய இடங்களில் சேர்ப்போம். தனிநபர் கட்டணம் 1000/= மட்டும்.

Tel: 0777199 319, 0777 199 352, 077 9770 027



## பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனை

| | | |
|---|---|---|
| கார் | | |
| 1. புரோடன் வீரா | HQ-7914 | 2000 |
| 2. மிட்சுபிசி வேகன் | 11-0139 | 1976 |
| வான் | | |
| 3. டோயோடா ஹயிஏஸ் | 30-0296 | 1980 |
| 4. டோயோடா எல்எச் 20 | 40-3881 | 1981 |
| 5. இசுசு எல்ப் ரூட் | 61-2025 | 1986 |
| லொறி / ட்ரக் / டிப்பர் | | |
| 6. ஹயிஉன்டாயி ட்ரக் | LC-5917 | 2002 |
| 7. டாடா 1210 லொறி | 26-6117 | 1979 |
| 8. இசுசு புல்பொடி லொறி | 27-5332 | 1980 |
| 9. அசோக் லெலன்ட லொறி | 26-1332 | 1978 |
| 10.மஸ்டா புல்பொடி லொறி | 227-1035 | 1993 |
| 11.இசுசு லொறி | 27-2817 | 1976 |
| 12.இசுசு 14 1/2 ட்ரக் | 41- 5264 | 1981 |
| 13.நிசான் கெரவன் ட்ரக் | 29-4626 | 1980 |
| 14.இசுசு 10 1/2 | 28-6505 | 1978 |
| பஸ் | | |
| 15.இசூசு ஜர்னி கே | 61-0333 | 1983 |
| 16.இசூசு டீ ஆர் பி | 60-1304 | 1981 |
| 17.டீமோ | 61-8550 | 1993 |
| த்ரீவிலர் | | |
| 18.சன்மோ | QG-5973 | 2006 |
| 19.எல்பா | QC-2328 | 2005 |
| 20.எல்பா | QC-9381 | 2005 |
| மோட்டர் பயிக் | | |
| 21.யமஹா | TW-4304 | 2007 |

ஞாயிறு தவிர்ந்த தினமும் காலை 9மணி முதல் மாலை 5மணி வரை பார்வையிடலாம்

பிரதி பொது முகாமையாளர் (அறவிடுதல்)
ஏசியன் பினான்ஸ் லிமிட்டட் (குருணாகல் வாகனப் பிரிவு)
186, புத்தளம் வீதி, குருணாகல்.

0722-352841, 0727-972000, 0722-352854



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மெய்ப்படுமா அந்த வாக்குறுதி?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினர் வசம் உள்ள காணிகளிலிருந்து அவர்கள் படிப்படியாக விலகுவர். இவ்வாறு தெரிவித்துள்ளார் - உறுதிமொழி வழங்கியுள்ளார் - பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. நேற்றுமுன்தினம் இங்கு விஜயம் செய்திருந்த வேளை அவர் இதனைக் கூறிச்சென்றிருக்கிறார்.

கடந்த சுமார் பதினைந்து வருடங்களாக, குடாநாட்டைச் சேர்ந்த மக்கள் தமது காணிகளையும் - வீடுகளையும் '' பறிகொடுத்து'' எங்கெங்கோ எல்லாம் தமது காலத்தைப் போக்குகிறார்கள். சொல்லொணாக் கஷ்டங்களுடன் அவலப்படுகிறார்கள்.

தமது சொந்த நிலங்களுக்கும் வீடுகளுக்கும் திரும்பச் செல்லலாம் என்று இப்போதாவது தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தகவல் அல்லது உறுதிமொழி அவர்களுக்கு இனிப்பாக இருக்கும் என்பது உண்மையே. ஆனால் பாதுகாப்புச் செயலாளரின் கூற்று எப்போது நடைமுறைக்கு வரும் என்பதே பென்னம்பெரிய கேள்விக்குறி.

தமது சொந்தக் காணிகளையும் வீடுகளையும் விட்டு மாற்றார் வீடுகளில் தங்கியிருப்போரின் கஷ்டங்கள் அவர்கள் படும் துன்பங்கள் எழுத்தில் எடுத்தியம்ப முடியாதவை; சொல்லி மாளாதவை. அது சம்பந்தப்பட்டவர்களுக்குத் தான் தெரியும்!

பாதுகாப்புச் செயலாளரின் வாக்குறுதி எப்போது செயல்வடிவம் பெறும் என்பதே, இப்போது அவர்கள் மனங்களில் எழுந்து நிற்கும் சந்தேகம். ஏனெனில் அரசாங்கத் தரப்பின் வாக்குறுதிகள் நடைமுறையாவதற்குப் பல காலம் செல்வது தான் இந்நாட்டில் - அதுவும் தமிழ்ப் பிரதேசங்களில் - எழுதப்படாத நியதி. வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதற்கு அரசாங்கம் விதித்த தவணைகளும் அரைகுறைச் செயற்பாடுகளும் அரசின் இந்த இயல்புக்கு உதாரணங்கள்.

எனவே பாதுகாப்புச் செயலாளரின் வாக்குறுதியும் வழமையான '' பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை'' என்ற நிலைக்கு உள்ளாகக் கூடாது என்று பாதிக்கப்பட்ட மக்கள் நலன் சார்ந்து வலியுறுத்துகிறோம்.

'' பாதுகாப்பு வலயம்'' என்ற காப்புக் கேடயத்தால் குடாநாட்டின் பெரும் பகுதி '' சீல்'' வைக்கப்பட்டு, மக்கள் அவர் தம் சொந்த நிலம், புலங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட கொடுமை அரங்கேறி, ஆண்டுகள் இருபதும் கடந்தோடி விட்டன. அவர்கள் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் குடாநாட்டுக்கு வெளியிலும் சிதறிப் போய் வாழ்க்கையில் எல்லா வகையிலும் நொந்து நொடிந்து போய் இருப்பது பெரும் மனித அவலமாகியுள்ளது.

இது குடாநாட்டின் சகல பிரதேசங்களையும் சேர்ந்த மக்களுக்கும் பொதுவானதாயினும் வலி. வடக்கு மக்களைப் பொறுத்தவரை பெரும் தீயாகக் கனன்றுகொண்டிருக்கிறது.

வலி. வடக்கு மக்களில் பெரும்பாலானோர் குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களில், கிராமங்களில் கடந்த இருபது வருடங்களாக வாழ்ந்து வருகிறார்கள். அதனால் அந்தக் கிராமங்களுக்குப் பழக்கப்பட்டு விட்டார்கள். குறிப்பிட்ட கிராம மக்களுடன் இணைந்து வாழப் பழகி விட்டார்கள்.

ஆனால், குடாநாட்டின் அண்மைக்கால, சுமார் ஒன்பது மாத கால வாழ்க்கை முறை மாற்றங்களால் அவர்கள் பல இடர்களையும் தொந்தரவுகளையும் எதிர்நோக்கும் பரிதாப நிலை தோன்றியுள்ளது. அதற்கு எம்மவர்களே சூத்திரதாரிகள்.

உதாரணமாக-

இங்கு திடீரெனப் புலர்ந்த வேகமான மாற்றத்தினால் இடம் பெயர் வாழ்வு ''நரகமாகி'' விட்டதாக வெதும்புகிறார்கள். கடந்த பல வருடங்களாக இடம் பெயர்ந்தோர் குடியிருந்த வீடுகளின், விவசாய நிலங்களின் சொந்தக்காரர்கள் தமது உடைமைகளை திரும்பத் தருமாறு நிர்ப்பந் திக்கின்றார்கள்.

தமது வீடு வாசல், நிலம், புலம் மிஞ்சியிருந்தால் போதும் என்று கருதி இடம்பெயர்ந்தோருக்கு அவற்றை வழங்கியோர், இப்போது அவர்களை வெளியேற்றுவதற்கு பல தந்திரோபாயங்களைக் கையாளுகின்றார்கள். இத்தகைய ஒரு பின்புலத்தில், கையறுநிலையில் உள்ள மக்களுக்கு தனியார்களின் காணிகளிலிருந்து பாதுகாப்பு வலயங்களில் இருந்து படையினர் விலகுவர் என்ற வாக்குறுதி விரைந்து செயற்படுத்தப்படுவது அவசியம்.

- ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக அகற்றப்பட்ட பல இராணுவ முகாம்களும், காவலரண்களும் மெது மெதுவாக சிறிது சிறிதாக மீண்டும் தெட்டத்தெட்டமாக முளைத்து வருகின்றன. இவை மீண்டும் நெருக்கம் நெருக்கமாகி, மக்களின் இப்போதைய வாழ்க்கை நிலையை பழைய இடத்துக்குக் கொண்டு சென்று விடுமோ என்ற கேள்வியைத் தொட்டு நிற்கிறது.

ஆகவே, பாதுகாப்புச் செயலாளரின் வாக்குறுதி மெய்ப்படுமோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுவது நிச்சயம். இத்தகைய ஒரு நிலை நீக்கப்படுவதற்கு தனியார் காணிகளில் இருந்து படையினரை விலக்குவது என்ற அறிவிப்பு வேகமாக செயல்வடிவம் பெறவேண்டும். இல்லையெனில் அது வெறும் தண்ணீர் மேல் எழுத்தாகி விடும்!

# ஊறணியில் இருந்து இடம்பெயர்ந்தோர் எதிர்காலம் குறித்து ஆராய இன்று கூடுகின்றனர்

யாழ்ப்பாணம், மே 2

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து அல்லற்படுகின்ற வலி.வடக்கின் காங்கேசன்துறை, ஊறணிவாழ் இடம்பெயர்ந்த மக்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு இளவாலை சீந்திப்பந்தலிலுள்ள ஊறணி இடம்பெயர்ந் தோர் முகாமில் நடைபெறுவதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று அங்கு திருநாட் திருப்பலியும், வழிபாடுகளும் நிறைவேற்றுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை எடுத்தே இக்கலந்துரையாடலின் முக்கிய நோக்கமெனவும் அத்துடன் ஆலய புனரமைப்பு மற்றும் இடம்பெயர்ந்தோருக்கான அபிவிருத்தி விடயங்களும் இதில் ஆராயப்படவிருப்பதால், ஊறணியிலிருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்கள் தங்கள் குடும்பத்திலிருந்து ஒருவரேனும் இதில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (1-20)

## காரைநகரில் உள்ளூர் பஸ்சேவை நாளை திங்கள் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், மே 2

காரைநகர் பிரதேசத்தில் உள்ளூர் பஸ்சேவை நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட உள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் காரைநகர்சாலை முகாமையாளர் கே.சி.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

கடந்த இருபது வருடங்களாக இடை நிறுத்தப்பட்ட பாலவோடை, ஊரி பகுதி ஊடான பஸ்சேவையே மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுமார் 5கிலோ மீற்றர் நீளமுடைய இந்த வீதி ஊடான பஸ்சேவை இது வரை இல்லாமையால் பாடசாலை மாணவர்கள், அலுவலர்கள் பொதுமக்கள் எனப்பலரும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர்.

இப்பகுதி மக்களும் பொது அமைப்புக்களும் தொடர்ச்சியாக விடுத்த கோரிக்கையை அடுத்தே இப்பகுதி ஊடான உள்ளூர் பஸ் சேவை நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப் பட உள்ளது.

அத்துடன் ஈழத்துச் சிதம்பரத்துக்கான பஸ்சேவையும் நாளை மறுதினம் ஆரம்பிக்கப்படவுள்ளது. மு.ப. 10 மணிக்கு ஆலயத்தை நோக்கிச் செல்லும் பஸ் அங்கிருந்து பிற்பகல் 2 மணிக்கு மு.ப.நகரை நோக்கிப் புறப்படும் என காரைநகர் சாலை முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (50-250)

## வலிகாமம் மேற்குப் பகுதியில் சிறுதானிய உற்பத்தியில் நாட்டம்

யாழ்ப்பாணம், மே 2

வலிகாமம் பகுதியிலும் - ஏனைய பிரதேசங்களிலும் பெய்துவரும் மழையை பயன்படுத்தி அனைத்து விவசாயிகளும் பயறு - உழுந்து - சணல் - என் பயிரிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அறுவடைக்கு பின்னர் தற்போது காலம் கடந்து குடாநாட்டில் பல பிரதேசங்களில் கடும் மழை பெய்கிறது.

இச் சந்தர்ப்பத்தினை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தி அடுத்த பெரும்போக நெல்விதைப்புக்கு முன்னர் சிறுபயிர் செய்கை மேற் கொண்டு அபிவிருத்தி செய்து பயன் அடையுமாறு யாழ்.மாவட்ட அனைத்து விவசாய சம்மேளனத் தலைவர், செயலாளர்கள் விவசாயிகளைக் கோரியுள்ளார்.

இதேவேளை -

கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தி, கால்நடைகளை கட்டாக்காலியாக விடும் உரிமையாளர் மீது தண்டப்பணம் அறவிடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதல் தடவை வரும் கட்டாக்காலிகள் தண்டப்பணத்துடன் திருப்பி வழங்கப்படும்.

அதே கால்நடை 2 ஆவது தடவை பிடிபடுமாயின் ஏலத்தில் விற்று சம்மேளன நிதியில் சேர்ப்பதற்கு சட்ட ஏற்பாடுகளில் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது என அவர் மேலும்தெரிவித்தார். (1-302)

## நான்கு வைத்திய அதிகாரிகள் பதில் கடமையில் நியமனம்

யாழ்ப்பாணம்.மே 2

யாழ்ப்பாணத்தில் வெற்றிடமாக வுள்ள நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கு பதில் சுகாதார வைத்திய அதிகாரிகளாக சேவை புரிவதற்காக நான்கு வைத்திய அதிகாரிகள் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் கே.இராதேயனும், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் என்.ஜெயக்குமரனும், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் எஸ்.தயாளனும், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் அருணப்பணிய மூர்த்தியும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் எனவும் இவர்களுக்கான பதில் நியமனக் கடிதங்களை வடமாகாண ஆளுநர் அனுப்பி வைத்ததுடன் இவர்கள் இப்பதவிகளைப் பொறுப்பேற்கவுள்ளனர் எனவும் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (1-300)

### சியற் அக்கடமியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 2

சியற் அக்கடமி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடத்திய அனிமேஷன் கற்கை நெறிக்கான கருத்தரங்கிலும், பயிற்சிப் பட்டறையிலும் பங்கு பற்றியவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களை இந்த நிகழ்வில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

### புலமைப்பரிசில் ஊக்குவிப்புக்கு மாதிரிப் பரீட்சைகள்

பருத்தித்துறை,மே 2

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக மாதிரிப் பரீட்சைகளை நடத்தவுள்ளது.

மே மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரை 6 மாதிரிப் பரீட்சைகளை நடத்துவதற்கான ஒழுங்குகளை வடமாகாணக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (1-190)

### நாளை முதல் 9ஆம் திகதி வரையில்

# தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரம்; இந்த நாள்களில் நுளம்பை ஒழித்திடுவீர்

யாழ்ப்பாணம்,மே 2

நாடு முழுவதும் தற்போது பருவகால மழை பெய்துவருகிறது. இதனால் டெங்குபரம்பல் ஆபத்து காணப்படுகிறது. இதனைக் கருத்திற் கொண்டு சுகாதார அமைச்சு தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரமாக நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 9ஆம் திகதிவரையான காலத் தைப் பிரகடனம் செய்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று யாழ்.சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கோரியுள்ளார்.

இந்த வாரத்தில் மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள தகவல் வருமாறு:

- ஒவ்வொரு பாடசாலையிலும் சிரமதானப் பணி மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் அழிக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு நிறுவனத்திலும், திணைக்களத்திலும் ஊழியர்களின் பங்களிப்புடன் சிரமதானப்பணி இடம் பெறவேண்டும்.
- ஒவ்வொரு தனியார் கல்வி நிலையமும் உரிமையாளர்களால் உடனடியாகத் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
- பொது இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் உடனடியாகக் கிரமமாகத் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
- மத, வணக்கத்தலங்கள் சம்பந்தப்பட்ட பரிபாலன சபையினரால் பொது மக்களின் ஒத்துழைப்புடன் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
- கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் அபிவிருத்தி சங்கங்கள், சனசமூக நிலையங்கள் தத்தமது கிராம மட்டத்தில் சிரமதானப்பணி மூலம் சுத்திகரிப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
- உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக் கழிவுகளைக் கிரமமாக அகற்றி சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.
- கழிவுநீர் வடிகால்களில் நீர் தேங்காதவாறு தினமும் சுத்திகரிக்கப்பட வேண்டும்.
- வீதியோரங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் உடனடியாகத் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
- ஒவ்வொரு வீட்டு உரிமையாளரும்/ குடியிருப்பாளரும் தத்தமது வீட்டு வளாகத்தில் சுத்திகரிப்பு பணி மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் வேண்டும். (ஒ-1)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 20 | 03.05.2010 |
| | திங்கட்கிழமை |
| திதி | : பஞ்சமி |
| | மாலை 06.21 வரை |
| நட்சத்திரம் : | மூலம் |
| | மு.ப. 07.31 |
| சுபநேரம் | : 11.56-01.26வரை |
| ராகுகாலம் | : 07.26-08.56 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழமை நிலைக்குத் தன்னை மாற்ற முனையும் கிளிநொச்சி

**அண்மையில் கிளிநொச்சி நகருக்கு விஜயம் செய்த அனைத்துலகச் செய்தி நிறுவனமான ஐ.பி.எஸ்சின் செய்தியாளர் எழுதிய இந்தக் கட்டுரை 'புதினப் பலகை' இணையத்தளத்தில் வெளியாகியுள்ளது.**

கிளிநொச்சி நகரில் அமைந்திருக்கும் தேவாலயத்தின் முற்றத்தில் யேசு கிறிஸ்துவினது உருவச் சிலையின் மேற்பகுதி மாத்திரம் விழுந்து கிடக்கிறது. இந்தச் சிலையின் மொத்த உயரம் 20 அடியாக இருந்திருக்கும்.

இந்த உருவச்சிலையின் உடைந்த பகுதிகள் தேவாலய முற்றத்தில் எப்படி வந்தன என எவருக்கும் தெரியாது. ஆனால் அரச படையினர் இதனைக் கொண்டுவந்திருக்கலாம் என தேவாலயத்தின் பிரதான மதகுரு அருளானந்தம் கருதுகிறார்.

சாவுகளையும் அழிவுகளையும் தந்து 25 ஆண்டுகளாகத் தொடர்ந்த கொடூரமான அந்தப் போரை மீள்நினைவுபடுத்தும் ஒன்றாக யேசு கிறிஸ்துவின் தலையற்ற இந்தச் சிலை அமைகிறது என்கிறார் அருளானந்தம்.

'போர்! எதனையும், எவரையும் விட்டுவைக்கவில்லை. அது அனைவருக்கும் கடும் துன்பத்தைத் தந்தது' என தேவாலயத்தின் முற்றத்தில் அமர்ந்தவாறு இந்த மதகுரு தெரிவித்தார்.

அருளானந்தத்தின் இந்த வார்த்தைகள் எந்தளவு உண்மை என்பதை மதகுருமார் தங்கும் விடுதியின் முன்பகுதிச் சுவர் உறுதிப்படுத்தியது.

துப்பாக்கிக் குண்டுகளாலும் எறிகணைச் சிதறல்களாலும் சுவர் சல்லடையாக்கப்பட்டிருக்கிறது. கட்டடத்தின் கூரையைத் தாங்கிநின்ற தீராந்திகள் உட்புறமாக உடைந்து விழுந்திருக்கின்றன.

தேவாலயத்தின் ஒரு பகுதியான இந்தக் கட்டடத்தின் பின்பகுதி வகுப்பறையாக இருந்திருக்க வேண்டும். அதற்கான அடையாளங்களைக் காண முடிகிறது.

இக்கட்டடத்தின் பின் பகுதி முழுவதும் அழிக்கப்பட்டிருக்கிறது. இதனை அண்டியதாக தேவாலயத்தின் புதிய கட்டடம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுக் குறையில் இருக்கிறது. ஆனால் போரின் போது இந்தக் கட்டடமும் சேதமடைந்தே காணப்படுகிறது.

சேதமடைந்த தேவாலயத்தைத் திருத்தியமைப்பதில் பணியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள், தேவாலயத்தின் முன்பகுதியில் வர்ணப் பூச்சு இடம்பெறுகிறது. தேவாலயத்தின் உட்புறத்தே பிரதான மேசைக்குப் பின்புறமாக உள்ள சுவரில் பணியாளர் ஒருவர் சித்திரம் வரைந்து கொண்டிருக்கிறார்.

ஜாவிஸ் தேவாலயத்தைப் போலவே, போர் உக்கிரமடைந்திருந்த காலப்பகுதியில் சண்டைக் களமாகத் திகழ்ந்த கிளிநொச்சி நகரில் பல கட்டடங்களும் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன.

12 மாதங்களின் முன்னர் இந்தத் தேவாலயம் உக்கிர சமர்கள் இடம்பெற்ற போர்க் களத்தின் மத்தியில் காணப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினது அரசியல் மற்றும் நிர்வாக ரீதியான மத்திய நிலையமாக கிளிநொச்சி நகரம் விளங்கியது.

இலங்கையில் தமிழர்களுக்காக வடக்குக் கிழக்குப் பகுதியில் சுதந்திரத் தாயகம் அமைக்கப்படவேண்டும் எனக்கோரி 1980கள் முதல் விடுதலைப் புலிகள் அமைப்பு போராடி வந்தது. இந்தப் போரின் போது 70 ஆயிரம் உயிர்கள் காவுகொள்ளப்பட்டிருக்கின்றன.

இலங்கையை ஆட்சி செய்த ஐந்து அரசுகளுடன் விடுதலைப் புலிகள் அவ்வப்போது மேற்கொண்ட பேச்சுக்கள் அனைத்தும் தோல்வியில் முடிய, மே 2009ஆம் ஆண்டு இலங்கை அரச படையினர் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தோற்கடித்ததைத் தொடர்ந்து இலங்கைத் தீவில் போர் முடிவுக்கு வந்தது.

இதனைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்த முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப்பகுதியைச் சேர்ந்த 2 லட்சத்து 80 ஆயிரம் தமிழ் மக்கள் தங்களது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தார்கள்.

இவ்வாறாக இடம்பெயர்ந்தவர்களில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் பேர் தற்போது தங்களது சொந்தக் கிராமங்களில் மீளவும் குடியேறிவிட்டார்கள்.

'இதுவொரு கடினமான பணி, போர் எங்கும் பரந்திருந்தது, பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்த போரே அனைத்தையும் தீர்மானித்தது. இந்த நிலையில் அமைதியின் பலன்களை அனுபவிப்பதோ அல்லது அமைதியான ஒரு சூழலுக்குத் திடீரென எம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வதோ இலகுவான பணியன்று' எனக் கூறுகிறார் இந்த மதகுரு.

690 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவு நிலத்தில் இன்னமும் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளது என சில தனியார் அமைப்புக்களின் துணையுடன் வன்னிப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியை மேற்கொண்டுவரும் இராணுவத்தின் பொறியியல் பிரிவு கூறுகிறது.

இதுவரைக்கும் ஆயிரம் சதுரக் கிலோமீற்றர் பகுதி நிலப் பகுதியைக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டி ருக்கின்றன என இராணுப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உதய நாணயக்கார தெரிவிக்கிறார்.

வன்னிப்பகுதியில் கடந்த வருடம் கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் தற்போது வரை 15,689 துருப்பெதிர்ப்புக் கண்ணிவெடிகள், 37 வாகனக் கண்ணிவெடிகள் மற்றும் 4,500 வெடிக்காத வெடிபொருள்கள் என்பன கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

'கண்ணிவெடி அபாயம்' என்பதை உணர்த்தும் சிவப்பு வெள்ளையில் மண்டையோட்டு அடையாளமிட்ட குறியீடுகளை வன்னியின் பல பகுதிகளிலும் அவதானிக்க முடிகிறது.

நீண்ட நாள்களின் பின்னர் தங்களது சொந்த வீடுகளுக்குத் திரும்பும் இந்த மக்களுக்கு வாழ்வுக்கான போராட்டம் அங்கு மீண்டும் ஆரம்பிக்கிறது. மக்கள் புதிதாக மீளக் குடியேற்றப்பட்டிருக்கும் இந்தப் பகுதிகளில் வேலை தேடுவது மிகவும் கடினமான பணி.

சிறு வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு அல்லது விவசாயச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கென் மீள்குடியேறும் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வழங்கப்படும் 25,000 ரூபா பணத்தைக் கொண்டே பல குடும்பங்கள் தங்களது வாழ்க்கையை ஓட்டுகின்றன. வன்னியைப் பொறுத்தவரையில் மீன்பிடி மற்றும் விவசாயம் ஆகியவைதான் வாழ்வாதாரத்திற்கான பிரதான தொழில்கள்.

வாழ்வு எந்தளவு கடினமானதாக இருந்தாலும் மீள்குடியேறிய பெரும்பாலான மக்கள் அதற்குத் தயாராகவே இருக்கிறார்கள்.

'சமாதானத்திற்குக் கொடுக்கும் விலை இதுவெனில் நாம் அதற்குத் தயாராகவே உள்ளோம்' என வவுனியா மாவட்டத்தின் ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த ஜோசப் தேவசகாயம் கூறுகிறார்.

ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலைமையுடன் ஒப்பிடும் போது, வேலை தேடுவதும் கண்ணிவெடிகள் நிறைந்திருக்கும் பகுதிகளைத் தவிர்த்து ஏனைய இடங்களில் வசிப்பதும் ஒரு பொருட்டல்ல என்கிறார் அவர்.

'கடவுளே, எங்கும் ஷெல் வீழ்ந்து வெடித்துக்கொண்டிருந்தன. சாவுக்கு அஞ்சி நாங்கள் ஓடிக்கொண்டேயிருந்தோம், எந்த மாற்றமும் நிகழவில்லை. எந்த நேரமும் எமது உயிர் பறிக்கப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாக பல இரவுகள் நாம் நித்திரை இழந்ததை எண்ணிப் பார்க்கிறேன்' என அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் புளியங்குளம் என்ற கிராமத்தில் இரண்டு பிள்ளைகளின் தாயான 27 வயதுடைய நாகராசா கலையமுதா சிறிய ஓலைக் குடிசையில் வசித்து வருகிறாள்.

'மீள்குடியேறிவரும் மக்கள் மத்தியில் நான் கூலி வேலை செய்து வருகிறேன். உறுதியான, நிரந்தரமான வேலை எனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நான் இருக்கிறேன்' என்கிறாள் அவள்.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பைக் கொண்டிருந்தார் என்ற சந்தேகத்தின் பெயரில் இவரது கணவன் அரச படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார். 'எனது கணவர் விரைவில் விடுவிக்கப்படுவார், அதன் பின்னர் எங்களது வாழ்க்கையை நாம் திட்டமிடலாம் என்ற எண்ணத்தில் நான் இருக்கிறேன்' என கலையமுதா கூறுகிறார்.

தடுப்பிலிருந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் ஆயிரத்து 800 பேர் இதுவரைக்கும் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இன்னமும் 10 ஆயிரம் பேர் தடுப்பு முகாம்களில் தொடர்ந்தும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களைப் படிப்படியாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என அரசு கூறுகிறது.

2006ஆம் ஆண்டுக்கும் 2009ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது நாட்டினது ஏனைய பகுதியிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மக்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

*தமிழாக்கம்:* **தி.வண்ணமதி**

யாழ்.-கண்டி நெடுஞ்சாலை மீண்டும் திறக்கப்பட்டிருக்கும் நிலையில் நாட்டினது சிறுபான்மைத் தமிழர்களின் கலாசார மற்றும் அரசியல் மையமாக விளங்கும் யாழ்ப்பாணம் படிப்படியாக வழமைக்குத் திரும்பி வருகிறது.

'பாருங்கள், மக்கள் எங்கும் பரந்திருக்கிறார்கள், ஊரடங்குச் சட்டம் இல்லை, சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது, குடாநாட்டில் பணப்புழக்கம் அதிகரித்துவிட்டது' என யாழ் நகரக் கடையொன்றில் பணிபுரியும் ஜெகன் கூறுகிறார்.

இயல்புநிலைக்குத் திரும்புவது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மதகுரு அருளானந்தம் 'இயல்புநிலைக் குத் திரும்புவது கடினமானதாகவே இருக்கும், இயல்பான ஒரு சூழல் ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது' என்கிறார்.

'நீண்ட பல ஆண்டுகளாகத் தொடர்ந்த போர் தந்த மன உளைச்சலை ஒரு நாளில் போக்கிவிடமுடியாது. இதற்குப் பல ஆண்டுகள் ஆகும். ஆனால் உயிரைக் காப்பதற்கு ஓடவேண்டும் என்ற எந்த அச்சமுமின்றி நாங்கள் இப்போது நிம்மதியாக நித்திரைக்குச் செல்கிறோம்' என்றார் அருளானந்தம்.

நன்றி: 'புதினப் பலகை'

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் கோலாகலம்

ICC WORLD TWENTY20 WEST INDIES 2010

30.04.2010 – 16.05.2010

## ஆப்கானை ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டது இந்திய அணி!

செயின்ட் லூசியா,மே 2

அறிமுக ஆப்பானிஸ்தான் அணியை 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது இந்திய அணி.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் ஐ.சி.சியின் ருவென்ரி - 20 உலகக் கிண்ணப் போட்டிகளின் மூன்றாவது ஆட்டம் நேற்றிரவு நடைபெற்றது.

இவ்வாட்டத்தில் முதன்முதலாக சர்வதேசப் போட்டிகளில் கலந்துகொள்ளும் ஆப்கானிஸ்தானும் இந்தியாவும் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட வேண்டிய ஆப்கானிஸ்தான் அணியின் ஆரம்ப வீரர் களாக நூர் அலியும் ஹரீம் ஸடீக்கும் களமிறங்கினர். ஹரீம் ஓட்டம் எதனையும் பெறாமல் நெஹ்ராவின் பந்தில் அணித் தலைவர் டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த முஹமட் ஷக் ஷட் 6 ஓட்டங்களுனும் நவரஷ் மன்கல் 5 ஓட்டங்களுடன் ஜலேஜாவின் பந்திலும் ஆட்டமிழந்தனர்.

மறுபுறத்தில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த நூர் அலியுடன் ஜோடி சேர்ந்த ஸ்ரனிக்ஷை அபாரமாக ஆடினார். இந்நிலையில் தனது 4 பௌண்டறிகளுடன் முதலாவது அரைச்சதத்தைப் பெற்ற நூர் அலி நெஹ்ராவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

முஹமட் நபி ஓட்டம் எதனையும் பெறமல் ஆட்டமிழக்க 3 சிக்ஸர்களுடன் 30 ஓட்டங்களைப் பெற்ற ஸ்ரனிக்ஷை பிரவீன் குமாரின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து இந்திய அணிக்கு வெற்றி இலக்காக 116 ஓட்டங்களை நிர்ணயித்தது.

பந்து வீச்சில் நெஹ்ரா 3 விக்கெட் டுக்களையும் பிரவீன்குமார் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கம்பீரும் ருவென்ரி - 20 போட்டிகளின் அறிமுக வீரர் விஜயும் களமிறங்கினர்.

கம்கீர் 4 ஓட்டங்களுடன் டவால்ட் அஹமட்ஷையின் பந்தில் முஹமட்நபியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த சுரேஸ்ரெய்னா ஒரு சிக்ஸர் ஒரு பௌண்டறியுடன் 18 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய முரளி விஜய் 3 சிக்ஸர்கள் 2 பௌண்ட றிகளுடன் 48 ஓட்டங்களைப்பெற்று ஹமிட் ஹசனின் பந்தில் பெவிலியன் திரும்பினார்.

யுவராஜ்சிங் 23 ஓட்டங்களையும் அணித் தலைவர் டோனி 2 சிக்ஸர்களுடன் 6 பந்துகளில் 15 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர்.இந்திய அணி 14.5 ஓவர்களில் 3 விக் கெட்டுக்களை இழந்து 116 ஓட்டங்களைப்பெற்று வெற்றிபெற்றது.

பந்து வீச்சில் அஹமட்ஷை, ஷென் வாரி, ஹமிட்ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக இந்திய அணியில் 3 விக்கெட்டுக்களைக் கைபற்றிய நெஹ்ரா தெரிவானார். (6)

### இன்றைய ஆட்டங்கள்

| குழு 'சி' | | குழு 'ஏ' |
|---|---|---|
| இந்தியா-தென்னாபிரிக்கா | ICC WORLD TWENTY20 WEST INDIES 2010 | அவுஸ்திரேலியா- பாகிஸ்தான் |
| இடம் : செயின்ட் லூசியா | | இடம் : செயின்ட் லூசியா |
| நேரம் : இரவு 7 மணி | | நேரம்: இரவு 11 மணி |

## சமி, ராம்பௌல் பந்து வீச்சில் அசத்தல்; 70 ஓட்டங்களால் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி

கஜானா,மே 2

மேற்கிந்திய தீவுகள் அயர்லாந்து அணியை 70 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் மேற்கிந்திய தீவுகளில் ஆரம்பமான ஐ.சி.சியின் ருவென்ரி -20 உலகக்கிண்ணப் போட்டிகளின் இரண்டாவது போட்டி அதிகாலை 2.30 மணிக்கு கஜானாவில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பிளீட்சர் - சந்தர்போல் ஜோடி களமிறங்கியது. சந்தர்போல் 2பௌண்டறிகளுடன் 14ஓட்டங்களைப் பெற்று ரங்கீனின் பந்தில் வில்சனிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

பிளிட்சருடன் பிராவோ ஜோடி சேர்ந்தார். பிளிட்சர் 19ஓட்டங்களுடன் ஓபிரைனிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

சர்வன் 24 ஓட்டங்களுடனும் பிராவோ 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த மெனோரஜன் 10, ராம்டின் 01 என ஆட்டமிழக்க சமி பொறுப் பாக ஆடி 2 சிக்ஸர்கள் 2 பௌண்டறிகள் அடங்களாக 30 ஓட்டங்களைப் பெற்றார்.

பொல்லர்ட் 8 ஓட்டங்களுடனும் ராம் பௌல் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். மில்லெர் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் மேற்கிந்திய தீவுகள் 9 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது.

அயர்லாந்து அணி சார்பில் பந்து வீசிய டொக்றெல் 3 விக்கெட்டுக்களையும் ரங்கின் , ஹஷாக், போத்தா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

139 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அயர்லாந்து அணி ராம்பௌளவினதும் சமியினதும் பந்து வீச்சில் விக்கெட்டுக்களை மளமளவென்று இழந்தது.

அயர்லாந்து அணியின் 8 வீரர்கள் ஒன்றை இலக்கத்துடனேயே ஆட்டமிழந்தனர். ஆரம்ப வீரர்களாக அணித் தலைவர் போரெர், பீல்ட், ஸ்ரைலிங் ஆகியோர் களமிறங்கினர். ஸ்ரைனர்லிங் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழக்க போரெர் பீல்ட் 4 ஓட்டங்களுடன் றோச் சின் பந்தில் சமியிடம் பிடிகொடுத்து ஆட் டமிழந்தார்.

ஓபிரைன்(6), ஹஷாக்(2), வில்சன் (17), ஓபிரைன்(9), ஜோன்ஸ்ரன் (5), மூனி (1), ரங்கீன் (1), டொக்றெல் (0) என ஆட்டமிழந்தனர்.

அயர்லாந்து அணி 16.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 68 ஓட்டங்களை பெற்றது.

மேற்கிந்திய தீவுகளின் ராம் பௌல், சமி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக மேற்கிந்திய தீவுகளின் சமி தெரிவானார். ( 6)

### போட்டி இல.01

**2010 ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'உதயன்' நடத்தும் பரிசுப்போட்டி**

1. 2010 உலகக்கிண்ண ருவென்ரி -20 முதலாவது போட்டியின்போது முதலாவது சிக்ஸர் அடித்த வீரர் யார்?

   ..................................

2. முதலாவது ரி-20 உலகக் கிண்ணத்தை வென்ற அணி எது?

   ..................................

3. நளின் கணனி நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் விநியோகம் செய்யப்படும் Branded கணனியின் பெயர் என்ன?

   ..................................

போட்டி இல.1 இல் வெற்றிபெறும் போட்டியாளருக்கு
6000/- பெறுமதியான Eacan Woofer
நளின் கணனி நிறுவனத்தினால் பரிசாக வழங்கப்படும்.




## உலகக் கிண்ணப் பரிசுப் போட்டி

உலகக் கிண்ணத்தை முன்னிட்டு 'உதயன்' பத்திரிகை ஆனது தனது விளம்பரதாரரின் அனுசரணையுடன் தனது வாசகர்களுக்கிடையே நடத்தும் மாபெரும் பரிசுப்போட்டி இன்று முதல் ஆரம்பம்.



**விதிகள்:**

1. நாளாந்தம் ஒரு வெற்றியாளர் தெரிவுசெய்யப்படுவர்.
2. ஒவ்வொரு வெற்றியாளருக்கும் பரிசுப் பொதியானது 1500/- இற்கு மேற்பட்டதாக இருக்கும்.
3. ஒருவர் எத்தனை போட்டிகளிலும் பங்குபற்றலாம்.
4. மேலும் இவற்றுடன் அனைத்துப் போட்டியாளர்களில் இருந்து மூன்று மேலதிக வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர். இவர்களுக்கான பரிசு விபரம்:

★முதலாம் பரிசு 5000/- ★இரண்டாம் பரிசு 3000/-
★மூன்றாம் பரிசு 2000/-

★'உதயன்' பத்திரிகையில் பிரசுரமாகும் கூப்பனில் மட்டுமே விடைகள் அனுப்பப்படவேண்டும்.

★ஒரு போட்டி தொடர்பாக ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்.

★அனைத்துப் போட்டிகளுக்குமான முடிவு திகதி 20.05.2010

★வெற்றிபெற்றவர்களின் விவரம்: தபால் மூலமும் பத்திரிகை வாயிலாகவும் அறிவிக்கப்படும்.

★இப்போட்டி தொடர்பாக நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

**உங்களுக்காக ஒரு சில நிமிடம் !**

வேலைதேடும் பட்டதாரிகளே, இளைஞர்களே, யுவதிகளே கல்விசார் தகைமைகள் இருந்தும் ஆளுமை விருத்தியின்மை, நேர்முகத் தேர்வினை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாத காரணங்களினால் ஏராளமான வேலை வாய்ப்புக்கள் உங்களை விட்டுச்செல்கின்றது. வங்கிகள், தனியார் நிறுவனங்கள் தகுதியான பணியாட்களை எம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றார்கள். எனவே, இன்றே எமது பயிற்சிப்பட்டறையில் இணைந்து எதிர்காலத் தொழில் வாய்ப்பினை உறுதி செய்து கொள்ளுங்கள். பயிற்சிப் பட்டறையில் இணையும் அனைத்து மாணவர்களும் எமது தொழில் வங்கியில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

**British College of Higher Studies**

Tel: 021-2224550, Mobile: 0777222422, 0714299935, 0773501499 web: www.bchs.lk Email:info@bchs.lk

**யாழ். மாநகரிலே...**
**British College of Higher Studies ஏற்பாட்டில்**

வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தர உதவும் பயிற்சிப்பட்டறைகள் (Personality Development Work shops)

உள்ளடக்கம்: நேர்முகத் தேர்வினை எவ்வாறு எதிர்கொள்வது, உரையாடுவது, முகாமைத்துவம், மனிதவளப் பயன்பாடுகள், அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள், ஆங்கில உரையாடற் பயிற்சிகள் என்பன அடங்கலான பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்

சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும்

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இருந்து பங்குபெறும் பட்டதாரிகளுக்குச் சிறந்த கட்டணக் கழிவுடன் குழுக்களாகவும் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்படும்.

பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவரும் எமது தொழில் வங்கியிற் பதியப்பட்டு அதனூடாக நல்ல நிறுவனங்களில் (Bank & Private firms) வேலை வாய்ப்பைப் பெற ஆவன செய்து தரப்படும்.

TCN EXPRESS INTERNATIONAL

**உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை**

★ விரைவு ★ பாதுகாப்பு ★ நம்பகத்தன்மை

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)

குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

திருமுருகன் கொம் நெற்

259, ... (... முன்பாக)
46, ... (... நோ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்

**TCN EXPRESS**
2B, Nelsan Place, Colombo -06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதங்களுடன் அரசியல் நடத்துபவர்கள் மக்களை அச்சுறுத்தி தமது நலன்பேண முயற்சி

## இந்த நிலை நீடித்தால் மீண்டும் இருண்டயுகம் என்றகிறார் ஈ.சரவணபவன்

யாழ்ப்பாணம்,மே2

எமது மக்கள் அச்ச உணர்வுடன் காணப்படுகின்றார்கள். ஆயுதங்களுடன் அரசியல் நடத்துபவர்கள் மக்களை மறைமுகமாக அச்சுறுத்தி தமது நலன்களைத் தொடர்ந்து பேணுவதற்கு முயற்சிக்கின்றார்கள். இந்த நிலை நீடித்தால் குடாநாட்டு மக்கள் மீண்டும் இருண்ட யுகத்திற்குள் தள்ளப்படுவார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நடத்திய மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர்கள் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது- எமது மக்கள் மத்தியில் அச்ச உணர்வு நிலவுவதை அவதானிக்கவும் உணரவும் முடிகிறது. மக்களை அச்சுறுத்தி தமது காரியங்களை சாதிக்க மேற்கூறிய தரப்பினர் துணிகின்றார்கள். கட்டட நிர்மாணப் பணிகளுக் காக 13 ஆயிரம் ரூபாவுக்கு மணல் வாங்கும் நிலைமை உள்ளது. இதன் பின்னணியை மக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள். இதற்கு முடிவுகட்டுவதற்கு மக்களின் ஒத்துழைப்புத் தேவை. இத்தகைய முறைகேடுகளுக்கும், அடாவடித்தனங்களுக்கும் எதிராகக் குரல் கொடுக்க யாழ்.மாநகரசபை சபையின் எமது உறுப்பினர்கள் முன்வந்திருப்பதைப் பாராட்ட வேண்டும். இத்தகைய மக்கள் விரோதச் செயல்கள் குறித்து அரச நிர்வாகத் துறையினர் மௌனிகளாக இருக்கின்றனர்.

எதிர்வரும் மே தினம் மிகச்சிறப்பாக, பெருந்திரளான மக்கள் முன்னிலையில் கொண்டாடப்பட வேண்டும். ஆயுதங்களுடன் நடமாடுபவர்களது ஆயுதங்கள் களையப்பட்டு மக்கள் அச்ச உணர்வு இன்றி மே தினம் போன்ற முக்கிய நிகழ்வுகளில் பங்குபற்றும் நிலைமை ஏற்படுத்தப்படவேண்டும் - என்றார். (அ-14-16)



ஆளும் கட்சியின் மேதினக் கூட்டத்தில் அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்கள் அமர்த்திருப்பதைப் படத்தில் காணலாம்.

## ஹொக்கி சுற்றுப்போட்டி இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், மே02

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை ''உதயன்'' ஊடக அனுசரணையுடன் பல்கலைக்கழக மைதானத்தில் நடத்திவரும் ஹொக்கிச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறுவுள்ளது.

இந்த நிகழ்வில் ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் பி. நாகரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1)

## பிரபாகரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக இனங்காணப்பட்ட சில நாடுகளில் தூதராலயச் சேவைகளுக்கு மூத்த இராணுவ அதிகாரிகளை அமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

விடுதலைப் புலிகள் அமைப்பின் வெளிநாட்டுச் செயற்பாடுகள் தொடர்பாகவும் மற்றும் புலனாய்வுச் செயற்பாடுகள் தொடர்பாகவும் மிகவும் தேர்ச்சி பெற்றுள்ள - அனுபவம் நிறைந்த - இராணுவ அதிகாரிகளே அந்த நாடுகளில் பணிக்கு அமர்த்தப்படவுள்ளனர் - என்றார் கோத்தபாய ராஜபக்ஷ. (ஒ-206)

## ஈழத்தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் நடைபெற்ற தி.மு. கழகத்தின் பொதுச்சபை, இலங்கைத் தமிழரின் அரசியல் தீர்வு குறித்து எடுத்த தீர்மானத்தையும் எடுத்துக்கூறவிருக்கும் கருணாநிதி, இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வை மத்திய அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று கோருவார் - என்றார் இளங்கோவன். (அ-1)

## மேதின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இடம்பெற்றன. பேரணிகள் எவையும் இடம்பெறவில்லை.

ஐ.தே.கட்சி சமய வழிபாடுகளில் மட்டுமே ஈடுபட்டது. கூட்டங்களையோ, பேரணிகளையோ தவிர்த்து சமய வழிபாடுகளுடன் மேதினக் கொண்டாட்டங்களை ஐ.தே.கட்சி முடித்துக் கொண்டது.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக பேரணிகள் தவிர்க்கப்பட்டன. பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாத சூழலிலும் இம்முறையும் ஆளும் கட்சியோ, எதிர்கட்சியோ பேரணிகளை நடத்த முன்வரவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ஒ-1)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டதாக இந்த நவீன நகரை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள் எதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னிலை வகிக்கும் வர்த்தக நிறுவனங்களின் கட்டடத் தொடர்கள், சிறுவர்களுக்கான பூங்காக்கள், வயது வந்தோருக்கான பூங்காக்கள் உள்ளடங்கும் நகர் ஒன்றுக்கு அவசியமான முழுமையான வசதிகளைக் கொண்டு இதனை நிர்மாணிப்பதே அரசின் நோக்கமாகும் என்றும் -

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் இந்த நகரம் நிர்மாணிக்கப்படும் என்றும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது கொழும்பு தெற்குத் துறைமுகத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டுள்ள ஜப்பானிய நிறுவனத்திடமே மேற்படி நகர நிர்மாணப் பணிகளும் கையளிக்கப்படவுள்ளதாகவும் அரசின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு தெற்கு துறைமுக நிர்மாணத்தின்போது அகழ்ந்து அகற்றப்படும் மணலைப் புதிய நகரை நிர்மாணிக்கும் பிரதேசத்தில் கொட்டி நிரப்பும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ-206)

## யுத்தத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களது உளநலன் மேம்படுத்தப்பட்டு, அவர்களது வாழ்க்கை கட்டியெழுப்பப்படுவது தொடர்பாக வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஒ-206)

## அரசாங்கத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தன. அரசின் அபிவிருத்தி மற்றும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை இனிமேலும் எதிர்க்க வேண்டாம் என்று அந்தக்கட்சிகளைக் கேட்டுக் கொள்கின்றோம்.

போர் முடிவுற்ற பின்னர் நடைபெறும் முதலாவது மே தின விழா இதுவாகும். நாட்டின் உழைக்கும் மக்கள் எங்களின் பக்கம். நிற்கிறார்கள்; எங்களுக்கு ஆதரவாக இருக்கின்றார்கள்.

நாடாளுமன்றத்தில் எமக்கு அபரிமிதமான பெரும்பான்மைப் பலத்தை அவர்கள் ஈந்துள்ளார்கள். அவர்களை - உழைக்கும் மக்களை - ஒருபோதும் நாம் கைவிடமாட்டோம் - என்றார்.

அரசாங்கக் கட்சியின் மேதின விழாவில் அமைச்சர்கள் தினேஸ் குணவர்த்தன, காமினி லொக்குகே, விமல்வீரவன்ஸ, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா மற்றும் தொழிற்சங்கங்கள் பலவற்றின் தலைவர்களும் உரை நிகழ்த்தினர்.(அ)


முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை
ஆரம்பம்: 03.05.2010
திங்கள் முதல் வெள்ளிவரை
இணுவில் - 2.30-4.30pm
மானிப்பாய் - 4.15-6.15pm
(97666)

உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற மங்களகரமான நிகழ்வுகளுக்கு ...
திருமண அழைப்பிதழ் காட்சியறை
மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்
Wedding Card Show Room
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 100க்கு மேற்பட்ட பல வர்ண புத்தம்புதிய டிசைன்களுடன் எமது காட்சியறையில் உங்களுக்காக ...
10/= இருந்து
இணையத்தளம் : www.mathicolours.com
15/2B, முருகேசர் லேன், நல்லூர், [முத்திரைச்சந்தி] யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 2229285, 0777 222524

வெளிவந்துவிட்டது
G.C.E. O/L புதியபாடத்திட்டம் 2008 & 2009 பரீட்சை வினாக்களும் விடைகளும்
8 பாடங்கள் இணைந்த தொகுப்பு:
விருப்பத் தேர்வுப் பாடங்கள் (2008 &2009)
★ நடனம் ★ நாடகமும் அரங்கியலும்
★சங்கீதம் ★ மனைப்பொருளியல்
★கத்தோலிக்கத் திருமறை
உயர்கல்வி புலமைசார் ஆசிரிய ஆலோசகர்களின் வழிகாட்டுதற்கமைய புதிய புள்ளியிடல் திட்டத்தில் தயாரிக்கப்பட்ட ஒரேயொரு வெளியீடு.
சகானியா வெளியீடு
Sakaniya Publications
கிடைக்குமிடங்கள்
★அன்னை புத்தகசாலை ★ பூபாலசிங்கம்

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
தமிழ் மொழி மூல வகுப்புகள்
2012 A/L தமிழ், ஆங்கில மொழி மூல புதிய அலகுகள், புதிய பிரிவுகள் ஆரம்பம் - 02.05.2010 ஞாயிறு


| | |
|---|---|
| உயிரியல் பொன்.திவாகரன் | திங், புதன், வியா. - 4.30-5.30pm<br>சனி, ஞாயிறு - 10.30-11.30am |
| இரசாயனவியல் ராஜா | செவ், வியா. - 6.30-7.30am<br>சனி, ஞாயிறு - 3.30-4.30pm |
| இரசாயனவியல் அன்பு | சனி, ஞாயிறு - 9.30-10.30am |
| பௌதீகவியல் செல்வன் | சனி / ஞாயிறு } பிரிவு I - 7 - 8 am<br>பிரிவு II - 4.30 - 5.30pm |
| பௌதீகவியல் அனபாயன் | சனி / ஞாயிறு } 6.30 - 7.30am |
| இணைந்த கணிதம் சிவகரன் | செவ், வியா. - 4.30-5.30pm<br>சனி, ஞாயிறு - 6.15-7.15am |
| இணைந்த கணிதம் ஐங்கரன் | சனி, ஞாயிறு - 8 - 9 am |
| ENGLISH MEDIUM | |
| BIOLOGY KUKANANTHAN | Sat/Sun - 4.30 - 5.30pm |
| C.MATHS SIVAKARAN | Tue/Thu - 3.00 - 4.30 pm<br>Sat/Sun - 10 - 11am |
| PHYSICS SELVAN | Sat/Sun - 3.30 - 4.30pm |
| CHEMISTRY ANPU | Sat/Sun - 6.30 - 7.30pm |
| CHEMISTRY RAJAH | Sat/Sun - 6.30 - 7.30am<br>Tue/Thu - 4.30 - 5.30pm |


(C/567235)

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
பிரிவு 2
அனேக பெற்றோர்கள், மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய பிரிவு
O/L DAYCLASS
(No 1 Super Grade ஆசிரியர் குழு)
ஆரம்பம்: 03.May.2010 திங்கள் 8am
குறிப்பு: 'எமது கல்வி நிறுவனத்தின் தரத்திற்கு கடந்த காலப் பெறுபேறுகள் சான்றாகும்'
(97627)

பொருளியல்
N.B.கஜீதரன்
A/L 2012இற்கான
புதிய பிரிவுகள்
(பிந்தி வந்து சேரும் மாணவருக்கானது)
SHAMROCK
(ஈச்சமோட்டை)
நேர அட்டவணை - அலுவலகத்தில்
(97511)

யாழ் நகரின் No 1 கல்வி நிறுவனம்!
நாவலர்
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.
O/L Day Class
பிரிவு 2
ஆரம்பம்
May 3

விக்னா
கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி றோட், யாழ்.
O/L DAY CLASS
(8.30-2.30)
பிரிவு 4
ஆரம்பம் 3.5.2010 8.30 மணி
பிரிவு 3 ஒரு சில அனுமதிகள் இவ்வருடம்
பிரிவு 6 மட்டுமே
*விடுதி வசதி உண்டு


## மரண அறிவித்தல்

### திருமதி இராஜரட்ணம் பாக்கியம்



பருத்தித்துறை, புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், மணல்தறை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜரட்ணம் பாக்கியம் கடந்த (28.04.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் அறிவித்தபடி இன்று (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது என்பதனையும், நாளை (03.05.2010) திங்கட்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மணற்தறை ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(சி/567245)

தகவல்: கணவர், பிள்ளைகள், மருமக்கள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்02.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org